

தேவனுடைய வார்த்தை

# மாதிரியே இல்லை

# NO EXAMPLE

*J.C. Choate*

ஒன்றைப் பின்பற்றுவதற்கான உதாரணம் அல்லது மாதிரி மிக முக்கிய மான ஒன்றாக இருக்கிறது. நமக்கு ஒன்றைப் பற்றி சொல்லப்படலாம், நாம் ஒன்றை செய்யும்படியாக கட்டளையிடப்படலாம், ஆனால், அதை எப்படிச் செய்வது என்பது பற்றிய உதாரணம் நமக்கு இருக்குமானால், அது நமக்கு முக்கியமானதாக இருக்கும். உதாரணம் ஒரு விஷயத்தை உயிரோட்டமுள்ளதாக மாற்றும், கற்றலை எளிதாக்கும். ஒரு காரியம் செய்யப்படுவதைப் பார்ப்பது, நாமும் அதைச் செய்ய முடியும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தும்.

உதாரணம் அல்லது மாதிரியைப் பற்றி வேத வாக்கியங்கள் பல்வேறு காரியங்களைச் சொல்கின்றன. உதாரணமாக, கிறிஸ்து தம்முடைய சீடர்களு டைய கால்களைக் கழுவித் தாழ்மையைக் காட்டின போது, " நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் " என்று சொன்னார் (யோவான் 13:15). பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர் களிடம் பேசும்போது, முன்பு நடந்தவர்களுடைய பாதையில் நாம் செல்லாதபடி அவர்கள் செய்தது போல நாம் செய்யாமல் இருக்கும்படி முன்பு எழுதப்பட்டவை களெல்லாம் நமக்குத் திருஷ்டாந்தகளாயிருக்கிறது என்று சொன்னார் (1 கொரி. 10:6). அவர் விக்கிரக ஆராதனை, வேசித்தனம், முறுமுறுப்பு போன்றவைகளை குறிப்பிட்டு அவைகளில் ஈடுபட்டவர்கள் எப்படி வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள் என்பதையும் குறிப்பிடுகிறார் (1 கொரி. 10:5). பவுல் தொடர்ந்து இவ்விதமாகச் சொன்னார். " இவைகளெல்லாம் திருஷ்டாந்தகளாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாத படிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன் (1 கொரி. 10:11, 12; யூதா 7). பவுல், பிலிப்பி பட்டணத்து சகோதரர்களை இவ்விதமாக உற்சாகப்படுத்துகிறார். " சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள் " என்று (பிலிப். 3:17). தெசலோனிக் கேயருக்கு எழுதும்போது இவ்விதமாக எழுதுகிறார். " மேலும், சகோதரரே, எங்க ளிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின் படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்கு கட்டளையிடுகிறோம். இன்ன விதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவச மாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும், பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம். உங்கள் மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே

அப்படிச் செய்யாமல் நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டுமென்றே அப்படிச் செய்தோம்" (2 தெச. 3:6,9).

பவுல் இளம் பிரசங்கியான தீமோத்தேயுவுக்கு எழுதும்போது " உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு; நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு " என்று எழுதுகிறார் (1 தீமோ. 4:12). அப்போஸ்தலனாகிய பேதுரு இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார் " என்று சொல்கிறார் (1 பேதுரு 2:21).

கிறிஸ்து தாமே, " ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்" என்று சொல்லியிருக்கிறார் (லூக். 9:23). மேலும், இயேசு " இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது " என்றும் சொல்லியிருக்கிறார் (மத்தேயு 5:16). ஒரு வீட்டில் மகன் தன் தகப்பன் நடப்பதுபோல் நடக்க முயற்சிப்பதையும், ஒரு சிறு பெண் தன் தாயின் மாதிரியைப் பின்பற்றி தன்னுடைய பொம்மையோடு விளையாடுகிற காரியமும் நமக்கு பரிச்சயமானதே. இங்கே உண்மை என்னவென்றால், குழந்தைகள் தங்களுக்கு முன்பாக பெற்றோர்கள் என்ன செய்தார்களோ அது நன்மையாக இருந்தாலும் சரி, தீமையாக இருந்தாலும் சரி அதை அப்படியே செய்து வளருவார்கள். ஏனென்றால், அவர்கள் தங்கள் பெற்றோர்களின் மாதிரியைப் பின்பற்றுகிறார்கள்.

இளைய தலைமுறையினர் பின்பற்றும்படி, அவர்களுக்கு வழிகாட்டியாக நல்ல முன்மாதிரிகள் நமக்கு அவசியப்படும் இந்த நாட்களில், பல காரியங்களில் நாம் நல்ல மாதிரியே இல்லை, இது நாம் துக்கப்படும்படியான ஒரு காரியமாகும். ஆகையால், வாழ்க்கையின் பல பகுதிகளில் இவ்வுலகம் அதன் விளைவுகளை சந்திக்கிறது.

## விவாகமும், விவாகரத்தும்

உதாரணமாக, அமெரிக்காவில் கிட்டத்தட்ட பாதி திருமணங்கள் விவாகரத்தில் போய் முடிகிறதென்கிற உண்மையை நாம் அறிந்திருக்கிறோம். குடும்பம் மிக கொடுமையான முறையில் துண்டாக்கப்படுகிறது. குழந்தைகள் ஏற்கனவே திருமணமாகி, மணமுறிவு ஏற்பட்ட பெற்றோர்களுக்கும், மறுவிவாகம் செய்த பெற்றோர்களுக்கும் தான் பெரும்பாலும் இன்றைய நாட்களில் பிறக்கிறார்கள். இன்னும் சில குழந்தைகள் ஏற்கனவே திருமணமாகி குழந்தைகளைப் பெற்ற பெற்றோர்களுக்குப் பிறக்கிறார்கள், இக்குழந்தைகளுக்கு நல்ல அல்லது சரியான திருமணம் என்றால் என்ன, ஸ்திரமான பெற்றோர்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதைப் பற்றி சரியான மாதிரி இல்லவே இல்லை. இந்த குழந்தைகள் வளர்கிறார்கள், திருமணம் செய்கிறார்கள் மண வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வாக விவாகரத்தைத் தெரிந்து கொள்கிறார்கள்.

எவ்வித பிரச்சனைகளாலும் பாதிக்கப்படாத திருமணங்களில் கூட தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பெற்றோர்கள் வேலையில் அதிக நேரத்தை செலவு செய்ய வேண்டியதாயிருக்கிறது. அத்தகைய குடும்பங்களில்

பிள்ளைகள் உண்மையில் தானாகவே வளர்கிறார்கள். அவர்கள் பள்ளி வகுப்புகள் முடிந்து வீட்டில் பெற்றோர்கள் இல்லாம லேயே வளர்கிறார்கள். அவர்கள் பெற்றோர்களால் கண்காணிக் கப்படாத பிள்ளைகளாக இருந்து அன்பும், உணர்வும் பகிர்ந்து கொள்ளப்படாத சூழ்நிலையில் வளர்கிறார்கள். வீட்டில் அவ்வப்போதுதான் உணவு சமைக் கப்பட்டு குடும்பமாக சேர்ந்து சாப்பிடு வதும் அவ்வப்போது நடக்கிற ஒரு செயலாக இருக்கும். அவர்கள் ஒழுக்க மற்ற முறையில் வாழ்ந்து கோபத் தையும், கெட்ட வார்த்தைகளையும் வெளிப்படுத்தும் பிள்ளைகளாக வளர் கிறார்கள். இவ்விதமான வளர்ப்பு முறையில் அவர்கள் கல்வியில் பின் தங்கி, போதைக்கு அடிமைப்பட்டு, மோச மானவர்களுடைய கூட்டத்தில் சேர்ந்து, ஒழுக்கக்கேடான காரியங்களில் ஈடு பட்டு, பல வழக்குகளில் சட்டத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்பவர் களாகத் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்வதில் ஏதாவது ஆச்சரியம் இருக் கிறதா?

நிச்சயமாக மேற்சொல்லப்பட்ட தகவல்களை எல்லாக்காரியங்களிலும் உண்மையாயிருப்பதில்லை. ஆனால், புள்ளி விவரங்கள் இது மிகப்பெரிய பிரச்சனையென்றும், நம் சமுதாயத்தில் புற்றீசல் போல் பரவியிருக்கிறதென்றும் தெரிவிக்கின்றன.

## பிரசங்கியார்களுக்கு மாதிரி இல்லை

சபையில் கூட சுவிசேஷ காரியங் களில் யாருக்கும் விருப்பமில்லை என்று அடிக்கடி பேசக்கேட்கிற இந்த நாட்களில், சில பிரசங்கியார்களும் மற்றும் தனிப் பட்ட கிறிஸ்தவர்களும் வெளியே போய் உண்மையாகவே ஆத்துமாக்களை சந்தித்து, இழந்து போனவர்களுக்கு போதிக்க முயற்சிக்கிறார்கள். ஒரு சாதாரண பிரசங்கியார் வாரத்தின் மற்ற நாட்களில் வேறு வேலை பார்த்துக் கொண்டு ஞாயிற்றுக்கிழமை களில் பிரசங்கிக்கிறார். இவைகளெல்லாம் இவரு டைய முதன்மையான பொறுப்பு களாக எண்ணப்படுகிறது. அவருடைய ஊழியப் பயிற்சியில் தனியார் ஊழியம் ஒரு முக்கியமான பகுதியாக இருப்ப தில்லை, வயதான பிரசங்கியார்கள் மத்தியில் கடினமாக உழைப்பவர்களின் உதாரணம் அல்லது மாதிரி குறை வாகத்தான் இருக்கிறது. ஆகவே, ஓர் இளம் பிரசங்கியார் மற்றவர்களைப் போய் சந்திக்க சிறந்த பலனளிக்கக்கூடிய வழி என்ன? இவர் தன் வேதாகமக் கல்வியை முடித்தவுடன் தனியார் ஊழியம் மற்றும் இழந்து போனவர் களை மனமாற்றுதல் போன்றவற்றால் பிராந்திய சபையை எப்படி வளர்ப்பது என்பதில் பெரிய அளவில் பயிற்றுவிக்கப் படாமல் சபையோடு இணைந்து செயல் பட ஆரம்பிக்கிறார்.

## வெளிநாட்டு ஊழியங்களைச் செய் பவர்களுக்கு மாதிரி இல்லை

உலகெங்கிலும் உள்ள பணித் தளங்கள் சம்மந்தமாக பார்க்கும்போது சில சமயங்களில் சபையில் உள்ள சகோதரர்கள், வெளிநாட்டு ஊழியங் களைச் செய்பவர்கள் பணித்தளங்களில் உடனடியாக பலருக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நல்லதொரு சபையை ஏற்படுத்தி, குறைந்த கால அளவிலேயே பிராந்திய சபையில் ஊழியர்களையும், மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் உருவாக்கி சபை குழந்தைப் பருவமா யிருக்கும்போதே பொருளாதார ரீதியாக தன்னிறைவை அடைய வேண்டும் என்கிற எண்ணம் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அவர்கள் நினைப்பது போல் காரியங்கள் நடக்காது. அவைகள் நடந்தேறுவதற்கு நீண்ட நாட்கள் ஆகும். பல வருடங்கள் கூட ஆகலாம், அதை நிறைவேற்றுவதற்கு வாழ்நாள் முழு வதும் கூட ஆகலாம். ஏன் அப்படி?

வெளிநாட்டு ஊழியத்தைச் செய்பவரால் தன் வேலையை முடிக்க முடியவில்லையா? பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடையும் சபையைக் கட்டுவதற்கு அவருக்குத் திராணி இல்லையா? அவர் அந்த முயற்சியில் தோற்றுவிட்டாரா?

இல்லவே இல்லை. மாறாக, நாம் பல்வேறுபட்ட கலாச்சாரங்களையும், எண்ணற்ற மொழிகளையும் உடைய உலகின் வித்தியாசமான பகுதிகளில் வாழ்கிறோம். மேலும் பெரும்பாலான நேரங்களில் வேறு மதங்களிலிருந்து மனமாற்றமடைந்தவர்களிடமும், மார்க்கப்பிரிவினை சபையிலிருந்து வந்தவர்களிடமும் தான் நாம் இடை படுகிறோம். அவர்களோடு நாம் பணி செய்கிறோம். மனமாற்றமடைந்த இந்த சகோதரர்கள் விசுவாசத்தில் இளமையாயிருக்கிறபடியால் நம்ப முடியாத அளவுக்கு மாற்றங்களைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது. பல காரியங்களில் அவர்கள் தங்கள் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் விரோதமாகத் திரும்ப வேண்டியதாயிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை திசை வெளிநாட்டு ஊழியத்தைச் செய்யும் பிரசங்கியாரால் ஏற்படுத்தப்படுகிறது. நிச்சயமாகவே, அவர் வேதாகமத்தை பிரசங்கித்து அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று வேத வாக்கியங்களைக் கொண்டு எடுத்துரைத்திருப்பார். ஆனால், தலையில் ஏறிய அந்த அறிவு அவர்கள் இருதயத்தில் நுழைய இன்னும் காலம் தேவை. அதே போல் அவர்கள் வாழ்க்கை முன் மாதிரிக்கு ஊழியக்காரர் அவசியமாயிருக்கிறார். அந்த ஊழியக்காரரை அவர்கள் நம்ப வேண்டியதாயிருக்கிறது. அவருடைய உற்சாகம் அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது.

இப்போது, அவர் சபை கட்டுவதில் அவசரம் காட்டி, உண்மையான உள்ளார்ந்த வளர்ச்சிக்கு நேரம் கொடுக்காமல் ஆரம்பத்திலேயே விசுவாசிகள் முதிர்ச்சி அடையவேண்டுமென்று நிர்பந்தித்தால் சோதனைக் காலங்களில் பணி நிலைத்திருக்காது. மேலும், அந்த இளம் விசுவாசிகள் தங்களைத் தாமே பார்த்துக் கொள்ளட்டும் என்று அந்த ஊழியக்காரர் விட்டுவிட்டு சென்றால் அவர்களுக்கு அது கடினமாயிருக்கும்.

மேலும், பல காரியங்களில் அந்த இளம் கிறிஸ்தவர்கள், தகுதி வாய்ந்த பிராந்திய சபை ஊழியர்கள், வேதாகம அடிப்படையிலான மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள், தனியார் ஊழியத்தின் ஒருங்கிணைந்த திட்டம் போன்றவற்றை உள்ளடக்கிய முழுமையாக வளர்ச்சி அடைந்த ஒரு சபையின் மாதிரியைப் பார்த்ததுமில்லை, விசுவாசத்திலும், எண்ணிக்கையிலும், பிராந்திய சபை வளர்ச்சியும், முதிர்ச்சியும் அடையத் தக்க திட்டத்தையும் அவர்கள் ஒரு போதும் கண்டதுமில்லை. இவை எல்லாவற்றிற்கும் பல வருடங்கள் தேவைப்படுகிறது. சிலருடைய எதிர் பார்ப்புக்குத் தகுந்தவாறு காரியங்கள் நடந்தேறாது. முதல் நூற்றாண்டு சபையில் பலர் யூதப் பின்னணியிலிருந்து வந்தவர்கள், மேலும், அவர்கள் முதிர்ச்சி அடைய உதவி செய்ய பரிசுத்த ஆவியின் அற்புதகரமான வழி நடத்துதல் இருந்தது. இன்று பலதரப்பட்ட தெய்வங்களைக் கொண்ட தளத்தில் காரியங்கள் முதல் நூற்றாண்டில் நடந்தபடியே நடக்க வேண்டும் என்று நினைப்பது உண்மையை மறுதலிப்பதாகும்.

முடிவாக, மாதிரி மிகவும் முக்கியமானது என்பது மறுபடியும் வலியுறுத்தப் பட வேண்டும். மாதிரி எங்கே இல்லையோ அங்கே நல்ல காரியங்கள் எப்படி வளரும்? நாமெல்லோரும் மாதிரிகளைச் சார்ந்திருக்கிறோம். நாம் உணர்வதைவிட அதிகமாக அவைகளால் நாம் தாக்கத்திற்கு உட்படுத்தப்படுகிறோம், வனையப்படுகிறோம். உங்களைப் பின்பற்றுபவர்களுக்கு நீங்கள் எப்படிப் பட்ட மாதிரியை வைக்கிறீர்கள்?.

நிர்வாக ஆசிரியர் உரை

# பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான்

## Simon Peter Stood and Warmed Himself

*EZS. Rajanayagam*

பேதுரு குளிர் காய்ந்து கொண்டிருந்த சம்பவம், இயேசுவின் ஊழியம் விமரிசையாக நடந்த நாட்களில் நிகழ்ந்த ஒன்றல்ல. மாறாக, அவருடைய பூமிக்குண்டான ஊழிய நாட்கள் நிறைவேறும் நேரம் நெருங்கி, வேதவாக்கியங்கள் அவரைப்பற்றி முன்னுரைத்த காரியங்கள் நிறைவேறும் வேளை வந்தபோது நடந்த ஒன்று. ஆம், அதற்கு சற்று முன்பாக, நம்முடைய ஆண்டவர், தான் தெரிந்து கொண்ட சீடர்களோடு கெதரோன் ஆற்றுக்கு அப்புறமுள்ள கெத்சமனே தோட்டம் சென்றார் (யோவா. 18:1) அப்பொழுது அவரை, ஒரு திருடனைப் பிடிப்பது போல பிடிக்க வந்த போர்ச் சேவகர்களோடும் மற்றும் பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியர்களோடும் பதுங்கி வந்த கயவன் யூதாஸ், எந்தவொரு பந்த பாசத்திற்கும் அப்பாற்பட்டதொரு முத்தத்தால் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் (யோவா. 18:3, மத். 26:49). இப்படிப்பட்ட ஒரு முத்தம் உலக வரலாற்றில் ஒருபோதும் இடப்பட்டதில்லை. இனி இடப்படப் போவதுமில்லை!

சரி, அங்கே, ஒரு சுவாரசியமான உரையாடலுக்குப் பிறகும், ஓர் எக்கச்சக்க மான சம்பவத்திற்குப் பிறகும் இயேசு பிடிக்கப்பட்டு (18:3-10) கட்டப்பட்ட நிலையில், யூதமார்க்கத்தின்படியான முதல் விசாரணைக்காக, அவ்வருடத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் மாமனான அன்னாவுக்கு முன்பாகக் கொண்டு போகப் பட்டார். (18:12-23). பிறகு, அந்தக் கட்டு அவிழ்க்கப்படாத நிலையில், இரண்டாவது விசாரணைக்காகக் காய்பாவுக்கு முன்பாக கொண்டு போகப்பட்டார் (24-27). அதன்பிறகு, ஆட்சியும், அதிகாரமும் கையிலிருந்தும், கையாலாகாத மனிதனாகக் காணப்பட்ட பிலாத்துவுக்கு முன்பாக, ரோமச் சட்டத்தின்படி விசாரிக்கப்படுவதற்கு இரண்டு முறை கொண்டு போகப்பட்டார் (18:28-38, 39-40). அப்படிக் கட்டப்பட்ட நிலையில், அதாவது, யூதச்சட்டப்படி விசாரிக்கப்படுவதற்காக கொண்டு போகப் பட்டார் அல்லவா அப்பொழுது தான் இது நடந்துள்ளது (18:18,25) நம்ம ஆள் குளிர் காய்ந்த சம்பவம். இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்டு, சிறப்பாகப் போதிக்கப்பட்டு, அவருடைய சீடர்களில் துடுக்கானவர் என்ற அங்கீகாரம் பெற்ற இந்த பேதுரு, எந்தச் சூழ்நிலையில் குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது.

ஒரு முக்கியமான கட்டத்தில், எந்த முடிவும் எடுக்கத் திராணியற்றவனாய் காணப்பட்டுக் "குளிர்காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா இயேசு இவனைக் கலிலேயாக் கடலோரத்தில் அழைத்தார்?" (மத். 4:18) செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படாமல், குளிர் காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா, " உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் " (மத். 4:19) என்று சொன்னார். தான் யாரென்பதை

சாதுரியமாக மறைத்துக்கொண்டு, கண்டுபிடிக்கப்பட்ட நிலையிலும் பொய்யைக் கூசாமல் ஊதி குளிர்காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா, " யோனாவின் குமார னாகிய சீமோனே நீ பாக்கியவான் " (மத். 16:17) என்று ஆசீர்வதித்தார். சோதனையான நேரத்தில், பிதுபிது என்று முழித்து, வேடமணிந்து குளிர்காயும்படியாகவா "மூன்று ஆண்டுகள் பயிற்சி தந்தார்? " சொல்லுங்கள். நிச்சயமாக இல்லை. சரி, இச்சம்பவம் தரும் பாடங்களை இப்பொழுது கவனிப்போம்.

### I முடிவெடுக்க முடியாத இடத்தில் நின்றான்

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவன் முடிவெடுக்க முடியாத ஒரு இடத்தில் நின்றான் என்பது.

முடிவெடுக்க முடியாததைக் காட்டிலும் ஒரு பெலவீனமான நிலை மனிதனுக்கு வேறெதுவும் கிடையாதென்று உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவது ஒருபுறம் இருக்கட்டும். இதைப்படிக்கும் போது, நமக்கே, ஏன் இந்தப் பேதுரு இப்படிச் செயல்பட்டான் என்று தானே எண்ணத் தோன்றுகிறது. அதுவும் தன்னால் நேசிக்கப்பட்ட ஒருவர், எக்கச்சக்கமான சூழ்நிலையில் இருக்கும் போது, அவருக்கு அடுத்து என்ன நடக்குமோ என்பது இவனைப் பொறுத்தளவில் மர்மமாக இருக்கும் போது, இவனால் எப்படி இதுபோல் இருக்க முடிந்தது? அதுவும், இவன் குருவாகிய இயேசு, "*என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்* " (மத். 12: 30) என்று உபதேசித்திருப்பதைக் கிட்ட இருந்து கேட்டிருந்தும் எப்படி இப்படியிருக்க முடிந்தது?

பரலோகத்தின் தேவன், அவரை நேசிக்கின்ற பிள்ளைகள் முடிவெடுக்கும் திராணி உள்ளவர்களாகவும், செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படுகிறவர் களாகவும் இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார். தலைமைத்துவப் பண்பில், மோசேயைக் காட்டிலும் சிறந்தவனென்று தேவதாசர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டி ருக்கும் யோசுவா, ஒரு கட்டத்தில், முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்தபோது முடிவு எடுங்கள் என இஸ்ரவேலர்களை நெருக்கினான் (யோசு. 24:15). இன்னும், பழைய ஏற்பாட்டின் சீரிய கதாபாத்திரமான மோசே, முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்த போது சரியான முடிவெடுத்து செயல்பட்டதை பரிசுத்த ஆவியானவர் எபிரெயர் ஆசிரியரைக் கொண்டு சொல்லும்போது, விசுவாசத்தினாலே மோசே தான் பெரிய வனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான் (எபி. 11:24, 25) என்று மெச்சியிருக்கிறார்.

இதை வாசிக்கும் அன்பரே, நாம் ஒவ்வொருவரும் எப்படிப் பட்டவர்களாய் உள்ளோம்?. தேவனுடைய காரியத்தில், இயேசுவுக்கடுத்த உபதேச காரியங்களில், பரத்துக்கடுத்த வாழ்க்கையில் சரியான முடிவு எடுக்கிறவர்களாக உள்ளோமா? அல்லது எலியா தீர்க்கன் காலத்து மக்கள் போல *இரண்டு நினைவுகளால் இன்னும் குந்திக்குந்தி நடந்து கொண்டுள்ளோமா?* (2 ராஜா. 18:21) சிந்திப்போம். நாம் ஒவ்வொருவரும், நீதிக்கும், அநீதிக்கும் இடையில், சத்தியற்கும், அசத்தியத்திற்கும் இடையில், உபதேசத்திற்கும், கள்ள உபதேசத்திற்கும் இடையில், இயேசு வாக்களித்துக் காட்டின ஒன்றான மெய்ச்சபைக்கும் (மத். 16:18), மனிதர்களால் கட்டப்பட்ட எண்ணி லடங்காத சபைகளுக்கும் இடையில் எது சரியென்று கண்டு முடிவெடுக்கக் கூடியவர் களாய் இருக்க வேண்டியது அவசியம்.

## II சௌகரியமான இடத்திலே நின்றான்

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், அவன் தன்னுடைய சௌகரியமான இடத்திலே நின்றுள்ளான் என்பது.

அப்பொழுது, குளிர்காலமாயிருந்தபடியால் ஊழியக்காரரும், சேவகரும் கரி நெருப்புண்டாக்கி நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடனே பேதுருவும் நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான். (யோவான். 18:18) என்று வசனம் கூறுகிறது. இயேசுவின் சூழ்நிலை குறித்து இவன் கவலைப்பட வேண்டிய அளவு கவலைப்பட்டதாக நமக்குத் தெரிய வில்லை. நடப்பது நடக்கட்டும், நாம் நம்ம வேலையைப் பார்ப்போம் என்ற எண்ண ஓட்டம் இருந்துள்ளதாகவே தெரிகிறது.

ஆனால், பழைய ஏற்பாட்டு மொர்தெகாயைப் பாருங்கள். இயேசுவின் தியாகத்தையும், அவரின் செயல்பாட்டையும் சற்றேனும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறாதவன். ஆயினும், யூத ஜனத்துக்கு எதிராக ஆணை பிறப்பிக்கப் பட்டதென்று அறிந்த போது, " *தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப் போய், துயரமுள்ள மகாசத்தத் துடனே அலறிக்கொண்டு, ராஜாவின் அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்துள்ளான்*" (எஸ். 4:1). இத்தனைக்கும், எஸ்தர் ராஜாத்தியாயிருந்தபடியால், இவனுக்குத் தனிப் பட்ட முறையில் அந்த ஆணையினால் ஆபத்து வந்திருக்காது. இருப்பினும் தன்னோடிருப்பவர்களுக்காக இவன் அலறித் துடித்துள்ளான். இவன் இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக் கொண்ட கோலத்தையும், பேதுரு வேலைக்காரர்களின் கூட்டத்தில் நின்று குளிர்காய்ந்ததையும் ஒப்பிட்டுப் பார்த்தால் குலையெல்லாம் நடுங்குகிறது. பேருது அங்கே தவறு செய்திருக்கிறான் என்பது தெளிவாகவே தெரிகிறது.

அன்பானவர்களே, இயேசுவின் உண்மைச் சீடனாய் ஒருவன் இருக்க விரும்பினால், அவருக்காகப் பாடுகளை ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டுமேயொழிய, அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு சுகம் தேடுகிறவர்களாக இருக்கக்கூடாது. ஆனால், இன்றைய மார்க்க உலகின் யதார்த்த நிலை வேதனை தருவதாக உள்ளது. அப்போஸ்தலன் பவுல் தான் பெற்றெடுத்த விசுவாசக் குமாரனுக்கு எழுதும்போது, அவரோடே கூடப்பாடுகளைச் சகித்தோமானல், அவரோடகூட ஆளுகையும் செய்வோம் (2 தீமோ. 2:12) என்றே கூறுகிறார். அவர் நாமத்தினி மித்தம் பாடுபடுகிறவர்களுக்கே நித்திய ஜீவன் என்று அவர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார் (மத். 19:29). ஆனால், நாமோ போகிறபோக்கில் எனக்கு நித்திய ஜீவன் வேண்டுமென்று அடம்பிடிக்கிறோம். இது எப்படி சாத்தியமாகும்?

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், நம்ம பேதுரு போல், என் சுகம் பெரிதென்று எண்ணி வாழாமல், அப்போஸ்தலன் பவுல் போல், " கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் " என்று சொல்லி (பிலி. 1:21) கிறிஸ்துவுக்காகவும், அவர் கட்டின ஒன்றான மெய்ச்சபைக்காகவும் (எபே. 4:4). கிறிஸ்துவின் உபதேசத்துக்காவும் (2யோவா.9) வாழ்வோம். இறுதியில் நித்திய ஜீவனைப் பெறுவோம்.

## III ஆபத்தான இடத்திலே நின்றான்

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் மூன்றாவது பாடம், ஆபத்தை வரவழைக்கக் கூடிய இடத்திலே அவன் நின்றான் என்பது.

அப்போஸ்தலன் பேதுரு பற்றி நம் உயர்வாகப் பேசுவதற்கு பரிசுத்த வேதாகமத்தில் ஏராளமான காரணங்கள் உண்டு. தேவனால் வெகுவாகப் பயன் படுத்தப்பட்ட மிகச் சிலரில் இவனும் ஒருவன். யாருக்கும் இதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆயினும், இவன் இயேசுவை மறுதலித்த சம்பவம் இவனது நெடிய ஆன்மீகப் பயணத்தில் ஒரு ஒரு சறுக்குப் பாதையே. இவனைப் பற்றிப் பேசிப் பெருமைப்படுவதற்கு நிறைய இருந்தும், இச்சம்பவம் ஓர் அழகிய வெள்ளைச் சட்டையில் கறுப்பு புள்ளி போன்ற ஒன்றாகவே உள்ளது.

சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று பேதுருவிடம் "ஆண்டவரே, காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்த மாயிருக்கிறேன் " என்று கூறி அவன் தம்பட்டம் அடித்தபோது இயேசு சொன்னது உண்மையே. அவர் வார்த்தை கண்டிப்பாக நிறைவேறியே ஆக வேண்டும். அதில் சந்தேகமில்லை, ஆயினும், இவன் மூடன் நெடுகப் போய் தண்டிக்கப்படுவான் என்பது போல (நீதி. 22:3) வலியச் சென்று வம்பிலே மாட்டிக் கொண்டு மறுதலிக் கிறான். நமது தலைப்புக்கான வசனத்தைப் பாருங்கள். "*சீமோன் பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான்; அப்பொழுது சிலர் அவனை நோக்கி; நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்; நான் அல்ல என்று மறுதலித்தான்*" (யோவா. 18:25).

இவன் ஏற்கனவே ஒரு முறை இயேசுவை மறுதலித்துவிட்டான். இப்பொழுது இவன் நின்ற இடம் இவனை இன்னும் ஒருமுறையாகத் தவறிழைக்கச் செய் கின்றது. ஆம், ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கங்களைத் கெடுக்கும் (1 கொரி. 15:33). இவன் சற்றும் எதிர்பாராத நேரத்தில் ஆபத்து வந்து சேர்கிறது. ஒருவேளை, இவன் அவர்களோடு சேர்ந்து குளிர்காயச் செல்லாமலிருந்தால் இதைத் தவிர்த் திருக்கலாமோ? அல்லது இயேசுவோடு கூட மற்ற சீஷனைப் போல் உள்ளே போயிருந்தாலோ (யோவா. 18:16) அல்லது அரண்மனையை விட்டு வெளியே போயிருந்தாலே இந்நிலையத் தவிர்த்திருக்கலாமோ? வாய்ப்பு உண்டென்றே நம்பத் தோன்றுகிறது.

அப்படியானால் அருமையானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் எப்படிப்பட்ட இடத்தில் இருக்கிறோம்? நம்முடைய தனிப்பட்ட பக்தி வாழ்வில், தேவனை ஆராதிக்கும் சபை வாழ்வில், தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப் படிவதால் பெற்றுக்கொள்ளும் இரட்சிப்பின் வாழ்வில், பரலோகத்திற்குப் பாதை காட்டும் அன்றாடக் கிறிஸ்தவ வாழ்வில் நாம் எங்கே இருக்கிறோம்? சொல்லுங்கள்.

சுகம் வேண்டிக் குளிர்காய்ந்து கொண்டிருந்த பேதுருவுக்கு, எதிர்பாராத நிலையில் ஆபத்து வந்ததுபோல, நமக்கும் நாம் இயேசுவோடு கொண்டி ருக்கும் உறவுக்கு சடிதியாய் ஆபத்து வரும். ஆகவே, நாம் நிற்கும் இடம் சரியானதா என்று உறுதி செய்து கொள்வது அவசியம். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும் (1தெச. 5:21). குறிப்பாக, பரலோகம் பாக்கியம் இயேசு கட்டின(மத். 16:18) ஒரு சபைக்குள்ளாக (எப. 4:4) இருப்பவர்களுக் குத்தான் என்று (1கொரி. 15:25) வேதவசனங்கள் தெளிவாகச் சொல்லுகிறபடியால், நான் கிறிஸ்து காட்டின ஒன்றான மெய்ச்சபையில் இருக்கிறேனா அல்லது சுகம் தேடி வேறு எங்காகிலும் அலைந்து கொண்டிருக்கிறேனா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். சரியா?

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| மாதிரி இல்லை | ..................... | J.C. Choate | ... 1 |
| பேதுரு குளிர் காய்ந்து கொண்டிருந்தான் | .............. | Rajanayagam | ... 5 |
| தேவன் கட்டுப்பாட்டில் இருக்கிறார் | ....................... | Byron Nichols | ... 11 |
| **தேவன்** | **God** | | |
| தேவனிடத்தில் நன்றி எப்படிச் சொல்வீர்கள் | ........... | Tom Holland | ... 13 |
| அவர் வந்து சமாதானத்தைப் பிரசங்கித்தார் | .......... | Dayton Keesee | ... 14 |
| தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? | ............ | Harvey Porter | ... 16 |
| நியாயத்தீர்ப்பு மற்றும் ஞானம் | ........................... | Joe C. Magee | ... 18 |
| **சாட்சியங்கள்** | **Evidences** | | |
| பூமி : சிருஷ்டிப்பிலிருந்தே | ..................... | Betty Choate | ... 20 |
| இயேசு : உண்மையா அல்லது கற்பனையா? | ....... | Hershel Dyer | ... 22 |
| காய்பாவின் எலும்புகள் | ..................... | Hershel Dyer | ... 24 |
| **தேவனுடைய வார்த்தை** | **The Word of God** | | |
| தேவ ஆவியினால் ஏவப்பட்ட | ..................... | William Woodson | ... 26 |
| பரிசுத்த ஆசாரியத்துவம் | ..................... | John Thiesen | ... 28 |
| ஜலப்பிரளயம் | ..................... | Bill Nicles | ... 30 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine To Live By** | | |
| மனச்சாட்சி பாதுகாப்பான வழிகாட்டியா? | ............... | Basil Overton | ... 32 |
| யார் அந்த கிறிஸ்தவர்கள்? | .................... | Keith Sisman | ... 34 |
| யார் நீதிமான் | ..................... | Cecil May, Jr | ... 36 |
| கிறிஸ்தவன் | .................... | K. Bhaskar | ... 39 |
| மார்க்கத்தைப் பிரசங்கித்தல் | ..................... | E. Claude Gardner | ... 41 |
| **சபை** | **The Church** | | |
| தீர்க்கதரிசனத்தில் ராஜ்யம் | .................... | Frank Chesser | ... 44 |
| மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் | .................... | Doyle Kee | ... 46 |
| **சபை வளர்ச்சி** | **Church Growth** | | |
| நற்செய்தி ஊழியத்தின் விதைகள் | .................... | Clayton Pepper | ... 47 |
| **அனுதின கிறிஸ்தவ ஜீவியம்** | **Daily Christian Living** | | |
| பிணக்குகளை சரி செய்தல் | ..................... | Philemon Raja | ... 52 |

நீங்கள் மற்றவர்களிடமிருந்து சிறந்ததை வெளியே ......... W.T. Allison ... 56
வாழ்க்கை வாழ்வதற்கே ..................... Benny Martin ... 58
பேதுருவின் குறைகள் ..................... O.P. Baird ... 61
வித்தியாசமாக வேடிக்கை பார்ப்பவர்கள்................ Michael L.king ... 64
மரித்தவர்களுக்கு தயவு ..................... Glenn Colley ... 67
அமர்ந்திருங்கள் ..................... Jessie Granville ... 69
உங்கள் குழந்தைகளைப் பற்றி ..................... Max patterson ... 72

**கிறிஸ்தவ இல்லம்** **The Christian Home**

நம் இருதயமும், நமது வாயும் ..................... K. Pandian ... 73
சிட்சிக்க விருப்பம் ..................... Dale Grissom ... 76
பெற்றோர்களை மதித்தல் ..................... Charles E. Burch ... 78

**செயலில் கிறிஸ்தவம்** **Christianity in Action**

மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக ..................... B. Arjunan ... 80
தனிநபர் ஊழியத்தில் அறிந்திருக்க ..................... Ken Tyler ... 83
எல்லோருக்கும் சுவிசேஷம் ..................... Earl Edwards ... 84
நமது ஊழியம்:முடியாத ஒன்றா? ..................... Wayne Barrier ... 87
கூட்டாண்மையின் வல்லமை ..................... Bill McFarland ... 89

**இரட்சிப்பு** **Salvation**

விசுவாசிகளாக மக்கள் எப்படி ஆக்கப்படுகிறார்கள்? ..... G.F. Rainess ... 91
இதோ சீக்கிரமாய் வருகிறேன் ..................... Daniel Durairajan ... 93
நீங்கள் மறுபடியும் பிறந்துவிட்டீர்களா? .................. George Funk ... 96
மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் ..................... Francis David ... 98

**வேதாகம கதாப்பாத்திரங்கள்** **Bible Characters**

சீமோன் பேதுரு ..................... Ray Hawk ... 100
பாவம் இந்த மோசே ..................... Dalton Key ... 103

**வேத பகுதி பாடங்கள்** **Textual Studies**

பாரம் சுமத்தல் ..................... Bruce Buckley ... 105
தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் .......... Don L. Norwood ... 106
அருமையான உறுதிமொழிகள் ..................... David Pharr ... 108

இணை ஆசிரியர் உரை

# தேவன் கட்டுப்பாட்டில் இருக்கிறார்

## GOD IS IN CONTROL

*Byron Nichols*

நல்ல மக்கள் உலகிலுள்ள நிலைமைகளையும், சூழ்நிலைகளையும் பற்றிப் பேசி தேவன் கட்டுப்பாட்டில் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். அதன் உட்பொருள், இவ்வுலகில் நடக்கிற ஒவ்வொன்றும் தேவனுடைய சித்தத்தின்படி நடக்கிறது என்பதாகும்.

நிச்சயமாக, தேவனை விசுவாசிக்கிற எல்லோரும் உண்மையாகவே அவர் இவ்வுலகத்தைத் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்று விசுவாசிக்கிறோம். ஆயினும், தேவன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பது, நடக்கிற எல்லாவற்றுக்கும் அவரே காரணமாயிருக்கிறார் அல்லது நடக்கிற ஒவ்வொன்றிலும் அவர் பிரியப்படுகிறார் என்கிற கருத்தை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியிருந்தால், ஒவ்வொருவரும் வெறுமனே ஒரு "ரோபோட்" போல தெரிந்துகொள்ளும் உரிமையோ, விருப்பப்படி செயல்படும் அதிகாரமோ இல்லாமல் இருப்பார்கள்.

தேவன் எல்லாவற்றையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பது நடக்கிற எல்லாவற்றுக்கும் தேவன் தான் காரணமாயிருக்கிறார் என்று பொருள் படுமானால், தேவன் தான் எல்லாப் பாவங்களும் நடைபெறுவதற்குக் காரணமாயிருக்கிறார். அதாவது, அவர் தான் யூதாசை கிறிஸ்துவை காட்டிக் கொடுக்க வைத்தார். மோசேயைக் கன்மலையை அடிக்கவைத்து அவரை கானான் தேசத்தில் பிரவேசிக்க முடியாமல் செய்தது தேவன், ஆதாமையும், ஏவாளையும் பாவம் செய்ய வைத்து ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தியது தேவன், நாதாபையும், அபியூவையும் அந்நிய அக்கினியை கொண்டு வரச் செய்தது தேவன் என்றாகிவிடும்.

ரோமர் 8:28 மோசமான சூழ்நிலைகளிலிருந்து நன்மைக்கேதுவான விளைவுகளை தேவனால் ஏற்படுத்த முடியும், ஏற்படுத்துகிறார் என்று நமக்குச் சொல்கிறது. ஆனால், மோசமான சூழ்நிலைகளை அவர் ஏற்படுத்துகிறார் என்று இந்த வசனம் சொல்லவில்லை. யோசேப்பின் வாழ்க்கையை தேவன் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார். அதன் காரணமாகவே யோசேப்புக்கு எதிராக செய்யப்பட்ட தீமையான காரியங்களெல்லாம் ஒழிக்கப்பட்டு அவரை மிகப் பெரிய அதிகார

உச்சியில் அமர வைத்தது (ஆதி. 37,47). ஆனால், தேவனுடைய கட்டுப்பாடு தீமையை உண்டாக்கவில்லை.

நிச்சயமாக, நாம் தேவன் போரினால் ஆயிரக்கணக்கானோர் மரிக்க வேண்டுமென்றோ போரின் நேரடிப் பாதிப்பின் காரணமாக வேறு வழிகளில் அநேகர் மிகப்பெரிய அளவில் துன்பப்படவேண்டுமென்றோ விரும்புகிறார் என்று நம்மால் நம்ப முடியாது. இருந்தபோதிலும் போரின் விளைவாக அவருடைய நாமத்தில் விசேஷித்த சேவைகளைச் செய்யும்படி சில வேளைகளில் தம்முடைய மக்களை பயன்படுத்துகிறார் என்று நிச்சயமாக நம்மால் நம்ப முடியும். உதாரணமாக, நவீனக்காலத்தில் சபையின் பங்கில் மிகப்பெரிய ஊழியங்கள் இரண்டாம் உலகப்போரின் போது இராணுவத்தில் சேவைச் செய்த கிறிஸ்தவர்களால் தான் செய்யப்பட்டது. போரினால் சேதப்படுத்தப்பட்ட மக்களின் ஆவிக்குரிய தேவை மிகப் பெரிய அளவில் இருப்பதை நேரடியாகவே அவர்கள் பார்த்து சேவை செய்தனர்.

இப்பிரபஞ்சத்தில் நடக்கின்ற ஒவ்வொன்றையும் தேவன் நேரடியாக கட்டுப் படுத்துவதில்லை என்று நினைப்பதால் நாம் குற்ற உணர்வு உள்ளவர்களாயிருப் பதற்கு வாய்ப்பு இருக்கிறதா? அது தேவனை சர்வ வல்லவர் என்ற நிலையிலிருந்து அவரை சற்று குறைவான நிலைக்குத்தள்ளிவிடுமா? நண்பர்களே, ஒரு மிகப்பெரிய கம்பெனியின் முதலாளி மிகப்பெரிய அதிகாரத்தையும், பொறுப்பையும் தனக்குக் கீழே வேலை செய்கிறவருக்குக் கொடுத்தாலும் தனக்குக் கீழே வேலை பார்க்கிற வர்கள் எடுக்கும் தீர்மானத்தை மாற்றி அமைக்கும் அதிகாரம் தொடர்ந்து அவரிடம் இருந்து கொண்டே இருக்கும். தேவனும் ஓரளவு அதே விதமாக கிரியை செய்வதைத் தெரிந்துகொண்டு இருக்கிறார். தேவன் ஒரு தேசத்தின் மீது அதிகாரத்தை ராஜாக் களுக்கும், ஜனாதிபதிகளுக்கும், நாடாளுமன்றங்களுக்கும் கொடுத்திருக்கிறார். இந்த உண்மையை எல்லோரும் அறியாவிட்டாலும் அவர்களெல்லாரும் தேவனுடைய வேலையாட்கள் தான்.

தேவன் நேரடியாகவே எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறதாக இருந்தால் நல்லதுக்காகவும், அரசாங்கத்திலிருக்கும் உயர் அதிகாரிகளுக்காகவும் எதற்காக ஜெபிக்க வேண்டும்? தேவன் எப்படி விரும்புகிறாரோ அப்படியே எல்லா காரியங் களையும் கட்டுப்படுத்தினால் அவரை நோக்கி விண்ணப்பங்களை ஏறெடுப்பது பயனற்றதாயிருக்குமல்லவா? மேலும், தேவனிடத்தில் ஒன்றுக்காக ஜெபித்து அதை மாற்றும்படி விண்ணப்பிப்பதும் விருதாவாயிருக்குமல்லவா? அதே நேரத்தில் தம்முடைய ஜனங்கள் தம்மை நோக்கி ஜெபிக்க வேண்டுமென்று தெளிவாக வேத வாக்கியங்களில் சொல்லிவிட்டார் (லூக்கா 18:1) (நாம் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்). (கொலோ 4:2) இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும் (பிலி. 4:6) விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும் (இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும்) (1 தெச. 5:17; யாக். 5:16) (நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது). மேலும், நம் ஜெபங்களுக்கு பதிலளிப்பதாக தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். (மத். 6:5,6) நாம் அந்தரங்கத்தில் ஜெபித்தால் தேவன் வெளியரங்கமாய் பலனளிப்பார்.

# தேவனிடத்தில் நன்றி என்று எப்படிச் சொல்வீர்கள்?

# HOW DO YOU SAY " THANK YOU " TO GOD

*Tom Holland*

நமக்கு மற்றவர்கள் நன்மை செய்யும்போதோ அல்லது நம்மைப் பாராட்டிப் பேசும்போதோ " உங்களுக்கு நன்றி " என்று சொல்ல வேண்டியதன் முக்கியத்துவம் நமக்குப் போதிக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கதவையும் எளிதாகத் திறக்கும் இரண்டு மந்திரச் சொற்கள் உண்டு. ஒன்று " நன்றி " மற்றொன்று " தயவு செய்து ".

இருதயமற்ற அல்லது நன்றி கெட்ட மக்கள் நன்றி சொல்வதைப் பற்றிப் பெரிதாக நினைக்கக்கூட மாட்டார்கள். ஆயினும், உயரிய பண்புகளுள் ஒன்று, பாராட்டுக்களுடன் நமக்கு செய்யப்படும் நன்மைக்கு நன்றி உணர்வோடு பதிலளிப்பதாகும்.

ஆனால், ஒருவர் தேவனிடத்தில் " உமக்கு நன்றி" என்று எப்படிச் சொல்கிறார்? நான் அவரைத் தொலை பேசியில் அழைத்து " உமக்கு நன்றி " என்று சொல்ல முடியாது. மற்றும் அவருக்கு கடிதம் எழுதவோ அல்லது நன்றி அட்டை அனுப்பவோ முடியாது. அப்படியென்றால் என்னுடைய நன்றிச் செய்தியை கிருபையுள்ள தேவனிடத்தில் நான் எப்படிச் சேர்க்க முடியும்? அடிப்படையாக தேவனுக்கு நன்றி செலுத்த இரண்டு வழிகள் உணடு; ஒன்று, எல்லாவற்றுக்கும் நன்றி சொல்வது. மற்றொன்று நன்று உணர்வோடு வாழ்வது. இவ்விரண்டு வார்த்தைகளும் ஒன்றோடொன்று இசைவானவை.

ஜெபத்தின் மூலம் ஸ்தோத்திரம் செலுத்துவது பற்றி தேவனுடைய ஜனங்களுக்கு வேதாகமம் மிகத் தெளிவான முறையில் அறிவுறுத்தியிருக்கிறது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் " நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் " என்று சொன்னார் (பிலிப். 4:6).

விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் போஜன பதார்த்தங்களைப் படைத்தார். தேவன் படைத்த தெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல " (1 தீமோத். 4:3,4).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனுக்கு நன்றி செல்லுவதைப் பற்றி மிகச் சிறந்த முன்மாதிரியை நமக்கு வைத்துப்போயிருக்கிறார். இயேசு ஆகாரத்தைப் புசிப்பதற்கு முன்பு முதலில் ஸ்தோத்திரம் பண்ணினார் (யோவான் 6:11). பிதாவே! வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவரே! உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 11:25).

எனவே, நாம் தேவனுக்கு எப்படி நன்றி செலுத்துகிறோம்? நாம் ஜெபத்திலும், நன்றி நிறைந்த பாடல்களிலும் அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

மேலும், தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை நாம் வாழும் போது தேவன் ஒவ்வொரு நாளும் நமக்குச் செய்து கொண்டிருக்கிற எல்லாவற்றுக்கும் நாம் நன்றி உணர்வை அவருக்கு வெளிப்படுத்துகிறோம்.



# அவர் வந்து சமாதானத்தைப் பிரசங்கித்தார்

# He Came and Preached Peace

## *Dayton Keesee*

**நா**ம் வாழும் இவ்வுலகம் சமூக விரோதிகளையும், இனவெறிக் கொள்கைகளையும், உள்நாட்டுச் சண்டைகளையும், போராட்டம் நிறைந்த வாழ்க்கை முறைகளையும், தவறாக பயன்படுத்தப்படும் சுதந்திரத் தால் வளர்க்கிறது. பெருகி வரும் குற்றங்கள் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக பதிலடி கொடுக்கிறது. ஒத்துழைப்புக்குப் பதிலாக சண்டையை உண்டாக்குகிறது. ஒருவருக்கொருவர் சேவை செய்வதற் குப் பதிலாக அவதூறு செய்கிறார்கள். அல்லது ஒருவரையொருவர் சுட்டுக் கொள்கிறார்கள்.

இத்தனை பிரச்சனைகளுக்கு மத்தில் கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்ததற்கான பிரதான காரணங்களுள் ஒன்றை நாம் உறுதியாக வலியுறுத்து கிறோம்; அவர் வந்து உங்களுக்கு சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித் தார் " (எபே. 2:17). இவ்வசனப்பகுதி இயேசு சமாதானத்தைப் பிரசங்கிக்க மட்டுமல்ல, சமாதானத்தை உண்டாக்கி னார் என்பதைக் காட்டுகிறது. நம் தலைமுறையினர் இழந்து கொண்டி ருக்கிற சமாதானத்தை அவர் எல்லா பகுதியிலும் உண்டாக்கினார்.

எபே. 2:11-ல் பவுல் சமாதானத் திற்குப் பதிலாக எல்லா வகையான போராட்டங்களும், கலகங்களும் தலை தூக்கிய அந்தக் குறிப்பிட்ட நாளை நினைத்துப்பாருங்கள் என்று வலியுறுத் துகிறார். இங்கே பவுல் வலியுறுத்தும்

கருத்து என்னவென்றால், கிறிஸ்து அவர்களுடைய இருதயத்திற்குள் வந்தபோது எல்லாமே மாறிவிட்டது. அந்த நாள் ஆசீர்வதிக்கப்படட்டும். மேலும், சண்டைகளும், சச்சரவுகளும் காணப்பட்ட இடத்தில் சமாதானம் நிலவுகிறபடியால் தேவனுக்கு துதிகள் செலுத்தப்பட வேண்டும். நாம் மறுபடியும் இயேசுவால் என்ன செய்ய முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இன (யூத மற்றும் புறஜாதிகள்) மற்றும் கலாச்சார (விருத்தசேதனம் பண்ணப்படாத) காரணங்களால் அந்நிய தன்மை யாரிடம் மேலோங்கி நின்றதோ அவர்களிடம் " முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் என்று சொன்னார் (எபே. 2:13). கிறிஸ்துவின் இரத்தம் தொடர்புபடுத்தப்படும் போது இன மற்றும் கலாச்சார வேறுபாடுகள் மறைந்து போகின்றன.

" பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தபடியால் " கிறிஸ்து சமூக வேறுபாடுகளைக் களைந்தார். அவர் இருதிறத்தாரையும் ஒன்றாக்கினபடியால் அந்தத் தடுப்புச் சுவர் எதற்காக அங்கே இருக்க வேண்டும்? (எபே. 2:14). ஜெர்மனி நாட்டின் பெர்லின் சுவர் இடிக்கப்பட்டதை களிப்பாக ஒளிபரப்பு செய்த ஊடகங்கள், கிறிஸ்துவை எல்லோருக்கும் *ஒலிபரப்ப வேண்டும், ஒளிபரப்ப வேண்டும்,* ஏனென்றால், அவரால் நம்மை சர்வதேச அளவில் கொண்டு செல்ல முடியும்.

கிறிஸ்து உபதேச வேறுபாடுகளையும் நீக்கிப்போட்டார். " சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி " (எபே. 2:15) என்றுள்ளது.

கிறிஸ்து சபை வேறுபாடுகளைக் கூட நீக்கிப்போட்டார். அவர் சிலுவை மூலமாக ஒரே சரீரமாகிய சபையில் அந்த வேறுபாடுகளை எடுத்துப் போட்டார் (கொலோ. 1:18). ஒவ்வொரு பிரசங்கியாரும், பாஸ்டர் என்றழைக்கப்படுபவர்களும், மதகுருக்களும் இந்த விஷயத்தில் தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும் அளவுக்கு நேர்மையாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அப்போது சபைப் பிரிவுகள் எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைத்து கிறிஸ்து கட்டின ஒரே சரீரமாகிய ஒரே சபையில் நாமெல்லாரும் அங்கம் வகிக்க முடியும் (எபே. 2:16; மத். 16:18; எபே. 2:19,22).

எல்லாவற்றையும் விட மகிமையாக, அவர் மனித தெய்வீக வேறுபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். "அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம் " (எபே. 2:18; 1 தீமோ. 3:15).

கிறிஸ்து இன, கலாச்சார சமூக, உபதேச மற்றும் சபை சம்மந்தமான சமாதானத்தை உண்டு பண்ணியிருக்கிறார். என்ன ஒரு சந்தோஷமான காரியம் இது ! கிறிஸ்துவால் இதைச் செய்ய முடியும், அவர் செய்தார், இன்னும் செய்ய விரும்புகிறார்! நாம் அவரை கர்த்தாவே கர்த்தாவே என்று அழைத்து அவர் சொல்கிறபடி செய்வோம் (லூக். 6: 46; யோவான் 10:16; 1 கொரி. 1:10).

# தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்?

## Talking Back To God

*Harvey Porter*

**ஆ**தித் திருச்சபையில் புறஜாதிகளுடைய இரட்சிப்பு சம்மந்தமாக முரண் பட்ட கருத்து நிலவியது. பழைய ஏற்பாட்டிற்கு தேவன் சிலுவையின் மூலம் முற்றுப்புள்ளி வைத்திருக்க, இஸ்ரவேலர்களோ விசுவாசத்தினால் அல்ல, மாறாக, பிறப்பால் தாங்கள் ஆபிரகாமின் சந்ததியார் என்கிற உண்மையை அடிப்படையாக வைத்து இரட்சிப்பு தங்களுக்குரியது என்று நினைத்தார்கள். பவுல் மிகப்பெரிய இப்பிரச்சனையை ரோமருக்கு எழுதிய நிருபத்தில் வலியுறுத்தியிருக்கிறார். அவர் இவ்விதமாக எழுதினார். " அப்படி யானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி; நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா? மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ "? என்று (ரோமர் 9:20,21).

மனிதகுடும்பம் தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற காரியத்துக்கு நீண்ட வரலாறு உண்டு. இன்றும் கூட தேவனுடைய வார்த்தையை நன்கு அறியாத வர்கள் தேவனுடைய வார்த்தை சம்மந்தமாக இப்படிச் சொல்வதைக் கேட்பது பொதுவான அல்லது சகஜமான ஒன்றாகிவிட்டது. " நான் ஆராதிக்கிற தேவன் அன்பான தேவனாயிருக்கிறபடியால் நரகம் போன்ற ஒன்றை அவரால் உண்டாக்கி யிருக்க முடியாது! ஆகவே, தேவனால் பாவிகளை கண்டிக்க முடியாது என்று சொல்கிறார்கள். தேவன் அன்புள்ள, மன்னிக்கிற பிதா என்பது உண்மை தான். ஆனால், அவர் பாவத்தை வெறுக்கிறார் என்பதும், அவருடைய பரிசுத்த தன்மையில் பாவம் நிலைத்திருக்க முடியாது என்பதும் உண்மையாயிருக்கிறது; ஆகவே, அவருடைய பரிசுத்த சந்நிதியில் பாவிகள் வாழ முடியாது.

பலர் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்று நினைக் கிறார்கள். புதிய ஏற்பாடு அது அவசியமென்று தெளிவாக போதித்திருந்தாலும் அவர்கள் அவ்விதமாக எண்ணுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் இயேசுவின் மீது விசுவாசம் வைத்தவர்களைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னார். " நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் " என்று (அப். 2:38). " ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது. " சரீரமாகிய (சபைக்குள்) ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம் " ஞானஸ்நானம் நம்

பாவங்களைக் கழுவுகிறது ". பாவமுள்ள மனிதன் தேவனையும், இரட்சகராகிய இயேசுவையும் பார்த்து நம்மை எப்படி இரட்சிப்பது என்று சொல்லக்கூடாது.


மனிதன் தேவனிடம் அவரை எப்படி ஆராதிப்பதென்றும், ஆராதனையில் தேவனுக்கு தான் எதைக் கொடுப்பது என்றும் அவன் தேவனுக்கு சொல்லும் வழக்கம் இன்று பொதுவான ஒன்றாகிவிட்டது. சிலர் தாங்கள் எப்படி எண்ணுகிறோம் என்பதை தேவன் அறிந்திருக்கிறபடியால், அவரை ஆராதிக்க வேண்டிய அவசிய மில்லை என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர், சபை கூடுதல் ஒருபோதும் யாரையும் இரட்சித்ததில்லை என்று சொல்கிறார்கள்! வேதாகமம் ஆராதனையைப் பற்றி அதிகமாகச் சொல்கிறது. இயேசு " உண்மையாய்த் தொழுது கொள்ளுகிற வர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் " என்கிறார் (யோவான் 4:24). நம் வழியில் காரியங்களை உண்டாக்கி விட்டு, அவர் சுமார் 2000 வருடங்களுக்கு முன்பாக நம்மை என்ன செய்யும்படியாக கட்டளை யிட்டிருந்தாரோ அதைத் தள்ளிவிட்டு, நம் வழியை தேவன் விரும்ப வேண்டும் என்று அவரிடம் சொல்லத் துணிவது எவ்வளவு அபாயகரமான ஒன்று! பானை குயவனை ஒன்றும் சொல்ல முடியாது என்பது நினைவிலிருக்கட்டும்.

பவுல் ரோமர் நிருபத்தில் இந்த உபதேசப்பகுதியை இப்படிப்பட்ட வார்த்தை களினால் முடித்தார். " ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவை களின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப் படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாகவும் அவருக்காகவும் இருக்கிறது: அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக ஆமென். இந்த வசனப் பகுதியை பவுல் ஏசாயா 49 மற்றும் யோபு 41 ஆகிய அதிகாரங்களிலிருந்து மேற்கோள் காட்டியிருக் கிறார். இந்த மேற்கோள்களின் மையம் என்னவென்றால் " அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார் "? தேவனுக்கு ஒருபோதும் ஒருவரும் ஆலோசனைக்காரராக இருந்ததில்லை. அவருக்கு ஆலோசனைக்காரர் தேவையு மில்லை.

தேவன் ஞானத்தாலும் அறிவாலும் நிறைந்தவர். அற்பமான மனிதனுடைய ஞானம் தேவனுடைய அறிவின்மையோடுகூட சமமாகாது (1 கொரி. 1:25). அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள். அவர் எப்போதும் சரியான முடிவுகளை எடுக்கிறார். சரியான கட்டளைகளைக் கொடுக்கிறார். சத்தியம் அவரால் நிலைநிறுத்தப்படுகிறது. மனிதன் தேவனை ஒருபோதும் கேள்வி கேட்க முடியாது.

தேவனுக்கு மனித இனத்தின் கடமையும், அவன் செய்ய வேண்டியதும் யாதெனில் அவருடைய விருப்பம் ஒவ்வொன்றிற்கும் தாழ்மையாகக் கீழ்ப்படிந்து, விசுவாசத்தி னால் அவரோடு ஐக்கியத்தில் நடப்பதாகும். " விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும் " (ரோமர் 10:17).

தயவு செய்து, உங்கள் பரம தகப்பனோடு எதிர்த்துத் தர்க்கிக்காதீர்கள்!



# நியாயத்தீர்ப்பு மற்றும் ஞானம் பற்றி

## Of Judgement And Wisdom

*Joe C. Magee*

" அவர்கள் வந்தபோது, அவன் எலியாபைப் பார்த்தவுடனே: கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்படுபவன். இவன் தானாக்கும் என்றான். கர்த்தர் சாமுவேலை நோக்கி; நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் " என்றார் (1 சாமுவேல் 16:6,7).

இங்கே தேவனுடைய ஜனங்களின் வரலாற்றில் ஒரு மைல் கல்லைப் பார்க்கிறோம். தங்களுக்கு எது சிறந்தது என்பது பற்றிய தேவ ஞானத்திற்கு எதிராக,

தங்களைச் சுற்றிலும் இருக்கிற தேசங்களைப் போல் தங்களுக்கும் ராஜா வேண்டு மென்று தொடர்ந்து வற்புறுத்தினார்கள். சவுலின் சரீர வளர்ச்சியும் தோற்றமும் ஜனங்கள் ஒருவர் ராஜாவாக எப்படி இருக்க வேண்டுமென்று நினைத்தார்களோ அந்த எண்ணத்திற்குப் பொருத்தமாக இருந்தது. ஆனால், ஜனங்களின் தேர்வு மிக மோசமான தேர்வாக இருந்தது. இப்போது தாவீதைத் தெரிந்தெடுக்கும் காரியத்தில் ஜனங்களின் தீர்ப்பு கணக்கில் கொள்ளப்படவில்லை. தெய்வீக இடைபாடு இஸ்ரவேலின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் வேளை வந்தது.

நம் முதல் பார்வையிலேயே அல்லது எண்ணத்திலேயே ஒன்றைப் பற்றி முடிவு செய்யாமல் இருப்பது நல்லது. ஒரு நபரைப் பற்றிய அறிவு, காலம் மற்றும் அவரோடு ஏற்படும் பழக்கத்தினால் தீர்மானிக்கப்படும் போது, பெரும்பாலும் நாம் அந்த நபர் பற்றிய முதல் பார்வை அல்லது முதல் எண்ணம் தவறாகிவிட்டது என்பதைக் காண்கிறோம். வாழ்க்கை என்பது தீர்ப்புகளின் தொடர் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்; நமது தீர்ப்புச் செய்கிற அல்லது முடிவெடுக்கிற திறன் நமது அனுபவங்களோடு வயதாக வயதாக வளர்கிறது. இருந்தபோதிலும் தேவன் ஒன்றைப் பகுத்தறிவது போல் பகுத்தறிவின் ஆழத்தை நாம் ஒருபோதும் அடையவே முடியாது.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறைவிலிருந்து நிறைவிற்கோ, காணாதவை களிலிருந்து காண்பவைகளுக்கோ படிப்படியாகப் போவதில்லை. அவர் ஒரு மனிதனைப் பற்றிய எல்லாவற்றையும் தொடக்கத்திலேயே பார்த்து விடுகிறார். தேவனுக்கு மனிதனுடைய குணாதிசயங்கள், ஆசைகள், பெலவீனங்கள், பலம் போன்றவைகள் நன்றாகவே தெரியும். ஆயினும், அவர் மனிதனை தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றும் கருவியாகப் பயன்படுத்துகிறார். வெளிப்புறமாக ராஜாவைப் போல் தோற்றமளித்த சவுலுக்கும், உண்மையான, தேவபக்தியுள்ள ராஜாவின் இருதயத்தைப் பெற்றிருந்த தாவீதுக்கும் இடையே காணப்பட்ட பெரிய வித்தியாசம் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

தேவனுடைய இந்த எட்டாத அறிவு, கிறிஸ்துவின் இப்பூமிக்குரிய வருகையில் எதிரொலித்துள்ளது. ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய கிறிஸ்துவை யாரால் இவ்விதமாக முன்னறிவித்திருக்க முடியும்? நாசரேத்தில் தச்சு வேலை செய்பவர்களிலிருந்து கம்பீரமான ராஜாவை யாரால் தெரிந்தெடுத்திருக்க முடியும்? நிச்சயமாக, ஆடுகளை மேய்த்த தாவீதுக்கும், நம் நல்ல மேய்ப்பனாகிய இயேசுவுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை இங்கே காண முடியும். இவை களைக் கண்டு, தேவ ஞானத்திற்கு நம்மை நாம் ஒப்புக் கொடுக்க வேண்டும்.

தேவன் மனிதர்களை அவர்களுடைய சமூக நிலைக்காக உயர்த்து வதில்லை. மாறாக, அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக தேவனைச் சார்ந்திருப்பதால் அவர்களை தேவன் உயர்த்துகிறார். கர்த்தருடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்வோம். " ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் " என்பது வெறுமனே மனிதனுடைய ஒழுக்கரீதியிலான உப்பு சப்பற்ற வார்த்தை களல்ல. அவைகள் பரத்திலிருந்து இறங்கி வந்த ஞானமாகும்.



# பூமி : சிருஷ்டிப்பிலிருந்தே முதிர்ச்சியடைந்த ஒன்றாயிருக்கிறது

## The Earth : Mature From Creation

*Betty Burton Choate*

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்று வேத வாக்கியங்கள் மிக அழகாக தெளிவாகச் சொல்கிறது ( ஆதி. 1:1). தேவன் ஒன்றாம் அதிகாரத்தின் மீதமுள்ள வசனங்களில் சிருஷ்டிப்பு பற்றி கூடுதல் விவரங்களைக் கொடுத்திருக்கிறார், அவர் சொல்லும்போது கிரியை ஆறு நாட்களில் நடந்தவைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளின் முடிவிலும், தேவன் சிருஷ்டிப்பின் கிரியைகளை நல்லதென்று கண்டார். அதாவது, முழுமையானதும், தனித்தனியே செயல்படத் தயாராக இருந்தது என்றும் பொருள்படுகிறது.

மூன்றாவது நாளில் தேவன், "வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்கு சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது தேவன் பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது: தேவன் அது நல்லதென்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று.

வெட்டாந்தரை காணப்பட்ட போது, அங்கே எந்தப் படிமங்களும்

காணப்படவில்லை. ஜீவ ராசிகள் எதுவும் வாழ்ந்ததற்கான அடையாளமும் காணப் படவில்லை, ஏனென்றால், அப்படி எதுவு மில்லை.

ஆனால், தேவன் வெட்டாந்தரையை பூமி என்றழைத்து புல் பூண்டுகளை முளைப்பிக்க கட்டளையிட்டபோது, சிருஷ்டிப்பு செயல்பாட்டின் அந்நேரத்தில் மிருங்கஞம் மனிதனும் எப்படி ஆரம்பத் திலேயே இனவிருத்தி செய்யும் திறன் படைத்திருந்தார்களோ அதேபோல பூமியும் தாவரங்கள் வளரத்தக்க முதிர்ச்சி யடைந்து பண்பட்ட நிலையில் தான் இருந்தது; அதாவது, பூமியானது புல்லையும், பூண்டையும் கனி கொடுகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் உண்டாக்கக்கடவது என்கிற தேவ கட்டளைக்கு எல்லாவகையிலும் பக்குவமாக இருந்தது.

**இதை கவனியுங்கள் :**

தாவரங்கள் மண் இல்லாமல் வளரமுடியாது. மண்ணானது தாதுப் பொருட்களாலும், காலத்தால் அழிந்து போன பாறைப் பொடிகளையும் உள்ளடக் கியது. மலட்டுத்தன்மை வாய்ந்த மண் ணில் இரண்டு கூட்டுப் பொருள்கள் சேர்க்கப்பட்டால் அதில் செடிகள் வளர முடியும்.

அழுகிய தாவரங்கள் மற்றும் மிருகங்களை உள்ளடக்கிய படிமங்கள்.

அழுகிப்போன மிருக மற்றும் தாவரக் கழிவுகளை உணவாக எடுத்துக் கொண்டும், பாறைகள் மற்றும் காற்றி லிருந்து நைட்ரஜனை எடுத்து உயிர் வாழும் நுண்ணுயிர்கள் தாவரங்களின் வளர்ச்சிக்கு அவசியமாகும்.

" Encyclopedia Britannica " என்னும் பொது அறிவு களஞ்சியம் ஒரு சதுர அடி மண்ணில் நூறு கோடி நுண்ணுயிர்கள் இருப்பதாக அதிர்ச்சியூட்டும் தகவலைத் தெரிவிக்கிறது!


**இதை கவனியுங்கள் :**

பரிணாமக் கொள்கைக்காரர்கள் சொல்வது சரியாக இருந்தால், மலட்டுத் தன்மை வாய்ந்த மண்ணில் முதல் செடி எப்படி வளர்ந்தது? முதல் செடி எப்படி வளர்ந்து அடுத்த தாவரங்கள் வளரத் தக்கதாக செத்து அழுகிப்போனது?

பலவகையான ஜீவராசிகள், ஒரு செல் பாக்டீரியா உட்பட நுண்ணுயிர்கள் வாழ்க்கை சுழற்சியில் எப்போது வளர்ச்சி அடைந்தன?

## நீங்கள் எப்படி ?

"மரணமானாலும் ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயத்திருக்கிறேன் " [ரோமர் 8:38,39].



# இயேசு கிறிஸ்து : உண்மையா அல்லது கற்பனையா?

## Jesus Christ : Fact or Fantasy?

*Hershel Dyer*

இவ்வுலகில் வாழும் எல்லோருடைய வாழ்விலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இயேசு கிறிஸ்து தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இத்தகைய அறியப்படாத லட்சக்கணக்கான மக்கள் இயேசு தேவனுடைய குமாரன் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இஸ்லாமியர்கள் அவரை ஒரு தீர்க்கதரிசி என்று ஒத்துக்கொள்கிறார்கள், மதசம்பந்தமான காரியங்களில் தாராளமயக் கொள்கை கொண்டவர்கள் அவர் ஒரு நல்ல மனிதர் என்று சொல்வார்கள், ஆனால், இவர்கள் அவருடைய தெய்வீகக் கொள்கையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.


இது ஒரு கேள்வியை எழுப்புகிறது: நான்கு சுவிசேஷப் புத்தகங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்து வைக் குறித்து நாம் என்ன செய்யலாம்? அவைகளில் அவர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து, பின்பு பரமேறி அங்கே வாசம் செய்து, ஆளுகை செய்வதாக நாம் வாசிக்கிறோம்.

மெத்த படித்தவர்களல்லாத இந்த எழுத்தாளர்கள் தாங்கள் புரிந்து கொள்ளாத கிறிஸ்துவைக் குறித்து புதிதாக கதைக் கட்டுவார்களா? பேதுரு தான் ஆண்டவரை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன் என்று வீணாகப் பெருமை யடித்த அந்த சம்பவத்தை பேதுருவே உருவாக்கியிருந்தால் அவர் கோழைத் தனமாக சபித்தும், ஆணையிட்டும், தான் இயேசுவை அறிய வில்லை என்று சொன்னதை எதற்காகப் பதிவு செய்திருக்க வேண்டும்! பேதுரு ஒரு வேடதாரியாக இருந்து இயேசுவை யாராவது தேவனுடைய குமாரன் என்று நம்பச் செய்ய வேண்டும் என விரும்பியிருந்தால், பொதுவாக நம்பப் படுகிற அறிக்கையை செய்து அந்த விசுவாசத்தை தான் மறுத்ததை எப்படி வேத வாக்கியங்களில் பதிவு செய்திருப் பார்? சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள் என்று எழுதப் பட்டிருக்கிறது (மத். 26:56).

சத்தியம் மற்றும் நேர்மையின் ஓசை அவர்கள் எழுதினவைகளில் ஒலிக்கிறது. மனித நம்பிக்கைக்காக தங்கள் எண்ணத்தில் சதித்திட்டம் போட்டு இப்படிப்பட்ட தெய்வீகக் கதா பாத்திரத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்று மனிதர்கள் முயற்சி செய்திருந் தால், அப்போஸ்தலர்கள் தங்களை பலவீனமில்லாத தளர்ந்து போகாதவர் களாக வெளிப்படுத்தியிருப்பார்கள். ஆனால், இங்கே அவர்கள் தாங்கள் விசுவாசத்தில் தள்ளாடியதையும், பலவீனமாயிருந்ததையும் வெளிப்படுத் தியிருக்கிறார்கள் என்கிற உண்மை அவர்களால் எழுதப் பட்டிருக்கிறவைகள் மீதுள்ள நம்பகத் தன்மையை அதிகரிக் கச் செய்கிறது.

## ஆவிக்குரிய சோர்வுக்கு அருமருந்து

1. திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையா யிருங்கள் (1 பேதுரு 2:3)
2. மனதளவிலான சோர்வைத் தடுக்க தேவனுடைய வார்த்தையை இருதயத்தில் வைக்க வேண்டும் (சங். 119:11)
3. தேவ பக்திக்கடுத்த காரியங்களில் நாட்டமுள்ளவர்களாயிருக்கும்போது அது ஆவிக்குரிய சோர்வுக்கு அருமருந்தாய் அமையும் (1 தீமோத். 4:8)
4. மனிதர்களைச் சார்ந்திராமல் எல்லாவற்றிற்கும் தேவனைச் சார்ந்திருந்து அவருக்காகக் காத்திருக்க பழகிக் கொள்ளவேண்டும் (ஏசாயா 40:31)



# காய்பாவின் எலும்புகள்

## The Bones of Caiaphas

***Hershel Dyel***

**வே**தாகமத் தொல்பொருள் ஆராய்ச்சிப் பேராசிரியரான சார்லஸ் H. ராபர்சன், " எங்கெல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சி வேதாகமத்தைத் தொடுகிறதோ அங்கெல்லாம் அது வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கிற சம்பவங்களை உறுதி செய்கிறது " என்பார்.

சமீபத்தில் எருசலேமில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புகள் அடங்கிய ஒரு பெட்டியின் மேல் யோசேப்பு, காய்பாவின் குமாரன் என்றெழுதப்பட்டிருந்தது. இது வேதாகம உலகத்தில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தேவாலயப் பகுதியின் தெற்கிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் கண்டுபிடித்து விட்டு இது

இயேசுவை சிலுவையில் அறைய அனுமதி கொடுத்த பிரதான ஆசாரியனான காய்பாவின் எலும்புகள் தான் என்கின்ற முடிவுக்கு வந்து விட்டார்களா? (மத். 26:57-66).

இங்கே யோசேப்பு என் னும் பெயர் இயேசுவை விசாரித்த பிரதான ஆசாரியனுடைய பெயராயிருக்கிறது. அவனுடைய குடும்பப் பெயர் காய்பா என்பதாகும். இதை யூத வரலாற்று ஆசிரியர் " Josephus " உறுதி செய்கிறார். அவர் யோசேப்பு பற்றிச் சொல்லும் போது, இந்த யோசேப்பு தான் காய்பா என்ற ழைக்கப்படுகிறார். இவர் தன்னுடைய மைத்துனனுக்குப் பதிலாக பிரதான ஆசாரியனாக நியமிக்கப் பட்டார் (இது யூதர்களின் பழமைத் துவங்கள் என்கிற தலைப்பில் 18-வது புத்தகத்தில், நான்காம் அதிகாரத்தில் மூன்றாவது பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது). கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகள் சுமார் அறுபது வயதுடைய ஒருவரின் எலும்புகளாயிருக்கிறது. இன்னும், அருகிலுள்ள எலும்பு கூடத்தில் கி.பி. 42 அல்லது 43ல் பொறிக்கப்பட்ட காசை கண்டுபிடித்தார்கள். இது அகிரிப்பா ராஜா ஆட்சி செய்த காலத்தைச் சார்ந்ததாகும் (அப். 12:1) இந்தப் பெட்டிகளில் எலும்புகள் முதல் நூற்றாண்டில் வைக்கப்பட்டது நிச்சயமாகத் தெரிகிறது. எனவே, அதிக சந்தேகமுமின்றி அந்த எலும்புக் கூடத்தில் பெட்டியின் மேல் யோசேப்பு, காய்பாவின் குமாரன் என்று பொறிக்கப்பட்டிருப்பது சரியாகவே தெரிகிறது. இயேசுவை சிலுவையில் அறைய அனுமதி கொடுத்த காய்பாவின் எலும்புகள் தான் என்பது கிட்டத்தட்ட உறுதியாகிறது.

இதன் மூலம் இயேசுவின் வாழ்க்கை மற்றும் மரணத்தோடு தொடர்புடைய ஒரு கதாபாத்திரத்தின் வரலாற்றுத் தன்மை உறுதிப்படுகிறது. தொல்பொருள் ஆராய்ச்சி மறுபடியும் வேதாகமத்தைத் தொட்டு அதை உறுதி செய்கிறது. வேதாகமத்தை விசுவாசிப்பவர்கள், வேதாகமத்தின் காரியங்கள் தொல்பொருள் ஆராய்ச்சியால் உண்மையென்று நிரூபிக்கப்படும் போது பரவசமடைகிறார்கள்.

ஏனென்றால், இது அவர்களுடைய விசுவாசத்திற்கு ஆதரவாக இருக்கிறது. வரலாற்றுப் பெயர்கள், மக்கள், பட்டணங்கள் போன்றவைகள் பற்றிய வேத வசனங்களின் துல்லியத்தை தொல்பொருள் ஆராய்ச்சி மேம்படச் செய்கிறது. நம்மில் அநேகருக்கு வேத வசனங்கள் மீது இருக்கும் நம்பிக்கை இந்த கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஆனாலும், இவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். விசேஷமாக இது பகுத்தறிவுவாதிகள் வேதவாக்கியங்களை இன்னும் நம்பகமான ஒளியில் பார்க்க காரணமாக இருக்கிறபடியால் நாம் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

**தேவனுடைய விரல் எங்கே சுட்டிக்காட்டுகிறதோ, அங்கே தேவனுடைய கரம் எப்போதுமே வழியை உண்டு பண்ணுகிறது.**

# தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தையின் குணாதிசயங்கள்

# Characteristics of The Inspired Word

*William Woodson*

தேவனுடைய வார்த்தையின் தன்மை பற்றியும், குணாதிசயங்கள் பற்றியும் மிக விரிவான முறையில் எடுத்துரைக்கும் வேத வசனங்கள் (2 தீமோத். 3:16,17)ல் இடம் பெற்றுள்ளன: " வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது ". ஒருவர் தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொண்டு அதின் மதிப்பை உணர்ந்து, தேவனுடைய வார்த்தைக்குத் தன்னை ஒப்புக்கொடுக்க இந்த குணாதிசயங்களைக் குறித்துக் கொள்வது அவசியமாயிருக்கிறது. இவைகள் சுருக்கமாக இங்கே பட்டியலிடப் பட்டிருக்கின்றன.

1. வேத வாக்கியங்களெல்லாம் தேவனால் வெளிப்படுத்தப்பட்டு எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கிற தேவனுடைய சித்தமாயிருக்கிறது. மூல பஷையிலே அது எழுத்து என்கிற பொருளைத்தான் கொடுக்கிறது. தேவனுடைய வார்த்தை உறுதியானதாயிருந்து, ஒரு காலத்திலிருந்து மற்றொரு காலத்திற்கு கடந்து சென்று எல்லா காலத்திற்கும் பொருந்துவதாயிருக்கிறது. ஆதலால், அதைப் புரிந்துகொள்வதற்கும், அதிலிருந்து அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் தொடர்ந்து அவைகளைப் படிக்க வேண்டும்.

2. வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டவைகள். எழுதப்பட்டவைகளெல்லாம் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினாலும் கண்காணிப்பினாலும் விளைந்தவைகள். எனவே, அது மனிதனுடைய வார்த்தைகளல்ல, மாறாக, அவைகள் தேவனுடைய வார்த்தைகளாயிருக்கிறது. நாம் மோசே, தாவீது, பவுல், பேதுரு போன்றோருடைய வார்த்தைகளிலிருந்து பல காரியங்களைக் கற்றுக் கொண்டு, அவர்களுடைய மேன்மையின் மதிப்பை உணர்கிறோம். ஆனால், உண்மையில் அவர்கள் உதிர்த்த வார்த்தைகள் பரிசுத்த

ஆவியானவரின் வெளிப்படுதலினால் உண்டான தேவனுடைய வார்த்தைகளா யிருக்கிறது.

3. வேத வாக்கியங்கள் உபதேசத்துக்குப் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. இழந்து போனவர்களை மனமாற்றம் அடையச் செய்வதற்கும் சபையை பக்தி விருத்தி அடையச் செய்வதற்கும் தேவனுடைய சித்தத்தைப் பரப்புவதற்கும் ஒருவர் பயன்படுத்தும் ஆயுதம் வேத வாக்கியங்கள் தான். இவ்வேத வாக்கியங் களை வைத்து தான் உபதேசிப்பவர் தேவனுடைய சித்தத்தின் பொருளை உணர்ந்து கொள்ளும்படி செய்வார். தேவனுடைய ஜனங்கள் வேத வாக்கியங் களை மையமாக வைத்துத்தான் போதிக்கவும், பிரசங்கிக்கவும் செய்கிறார்கள்.

4. வேத வாக்கியங்கள் கடிந்து கொள்ளுதலுக்குப் பிரயோஜனமுள்ளவைகளாயிருக் கிறது. வளர்ந்து முதிர்ச்சி அடைகின்ற வாழ்க்கையும், அன்பும் தேவனுடைய பிள்ளையை அடையாளப்படுத்துகிறதாய் இருக்க வேண்டும். இந்த வளர்ச்சி முறையானது வேத வாக்கியங்களின் சத்தியத்தினால் வளர்க்கப்படுகிறது, வழி நடத்தப்படுகிறது.

5. வேத வாக்கியங்கள் சீர்திருத்தலுக்குப் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. வேத வாக்கியங்களின் வழிநடத்துதல் ஒருவர் தேவனிடத்தில் எப்படி திரும்ப வேண்டுமென்றும், எப்படி அவரை சேவிக்க வேண்டுமென்றும் காட்டுகிறது.

6. வேத வாக்கியங்கள் நீதியைப் படிப்பிக்குதலுக்குப் பிரயோஜனமுள்ளவைகளா யிருக்கிறது. வளர்ந்து முதிர்ச்சி அடைகின்ற வாழ்க்கையை, தேவனுடைய பிள்ளையை அடையாளப்படுத்துகிறதாய் இருக்க வேண்டும். இந்த வளர்ச்சி முறையானது வேத வாக்கியங்களின் சத்தியத்தினால் வளர்க்கப்படுகிறது, வழி நடத்தப்படுகிறது.

7. வேத வாக்கியங்கள் உண்மையாகப் பின்பற்றப்படும்போது, தேவனுடைய மனுஷனை எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாக்குகிறது. வேத வாக்கியங்கள் பெரும்பாலும் போதனையிலும், முதிர்ச்சி அடைவதிலும் அறிவுப் பூர்வமாகவே பார்க்கப்படுகிறது. ஆனால், வேத வாக்கியங்கள் அறிவுக்கு மாத்திரம் உட்பட்டதல்ல. அவைகள் தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், விசுவாசத்திற்கும், சேவைக்கும், தேவனுக்கான மரியாதைக்கும், மற்றவரி களிடத்தில் நாம் காட்டும் மரியாதைக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். இப்படிப் பக்தியுள்ள வாழ்க்கையை வாழ நம்மை பயிற்றுவிக்க வேத வாக்கியங்களால் தான் முடியும், ஆனால், நாம் அவைகளை உண்மையாகப் புரிந்து கொண்டு பின்பற்ற வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட வசனங்கள் தேவனுடைய வார்த்தையின் தன்மை களைப் பற்றிய குறிப்பிடத்தக்க அறிவை, புரிந்து கொள்ளுதலைக் கொடுக்கின்றன. நாம் தேவனுடைய வார்த்தைகளை நேசித்து, படித்து, அதைப்பின்பற்றும் போது, அதைப் பற்றிய இத்தகைய பண்புகளை ஆழ்ந்து யோசிப்பது நலமாயிருக்கும்.



# பரிசுத்த ஆசாரியத்துவம்

## The Holy Priesthood

*John Thiesen*

ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் விழுந்து போனதிலிருந்தே மனித இனம் பாவத்தால் தேவனிட மிருந்து பிரிந்து கிடக்கிறது. இப்பிரிவு தான் நமக்காக தேவனிடம் பரிந்து பேச ஓர் ஆசாரியருக்கான தேவையை உண்டாக்கியது.

### ஆசாரியர்கள் மத்தியஸ்தராயிருக்கிறார்கள்

ஆசாரியர் என்பவர் தேவனுக்கும், பாவிகளுக்கும் இடையில் நிற்கும் மத்தியஸ்தராயிருக்கிறார். ஆரம்பத்தி லிருந்தே அவருடைய வேலை பாவி களுக்காக பிராயச்சித்தம் செய்வதும், பாவிகளுக்காக ஜெபம் பண்ணுவதும், பலிகளைச் செலுத்துவதுமாக இருந்து வந்தது. உதாரணமாக, மோசேயின் சகோதரனாகிய ஆரோன் ஆசாரியனாக இருந்தான். ஒவ்வொரு வருடமும், அவர் ஒரு வெள்ளாட்டுக்கடாவின் தலையின்மேல் தன் இரண்டு கை களையும் வைத்து, அதின் மேல்

இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும், அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள் ளாட்டுக்கடாவினுடைய தலையின் மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள் வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பி விடுவான் (லேவி. 10:21). யாரும் இந்த ஆசாரிய அதிகாரத்தை தனக்கென்று எடுத்துக் கொள்ள முடியாது. ஆனால், இந்த நோக்கத்திற்காக தேவனால் அழைக்கப்பட்டவர்கள் மாத்திரமே அப்படிச் செய்ய முடியும். " ஆரோனைப் போலத் தேவனால் அழைக்கப்பட்டா லொழிய, ஒருவனும் இந்தக்கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிற தில்லை " (எபி. 5:4).

யூதர்கள் மத்தியில் ஆரோனும், அவருடைய குமாரர்களும் இந்த பரிசுத்த பணியைச் செய்வதற்கென்று தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். இந்த ஆசாரியன் மற்றவர்களுக்காக தேவனை அணுகுவதால் அவன் இரக்க குண முடையவனாக இருக்க வேண்டும். தேவன் இஸ்ரவேல் தேசத்தை ஏற்படுத்து வற்தகு முன்பாகவே ஆசாரியர்கள் இவ்வுலகத்தில் இருந்திருக்கிறார்கள். உதாரணமாக, ராஜாக்களை வென்று வந்த ஆபிரகாமை மெல்கி சேதேக்கு ஆசீர்வதித்தான் என்று பார்க்கிறோம். இந்த மெல்கிசேதேக்கு உன்னதமான தேவனுடைய ஆசாரியனாக இருந்தான் (ஆதி. 14:18). நியாயப்பிரமாணத்திற்கு முந்தைய அதே காலக்கட்டத்தில் மோசே யின் மாமனாகிய எத்திரோ மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்தான். அவன் மோசேயோடு சேர்ந்து தேவனுக்கு பலிகளை செலுத்தினான். அதன் உட்பொருள் அவன் தேவனால் அங்கீ கரிக்கப்பட்ட ஆசாரியனாக இருந்திருக் கலாம் என்பதாகும் (யாத். 3:1; 18:2).

## இன்று தேவனுடைய ஆசாரித்துவம்

இன்று நம்முடைய பிரதான ஆசாரியர் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவாயிருக்கிறார். " அவர் பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார்" (எபி. 8:1). இயேசு கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர் களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவை ராயுமிருக்கிறார் " (எபி. 7:25). நம்முடைய பாவங்களுக்காக அவர் செய்த தியாகம் சிலுவையில் அவர் சிந்திய இரத்தமாயிருக்கிறது. இந்த உயரிய தியாகம் இவ்வுலகில் இதற்கு முந்தி அளிக்கப்பட்ட எல்லா தியாகங் களையும் மிஞ்சிவிட்டது. " ஏனெனில், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார் " (எபி. 10:14).

நம் பிரதான ஆசாரியராயிருக் கிற கிறிஸ்துவின் கீழ் எல்லா கிறிஸ்தவர் களும் ஆசாரியர்களாயிருக்கிறோம் "இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக் குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு " பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் " (1பேதுரு 2:5). இந்த ஆவிக்கேற்ற பலிகள் (1) நம் உதடுகளின் கனி மற்றும் துதி (2) பிறர்க்கு நற்கிரியைகளைச் செய்தல் (3) தேவையில் இருப்பவர்களோடு நம் முடையவைகளை பகிர்ந்து கொள்ளு தல் (எபி. 13:15,16); (4) ஜெபத்தின் மூலமாக எல்லோருக்காகவும், எல்லா அதிகாரங்களுக்காகவும் பரிந்து பேசுதல் (1 தீமோ. 2:12) போன்றவைகளை உள்ளடக்கியது.

# ஜலப்பிரளயம்: உலகளாவியது, உள்ளூரில் மட்டுமல்ல.

## THE FLOOD : NOT LOCAL, BUT GLOBAL

*Bill Nicks*



நோவாவின் நாட்களில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தை உள்ளூர் அளவிலான ஜலப்பிரளயமென்று வாக்குவாதம் செய்கிறவர்கள் பொதுவாக பரிணாமக் கொள்கையில் நம்பிக்கை உடைய வர்கள். தங்கள் கொள்கையை நிலை நிறுத்த வெளிப்படையான சிருஷ்டிப்பின் அசாதாரணச் செயலையும், அந்த ஜலப் பிரளயத்தோடு தொடர்புடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சம்பவங் களையும் அவர்கள் நிராகரிக்க வேண்டும். " அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்த தென்பதையும் மனதார அறியாமலிருக் கிறார்கள் " என்று பேதுரு சொல்கிறார் (2 பேதுரு 3:6). அந்த ஜலப் பிரளயம்

பூமியின் மேற்பரப்பில் மிகப் பெரிய சேதத்தைக் கொண்டு வந்தது. அப்போது மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறவுண்டன (ஆதி. 7:11). இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட செயலால், கர்த்தர் பூமியின் மேற்பரப்பை பூமிக்கு மேல் உள்ள தண்ணீரிலிருந்து பிரித்தார். அதுவே நாற்பது நாட்கள் மழை பெய்யவும் வழி வகுத்தது. தண்ணீர் பூமியின் மேல் மிகவும் பெருகி, பேழையானது தண்ணீரின் மேல் மிதந்தது. வானத்தின் கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன.

தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளரான மோசேயின் வார்த்தைகளை உற்றுக் கவனிக்கும் போது, உலகளாவிய ஜலப்பிரளயம் ஏற்பட்டது என்பதுப் பற்றிய எளிய உண்மைகளை நாம் சேகரித்துக் கொள்ள முடியும்.


1. அது உள்ளூர் அளவிலான ஜலப்பிரளயமாக இருந்திருந்தால், நோவா மேடான இடத்திற்கு இடம் பெயர்ந்திருப்பார், மிருகங்களும் தண்ணீரிலிருந்து தப்பியோடியிருக்க கூடும்.

2. மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய் பதினைந்து முழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று என்று வசனம் சொல்கிறது. அதன் பொருள் உலகின் உயரமான மலைக்கு மேல் 22 அடிகளுக்கு மேல் தண்ணீர் இருந்தது என்பதாகும். இது வெறுமனே உள்ளூர் அளவிலான ஜலப்பிரளயமாக இருந்திருக்க முடியாது. பேழையில் இருந்த மனித ஜீவன்களையும், மிருக ஜீவன்களையும் தவிர உலகில் இருந்த எல்லா உயிர்களும் அழிந்து போய்விட்டன.

3. தேவன் இனிமேல் இப்பூமியை ஜலத்தினால் அழிக்கமாட்டேன் என்று செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக வானவில் இருந்தது. அதை நாம் இப்போதும் காண முடிகிறது. வானவில் தேவனுடைய உண்மைத்தன்மைக்கு அடையாளமாக இன்றும் விளங்குகிறது. ஆனால், இது உள்ளூர் அளவிலான ஜலப்பிரளயமாக இருந்திருந்தால் வானவில் எவ்விதத்திலும் அர்த்தமற்றதாகத்தான் இருக்கும். ஏனென்றால், நாம் இருக்கும் இந்த 21 ஆம் நூற்றாண்டில் உள்ளூர் அளவிலான வெள்ளப் பெருக்குகள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. ஆதி. 9:8,17 வசனங்களைப் பார்க்கவும். ஆனால், தேவனுடைய வாக்குத்தத்தம் நிச்சயமானது. இனிமேல் ஒருபோதும் உலகளாவிய ஜலப்பிரளயம் ஏற்படாது. மாறாக, இவ்வுலகம் ஒருநாளில் அக்கினியால் அழிக்கப்படும் (2 பேதுரு 3:10,12).

வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த தேவன் பரலோகத்தில் இருக்கிறார். (தானி. 2:28; ஆதி. 1:1) இந்த ஜலப்பிரளயம், கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பும், அவருடைய உயிர்த்தெழுதலும் எப்படி இயற்கை விதிகளோடு இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி இடைப்பட்டதோ அப்படித்தான் இருக்கிறது.

வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறவைகளை அப்படியே நாம் நம்பி, அதை ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொண்டு அதை நம் முழுமனதோடு விசுவாசிப்பது சாலச் சிறந்ததாகும். அவ்வகையான விசுவாசமே ஒருவரை கிறிஸ்துவுக்குள் இரட்சிப்புக்கு ஏதுவாக வழிநடத்தும், வரவிருக்கும் உலகத்திலும் நித்திய ஜீவனுக்கு ஏதுவாகவும் வழிநடத்தும்.



# மனச்சாட்சி பாதுகாப்பான ஒரு வழிகாட்டியா?

## Is Conscience a Safe Guide?

### *Basil Overton*

" மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள் " (நீதி. 16:25). ஒருவர் மத சம்மந்தமான காரியங்களில் எதை விசுவாசிக்கிறார் அல்லது எதைச் செய்கிறார் என்பது ஒரு பிரச்சனையே அல்ல. ஏனெனில், அவர் தன் மனச்சாட்சியின்படி நடக்கிறார் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால், இந்த தத்துவஞானம் ஒருவருடைய மனச்சாட்சியை தேவனுடைய வார்த்தைக்கு மேல் உயர்த்துகிறது. இந்த தத்துவ ஞானம் ஒருவருடைய மனச்சாட்சியை வேதாகமத்திற்கு மாற்றான வழிகாட்டியாக ஆக்குகிறது. ஒருவருக்கு மனச்சாட்சி பாதுகாப்பான வழிகாட்டியாக இருப்பதற்குப் பதிலாக, மனச்சாட்சியானது தேவனுடைய வார்த்தையால் பாதுகாப்பாக வழி நடத்தப்படுவது அவசியம். மனச்சாட்சி எப்படி போதிக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி அது நம் செயல்களை சிலவேளைகளில் அங்கீகரிக்கிறது? சிலவேளைகளில் நிராகரிக்கிறது. மனச்சாட்சியானது தவறாகப் போதிக்கப்பட்டிருந்தால், தவறான காரியங்களைக் கூட அது அங்கீகரிக்கும்

அல்லது சிலவேளைகளில் சரியானவை களைக் கூட நிராகரிக்கும். தவறாக வழி நடத்தப்பட்ட மனச்சாட்சி நம்மைத் தவறாக வழி நடத்தலாம், பெரும்பாலும் காரியம் இப்படியாகத்தான் இருக்கிறது.

நிச்சயமாகவே நாமெல்லோரும் நம் வாழ்க்கைப் பயணத்தில் தவறான பாதையை தெரிந்தெடுக்கும் அனுபவத் தைப் பெற்றிருப்போம். பல மைல்கள் பயணித்தும் நாம் இன்னும் சரியான பாதையில் தான் பயணித்துக் கொண்டி ருக்கிறோம் என்று நினைத்து கடைசியில் ஏமாற்றமடைகிறோம். பக்தி ரீதியான காரியங்களில் நாம் சரியாக இருக்கி றோம் என்று உணர்வது நம்மை சரியாக மாற்றாது. நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வரை படத்தை, எது உண்மையாகவே சரியான பாதை என்பதை கண்டுபிடிப்பதற்காக நாம் கவன மாக சரி பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் அப்படிச் செய்யாமல் அதற்குப் பதிலாக மனச்சாட்சியின்படி நடக்கிறவர் களாயிருந்தால், தேவனுடைய வார்த்தைக்கு மேலாக நாம் மனச்சாட்சி யை உயர்த்துகிறவர்களாயிருப்போம்.

மனச்சாட்சியானது அது சரியாக வழிக்காட்டுவதற்கு முன்பாக தேவனு டைய வார்த்தையால் சரியாக போதிக் கப்பட வேண்டும். ஒருவர் தவறான பாதையில் பயணித்துக் கொண்டி ருந்தால், தன்னுடைய தவறை அவர் கண்டறியும் போது அந்த பாதையிலி ருந்து திரும்பி சரியான பாதையைக் கண்டறியும்படி கடந்து போகிறார். அந்த நபர் தான் தவறான பாதையில் சென்று கொண்டிருந்ததை சுட்டிக்காட்டிய நபரிடம் நிச்சயமாக கோபம் கொள்ள மாட்டார். மாறாக, அவருக்கு நன்றி யுள்ளவராகத்தான் இருப்பார்.

நண்பர்களே, உங்கள் உணர்வு களின் வழிகாட்டுதலை சார்ந்திருக்க வேண்டாம்; தேவனுடைய வரை படமாகிய வேதாகமத்தை உற்றுப் பார்த்து, நீங்கள் சரியான பாதையில் இருக்கிறீர் களா என்பதை பரிசோதித்துப் பாருங்கள். " இடுக்கமான வாசல் வழியாய் உட் பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயி ருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக் கிறவர்கள் அநேகர் " (மத். 7:13,14).

## சந்தேகமானதாக ஒன்று இருந்தால் அது அழுக்கானதாயிருக்கும்

*ஒரு காலை வேளையில் ஒரு மனிதன் கணிசமான நேரத்தை தான் முந்தின நாள் போட்ட சட்டையை இரண்டாவது நாள் போடலாமா? வேண்டாமா என்று முடிவெடுக்க செலவழித்தான். அந்த மனிதனுடைய சிக்கனத்தை கண்டும், காணாமலும் நாம் இருக்க முடியாது. இருந்த போதிலும் காலரில் அழுக்கான துணியை அணிய அவன் விரும்பவில்லை. அவன் மனைவி கடைசியாக "சந்தேகமானதாக இருந்தால் அது அழுக்கானதாயிருக்கும் " என்று சொல்லி அவனுடைய குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.*

*சந்தேகமாக இருக்கும் காரியத்தை தவிர்த்து விடுவது என்ற ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டால், ஆவிக்குரிய வாழ்விலும் நீங்கள் பாதுகாப்பான பக்கத்தில் எப்போதும் இருப்பீர்கள்.*



ஆச்சரியமூட்டும் விதமாக இந்தக் கேள்வி பதிலளிப்பதற்கு சுலபமாக இருக்கிறது. கிறிஸ்தவன் என்கிற பதம் வேதாகமத்தில் லூக்காவாலும், பேதுருவாலும் மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, கிறிஸ்தவன் என்கிற பதம் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது (அப். 11:26, 26:28; 1 பேதுரு 4:16).

கிறிஸ்தவன் என்கிற பதம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவரைக் குறிக்கும் பதமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை நாம் துரிதமாக வேதாமகத்திலிருந்து கற்றுக் கொள்கிறோம். ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது அவர் கிறிஸ்துவை உடையவராயிருக்கிறார். அந்த நபர் விசுவாசத்தின் மூலமாக ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்தவ வாழ்க்கை வாழ தொடர்ந்து விசுவாசத்திலும், செயலிலும் நிலைத்திருக்கிறார். ஆகவே, இப்பதம் வேதாகமத்தைச்

# யார் அந்த கிறிஸ்தவர்கள், அவர்கள் ஏன் வேதாகமத்தைப் படிக்கிறார்கள்?

## WHO ARE THOSE CHRISTIANS, AND WHY DO THEY STUDY THE BIBLE?

*Keith Sisman*

சேர்ந்தது. இது தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர்களால் பயன்படுத்தப்படுகிறது. இது மனிதனால் உண்டாக்கப்பட்ட பதமல்ல.

" கிறிஸ்தவன் " என்கிற பதமானது தேவனுக்குக் கீழ்ப்படியாமல் வெறுமனே கிறிஸ்தவனென்று அழைக்கப்பட விரும்பும் ஒருவருக்கு வேதாகமத்தின் அடிப்படையில் பயன்படுத்தப்படக் கூடாது. இன்று உலகில், கடந்த காலத்தைப்போல் அநேக ஜனங்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைக்க விரும்புகிறார்கள். ஆனால், அவர்களுக்கு அப்படிச் செய்ய உரிமை இல்லை. பொதுவாக அவர்கள் வேதாகமத்தை விருப்பத்தோடு படிக்கவில்லை. அவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாததினால், தேவனுடைய அழைப்பையும் இரட்சிப்பையும் அவர்கள் தள்ளினார்கள் (அப். 2:38).

இன்று உலகில் ஆயிரக்கணக்கான பகுதரப்பட்ட மார்க்கப் பிரிவினை சபைகள் உள்ளன. அவர்கள் வேதாகமக் கேள்விகளுக்கு வித்தியாசமான கருத்துக்களை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஒரே உபதேசமும், ஒரே வழியும், ஒரே சபையும் தான் உண்டு. கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கும் ஒரு கிறிஸ்தவன் ஞானஸ்நானத்திற்குப் பிறகு இச்சபையில் தான் சேர்க்கப்படுவான் (அப். 2:47).

வேதாகமம் கிறிஸ்தவர்களை ஆவிக்குரியவர்களாகவும் (1 பேதுரு 2:4,12) கிறிஸ்துவுக்குள் இருப்பதினால் சபையில் இருப்பவர்களாகவும், உலகத்தின் வழிகளை வெறுத்தவர்களாகவும் பேசுகிறது. பிரிவினை சபைகள் அல்லது பிரிவினைக் கூட்டங்கள் வேத வசனங்களில் தேவனுக்கு விரோதமானவைகளாகப் பேசப்பட்டிருக்கின்றன. எனவே, அவைகள் தேவனுடையவைகளல்ல. மாறாக, உலகத்தினுடையவைகள் (1 கொரி. 1:10,11).

சிலவேளைகளில், கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை ஆராதிப்பதாக குற்றஞ் சாட்டப்படுகிறார்கள். இந்த குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் சத்தியத்தைக் கண்டறியாமல், தாங்கள் இருக்கும் அதே நிலைமையில் அப்படியே மரிக்க நேர்ந்தால், தேவனோடு நித்தியத்தைக் கழிக்க முடியாதென்பதால், கிறிஸ்துவுக்குள் இருப்பதால் கிடைக்கும் மகிழ்ச்சியோடிருப்பவர்களை குறிவைத்துச் சாட்டப்படுகிறது (மாற்கு 16:15,16). கிறிஸ்தவர்கள் மெய்யான தேவனைத் தான் ஆராதிக்கிறார்கள் வேதாகமத்தை அல்ல (மத். 28:19).

இயேசுவோடு வாழ்ந்து, அவரைத் தொட்டுப்பார்க்கும் சிலாக்கியம் பெற்றவர்களெல்லாம் மரித்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகி விட்டன. இப்போது நாம் இயேசுவை மிக நெருக்கமான முறையில் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் எழுதிக்கொடுத்திருக்கிற வேத வாக்கியங்களைத் தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இயேசுவின் போதனைகளை நாம் அறிந்து கொள்வதினால் இயேசுவை நாம் முழுமையாக அறிந்து கொள்ள முடியும், நாம் அவருக்குக் கீழ்ப்படிய முடியும், அவரில் நம் விசுவாசத்தை வைக்க முடியும். நம்மால் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியும். அங்கே தான் இரட்சிப்பு இருக்கிறது. ஆம், நாம் வேதாகமத்தை ஆராதிப்பதில்லை, ஆனால், சர்வ வல்லமையுள்ள தேவனையும், அவருடைய ஒரே பேறான குமாரனையும் ஆராதிக்கிறோம் (ரோமர் 10:14,17; தீத்து. 2:13; மத். 4:10).



# யார் நீதிமான்?

## WHO IS RIGHTEOUS?

*Cecil May, Jr.*

**யார் நீதிமான் ?**

" அந்தப்படியே; நீதிமான் ஒருவனாகிலும் இல்லை " (ரோமர் 3:10). எல்லோரும் பாவம் செய்திருக்கிறார்கள், பாவி என்பது நீதிமான் என்பதற்கான எதிர்ப்பதமாகும். நம்மை நாமே நீதிமான் என்று சொல்லிக்கொள்வது, நம்மைப் பற்றி நாம் சரியாக அறியாமல் இருப்பதும், தேவனுடைய வார்த்தைகளின் உண்மையை மறுப்பதுமாகும்.

ஒருவன் எப்படி " தேவனால் நீதிமானாக்கப்படுகிறான். " இதற்கான பதில் இவ்வசனம் இடம் பெற்றிருக்கும் பகுதியில் இடம் பெற்றிருக்கிறது. வேத வசனங்களின்படி, ஒருபோதும் பாவமே செய்யாமல் நீதியாக வாழ்பவர்கள், நீதிமான்களாகத் தீர்க்கப்படுகிறார்கள். ஆனால், பாவிகள் நீதிமான்களாகத் தீர்க்கப்படாமல், ஆக்கினைக்குள்ளாக்கப் படுகிறார்கள். ஆனால், நீதிமான்களாக் கப்படுவதில்லை. ஒருவர் தன்னுடைய சொந்த கிரியைகளின் அடிப்படையில் நீதிமானாக்கப்பட வேண்டுமென்றால், அவர் ஒருபோதும் பாவமே செய்திருக்கக் கூடாது. ஆனால், எல்லோரும் பாவம் செய்திருக்கிறபடியால் (ரோமர் 3:23) அவ்விதமாக ஒருவரும் நீதிமானாக்கப் படுவதில்லை. அப்படிப் பார்க்கும்போது, "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை "

நாம் தேவனுடைய பிரமாணங் களால் நீதிமானாக்கப்படும் அளவுக்கு அவைகளை நாம் கைக்கொள்கிறோம் என்று நினைத்தால், நம் தவறுகளை நாம் காணாதபடிக்கு நம்மை நாமே குருடர்களாக்கியிருக்கிறோம் அல்லது வெளிப்புறமான சடங்காச்சாரங்களை மிகத்துல்லியமாக கடைபிடிக்கத்தக்க தேவனுடைய பிரமாணங்களை நாம் சுலபமாக்கியிருக்கிறோம் அல்லது அவைகளை குறைத்திருக்கிறோம் என்று தான் பொருள். இயேசு கிறிஸ்து வின் வார்த்தைகளின்படி சில பரிசே யர்கள் இரண்டையும் செய்தார்கள் (மத். 23). பவுலும் கூட தேவ நீதியை அறியா மல்; தாங்கள் சுயநீதியை நிலை நிறுத்தத் தேடுகிறவர்களைப் பற்றி பேசியிருக் கிறார். அப்படிப்பட்டவர்கள் பாவிகளாக இருக்கும் தங்களுக்கு அது தேவை என்று நினைப்பதால் கொடுக்கப்படும் தேவ நீதியை விசுவாசத்தினால் தாழ்மை யாகத் தேடவில்லை என்று சொல்கிறார் (ரோமர் 10:3).

நாம் சுயநீதி உடையவர்களா யிருந்து, நம்மில் நாமே நம்பிக்கை வைத்தால் இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படு வதற்கு தேவன் பேரில் நம்பிக்கை வைக்கும் ஒரே வழியைத் தொலைக் கிறவர்களாயிருப்போம் (லூக். 18:9,14) (ரோமர் 1,3).

**யார் நீதிமான் ?**

பிள்ளைகளே, நீங்கள் ஒருவ ராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள். நீதி யைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவரா யிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ள வனாயிருக்கிறான்; நீதியைச் செய்யாமல் இருக்கிற எவனும் தேவனால் உண்டான வனல்ல (1 யோவான் 3:7,10). நீதியுள்ள வரால் பிறந்தவன் என்று சொல்லிக் கொள்ளுகிற எவனும் நீதியுள்ளவனாயி ருக்கிறான் அல்லது பொய் சொல்கிறான். நம் அனுதின நடத்தையில் நாம் நீதி யில்லாதவர்களாயிருந்தால் நீதியுள்ள தேவனை நாம் அறியவில்லை.

யார் நீதிமான் என்பதற்கான பதில், யோவான் அப்போஸ்தலனால் 1 யோவான் நூலில் விளக்கப்பட்டுள்ளது: அப்போஸ்தலனாகிய யோவான் தேவனு டைய கற்பனைகளை அறிந்து, அவை களைக் கைக்கொள்ளுவதும், அவர் நடந்தபடியே நடப்பதும் (1 யோவான் 2:26), அவர் நீதியுள்ளவராயிருப்பது போல நாமும் நீதியாக இருப்பதுமே (1யோவான் 2:29) என்று நினைவு படுத்துகிறார். தேவனோடு நாம் கொண்டி ருக்க வேண்டிய உறவில், நீதியான

வாழ்க்கையையும், அநீதியான எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை என்று எண்ணி நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென் றால், வேதாகமத்தின் பெரும்பாலான உபதேசங்களையும், குறிப்பாக இயேசுவின் உபதேசங் களையும் நாம் கண்டும் காணாமலு மிருக்க வேண்டும். "பரலோகத்திலி ருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்ப தில்லை (மத். 7:21). " நீங்கள் என்னிடத் தில் அன்பாயிருந்தால் என் கற்பனை களைக் கைக்கொள்ளுங்கள் " (யோ வான் 14:15). நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் " (யோவான் 14:15). " அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய் " (லூக்கா 10:28).

நாம் பாவத்திலும், அக்கிரமத் திலும் நடக்கிறவர்களாயிருந்தால், நாம் இழந்து போன நிலையில் இருக்கிறோம். அப்போது நம் விசுவாசத்தையோ அல்லது உபதேசத்தையோ பற்றி என்ன சொன்னாலும் அது எடுபடாது.

### யார் நீதிமான் ?

இக்கேள்விக்கு நாம் கொடுக்கும் இந்த இரண்டு பதில்களும் வித்தியாச மான கண்ணோட்டத்தில் கேள்வியை அணுகுகின்றன. பதில்களான இந்த இரண்டு உண்மைகளுமே அறிந்து கொள்வதற்கும், வாழ்வதற்கும் அவசிய மானதுமாயிருக்கிறது. நாம் தேவனை அறிந்திருக்கிறோமென்று சொல்லியும் நம் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் எதுவும் ஏற்படவில்லை யென்றால், நம்மை நாமே வஞ்சிக்கிற வர்களாயிருப்போம். ஆனால், தேவனை நாம் வஞ்சிக்க முடியாது (கலா. 6:7). அதே நேரத்தில் நம் வாழ்க்கையில் நாம் ஏற்படுத்துகின்ற வித்தியாசமே பெரிய தென்றும், நம் கிரியைகளினால் தான் நாம் நீதிமானாக் கப்படுகிறோம் என்றும் நினைத்தால் நாம் தேவனுக்கு மேலாக நம்மை உயர்த்துகிறோம். அதினிமித்தம் அவர் நம்மைத் தாழ்த்துவார்.

## கிறிஸ்தவன்

1. கிறிஸ்தவன் என்கிற வார்த்தை " கிறிஸ்து " என்னும் வார்த்தையிலிருந்து வந்தது. கிறிஸ்து என்பதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள்.
2. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ராஜரீக ஆசாரியனாக அபிஷேகம் பண்ணப் பட்டவர்களாயிருக்கிறபடியால் (1 யோவான் 2:20) நாம் கிறிஸ்தவன் என்கிற பெயரைத் தரித்திருப்பது பொருத்தமானதே.
3. கிறிஸ்தவன் என்னும் பெயர் தேவனை மகிமைப்படுத்தும்படி நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (1 பேதுரு 4:16)

# கிறிஸ்தவன்

## CHRISTIAN

*K. Bashkar*

கிறிஸ்தவன் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மூன்று தேவனுடைய வசனங்களில் மட்டும் உள்ளது. அப். 11:26, அப். 26,28, 1 பேதுரு 4:16 ஆகிய வசனங்களில் இடம் பெற்றுள்ளது. கிறிஸ்தவன் என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியில் கிறிஸ்தியானாஸ் (Christianos) எனப்படுகிறது. இதன் அர்த்தம் கிறிஸ்துவுக்கு உரியவன் என்பதாகும். அதாவது, கிறிஸ்தவரல்லாத ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவரைப் பின்பற்றுகிறவனாகிறான் என்று அர்த்தமாக இருக்கிறது. முதன் முதலில் அந்தியோகியாவில் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்று பெயர் வழங்கிற்று (அப். 11:26) சீஷன் என்றால் பின்பற்றுகிறவன் எனப்படும்.

கிறிஸ்தவன், தன்னுடைய வாழ்க்கையில் தேவனை முதன்மையாக வைத்து செயல்படுகின்றான். ஆண்டவர் இயேசு கிறிஸ்து முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்றார் (மத. 6:33).

கிறிஸ்தவன், நாளுக்கு நாள் கிறிஸ்துவைப்போல் மாற வேண்டுவது அவசியமாவதால் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும். (ரோமர் 12:2) நாளுக்கு நாள் கிறிஸ்துவைப் போன்ற குணநலன்களைப் பெற்று கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையை அணிந்து கொள்ள வேண்டும் (பிலி. 2:5).

கிறிஸ்தவன், ஞாயிறு தோறும் அப்பம் பிட்டு, தேவ ஆராதனையில் பங்கு பெற வேண்டும். (அப். 20:7) சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும் (எபி. 10:25). கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் என்று பக்தனாம் தாவீது கூறியது போல நமக்கும் இருக்க வேண்டும் (சங். 122:1)

கிறிஸ்தவன், தனது ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்து அதிக அக்கறையுள்ளவராக இருக்க வேண்டும். தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து அதினாலே நற்குணசாலியாக இருக்க வேண்டும் (அப். 17:11). இப்படியிருக்க கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால் சகல துர்க் குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமை களையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த

குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் (1 பேதுரு 2:1,3).

கிறிஸ்தவன், இந்தப் பொல்லாத உலகை மாற்றி அமைக்கிறவராக இருக்கின்றான். ஆண்டவர் இயேசு கூறுகின்றார் நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்று (மத். 5:14) ஆகவே, சுவிசேஷ வசனமாகிய ஒளியை இந்த உலகிற்குக் காட்டி பாவ இருளை நீக்க வேண்டும். (2 கொரி. 4:4). நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனான ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார். (மாற்கு 15:15,16).

கிறிஸ்தவன் நாட்டிலுள்ள எல்லா சட்டதிட்டங்களையும் மதித்து அதைக் கைக்கொள்கின்றான். இயேசு கிறிஸ்து தமக்காகவும், தம்முடைய சீஷர்களுக்காகவும் வரிப் பணத்தை ரோம அரசாங்கத்திற்குக் கட்டினார். எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமும் இல்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்களை தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 13:1).

கிறிஸ்தவன் இந்த உலகிற்கு சுவிசேஷத்தை மாத்திரம் சொல்லுவதில்லை. அதோடு ஏழை, எளியோர்களுக்கு நன்மை செய்கின்றவராக இருக்கின்றான். (கலாத். 6:10). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எங்கும் நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார் (அப். 10:38)

கிறிஸ்தவன், சபையில் பிரிவினைகளும், இடறல்களும் உண்டாக்காமல் சபையின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்கின்றான் (எபே. 4:3) அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் (ரோமர் 16:17).

கிறிஸ்தவன், பிரிந்து போனவர்களை ஆதரிக்காமல் சமாதானம் பண்ணுகிறவனாக இருக்கின்றான். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள் (மத். 5:9) மேலும், சகோதரரே எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் (2 தெச. 3:6).

கிறிஸ்தவன், நன்றியுள்ளவனாக இருக்கின்றான். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தெச. 5:18) இயேசு கிறிஸ்து பத்துக் குஷ்ட ரோகிகளை சுகமாக்கினார். அவர்களால் ஒருவன் மட்டுமே நன்றியுள்ளவனாக இருந்தான். (லூக். 17:12,19). கிறிஸ்தவர்களாகிய நாம் சத்தியத்தை யாரிடத்தில் கற்றுக்கொண்டோமோ அவரிடத்தில் நன்றியுள்ளவராக இருப்பதே தேவனுக்குப் பிரியமானதாகும். (2 தீமோ. 3:14,17).

# மார்க்கத்தைப் பிரசங்கித்தல்

## Preaching The Way

*E. Claude Gardner*

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் குறைந்தபட்சம் ஆறு முறை லூக்கா கிறிஸ்தவத்தை "மார்க்கம்" என்று குறிப்பிடுகிறார். பவுல் தன்னுடைய மதத்தைப் பற்றி விவரித்த போது இவ்விதமாக அறிவித்தார். " உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன். அதென்னவென்றால் இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து வருகிறேன் " என்று ....(அப். 24:14). லூக்கா இந்த அர்த்தமுள்ள வார்த்தையாகிய மார்க்கத்தை (அப். 9:2; 19:9,23; 24: 22) போன்ற வசனங்களிலும் பயன்படுத்தியிருக்கிறார்.

மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதிகளை நாம் பார்க்கும்போது மார்க்கம் என்கிற வார்த்தை சம்பந்தமாக நான்கு செயல்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன (1) மார்க்கத்தில் அங்கத்தினர்கள் (2) மார்க்கத்தின் உபத்திரவம் (3) மார்க்கத்தின்படி ஆராதனை (4) மார்க்கத்தை போதித்தல் அல்லது பிரசங்கித்தல். இந்தப் பாடத்தின் நோக்கம் இம்மார்க்கத்தை பிரசங்கிப்பதின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் வலியுறுத்துவதுதான்.

### மார்க்கம் என்பது என்ன?

மார்க்கம் என்பது கிறிஸ்தவ முறைமையாயிருக்கிறது; அது ஓர் உண்மையான ஆராதனை முறையாயிருக்கிறது; அது வாழ்க்கை முறைமையாயிருக்கிறது. ஆதாம் கிளார்க் என்பவர் அப். 9:2யை இவ்விதமாக வியாக்கியானம் செய்கிறார். " ..... இந்த மதம் கர்த்தருடைய மார்க்கம், அவருக்குரிய முழு ஆராதனை முறைமையைக் குறிக்கிறது " என்று, இம்மார்க்கம் அவராலேயே பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது; இம்மார்க்கத்தில் மனிதர்கள் நடக்கும்படி தேவன் சித்தங்கொண்டிருக்கிறார், மனிதர்கள் அப்படிச் செய்யும் போது வாழ்க்கையை அவர்கள் பாதுகாப்பாக கடந்து கடைசியில் நித்திய மகிழ்ச்சியை அடைவார்கள். யூத எழுத்தாளர்கள் கிறிஸ்தவத்தின் முழுமையான உபதேசத்தையும், நடைமுறைமையையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்... "

கிறிஸ்தவம் ஜீவமார்க்கமாக, இரட்சிப்பின் மார்க்கமாக, சேவையின் மார்க்கமாக, நம்பிக்கையின் மார்க்கமாக இருக்கிறது. இம்மார்க்கத்தின் மூலமாகத்தான் நாம் இந்த வாழ்க்கையை அனுபவிக்கிறோம். வரவிருக்கும் அல்லது இனிவரும் உலகில் நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வோம் (1 பேதுரு 3:10,12; யோவான் 10:10; லூக்கா 19:10; 1 யோவான் 2:25).

கம்யூனிசக் கொள்கையும், சோசலிக் கொள்கையும், இன்னும் வேறு சில கொள்கைகளும் லட்சக்கணக்கான மக்களால் வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், எல்லோரும் நடக்க வேண்டிய மார்க்கம் கிறிஸ்துவின் மார்க்கம் தான். கிறிஸ்தவம் நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் நம்மை ஆளுகின்ற, நம்மீது செல்வாக்கைச் செலுத்துகின்ற ஒன்றாகப்

பார்க்கப்பட வேண்டும். கிறிஸ்தவ போதனைகள் வீட்டிலும், பொழுது போக்கு நேரங்களிலும், வேலையிலும், சபையிலும் சமுதாயத்திலும், நம்மை ஆள வேண்டும். கிறிஸ்தவம் நம் அன்றாட வாழ்க்கையிலிருந்து துண்டிக் கப்பட்ட ஓர் அமைப்பாக அல்லது சடங்காச்சாரமாக இருக்கக் கூடாது.

### மார்க்கத்தை பிரசங்கித்தல் என்றால் என்ன?

ஒருவர் மார்க்கத்தை பிரசங்கிக் கும்போது, அவர் கிறிஸ்துவையும், சுவிசேஷத்தையும் பற்றிப் பிரசங்கிக் கிறார். வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டி ருக்கிற பல காரியங்கள் இவைகளைத் தான் காட்டுகின்றன. மேலும், நாம் பிரசங்கித்தே ஆக வேண்டும் என்ப தையே காட்டுகின்றன. நாம் மார்க்கத் தைப் பிரசங்கிக்கும்போது:

### 1. நாம் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்

பிலிப்பு கிறிஸ்துவை சமாரியர் களிடமும், எத்தியோப்பிய மந்திரியிட மும் பிரசங்கித்தார் (அப். 8:5, 12,35). நம் இரட்சிப்பாகிய கிறிஸ்து தான் நம் மைய நோக்கமாக இருக்க வேண்டும். ஏனென்றால், அவர் தான் மார்க்கமாக அல்லது வழியாக இருக்கிறார் (அப். 2:22; யோவான் 14:6). நாம் நம்முடைய அபிப்பிராயங்களையோ, தனிப்பட்ட விருப்பங்களையோ அல்லது நம்மைப் பற்றியோ பிரசங்கிக்கக்கூடாது (1 கொரி. 2:2; 2 கொரி. 4:5).

### 2. நாம் சபையைப் பிரசங்கிக்கிறோம்

சமாரியாவில் பிலிப்பு இயேசு வைப் பிரசங்கித்தார் என்று பார்க்கும் போது அவர் சபையை அல்லது தேவனு டைய ராஜ்யத்தைப் பற்றியும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றியும் பிரசங்கித்தார் என்று தான் பொருள் (அப். 8:12). நாம் புதிய ஏற்பாட்டு சபையின் மதிப்பை, தன்மையைப் பற்றி அறிவிக் காமல் மார்க்கத்தை பிரசங்கிக்க முடியாது. கிறிஸ்துவும், சபையும் பிரிக்க முடியாதவைகள் (எபே. 5:32; அப். 28:23,31).

### 3. நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறோம்

இயேசு நம்மை சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார் மாற்கு 16:15; 1 கொரி. 9:16 பார்க்கவும். பவுல் மெத்தப் படித்தவர்; இருந்தபோதிலும் அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் (கலா. 1:11,12). நற்செய்தியால் உலகத்தை ஆசீர்வதிப்பது நம் சிலாக்கியமாகும் (2 கொரி. 4:7).

### 4. நாம் சத்தியத்தைப் பிரசங்கிக்கிறோம்

மார்க்கத்தைப்போல, " சத்தியம் என்பதும் கிறிஸ்தவத்தின் முழுத் தன்மையையும் எடுத்துரைக்கும் ஒரு விரிவான வார்த்தை. நாம் அன்புடன் சத்தியத்தை கைக்கொள்ள வேண்டும் (எபே. 4:15). சத்தியம் நம்மை விடுதலை யாக்குகிறது (யோவான் 8:32; 1 பேதுரு 1:22).

### 5. நாம் வார்த்தையைப் பிரசங்கிக்கிறோம்

நாம் பவுலால் திருவசனத்தைப் பிரசங்கிக்கும்படியாகவும், பேதுருவால் தேவனுடைய வாக்கியங்களை போதிக் கும்படியாகவும் கட்டளையிடப்பட்டிருக் கிறோம் (2 தீமோத். 4:2; 2 தீமோத். 2:2; 1 பேதுரு 4:11). கட்டளை என்பது ஒரு வேண்டுகோளோ அல்லது ஆலோச னையோ அல்ல. நாம் எதைப் பிரசங் கிக்க வேண்டுமென்று தேவ ஆவி யினால் ஏவப்பட்ட வார்த்தைகள் ஓர் எல்லையை வகுத்திருக்கிறது.

### 6. நாம் தேவனுடைய பிரசங்கத்தைப் பிரசங்கிக்க வேண்டும்

தேவன் யோனா தீர்க்கதரிசியை நினிவேக்கு விரோதமாக பிரசங்கிக்கும் படி கட்டளையிட்டபோது நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு

விரோதமாய்ப் பிரசங்கி என்று கட்டளை யிட்டார் (யோவான் 3:2). தேவனிடத்தி லிருந்து வருகிறவைகளை நாம் கூட்ட வோ, குறைக்கவோ செய்யாமல், பயமோ அல்லது முக தாட்சணியமோ இல்லாமல் பிரசங்கிக்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (அப். 20:26,27; கலா. 1:8,9; 2 யோவான் 9).

**நாம் ஏன் மார்க்கத்தை பிரசங்கிக்க வேண்டும்?**

நாம் இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவின் நாமத்தில் இவ்வுலகத்திற்கு பிரசங்கத்தை எடுத்துச் செல்கிறோம் (எபி. 2:10). நாம் ஏற்கனவே பிரசங்கத் தின் மூலமாக இரட்சிக்கப்பட்டிருக்கிறபடி யால் இப்படிச் செய்கிறோம் (1 கொரி. 1:21) விசுவாசிக்கப்பட்டுக் கீழ்ப்படியும் சுவிசேஷம் இரட்சிப்பை அளிக்கிறது. (மாற்கு 16:15,16). பவுல், *சுவிசேஷம் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனா யிருக்கிறது* என்று எழுதினார் (ரோமர் 1:16). சுவிசேஷத்திற்கு வாழ்வை சீர் திருத்தவும், பாவத்தை அழிக்கவும், இழந்த சமாதானத்தைத் திரும்பத் தரவும், பட்டணத்தை இரட்சிக்கவும், உலகத்தை மாற்றவும் வல்லமை உண்டு.

இவ்வுலகம் இழந்து போன நிலையில் உள்ளது, நாம் இவ்வுல கத்தை சுவிசேஷ மயமாக்குவதன் அவசியத்தை உணர வேண்டும் (ரோமர் 3:23; யோவான் 4:35).

நம்முடைய தலைமுறையில் முழு உலகத்திற்கும் சுவிசேஷம் என்பது செயல்படுத்த முடியாத ஒரு கனவல்ல. அன்பினாலும், விசுவாசத்தினாலும், நம்பிக்கையினாலும் தூண்டப்பட்டால் இரட்சகர் நம்மிடம் கேட்டுக் கொண்டதை நம்மால் நிச்சயமாக நிறைவேற்ற முடியும். மோசே இஸ்ரவேலர்களை வழிநடத்தத் தயங்கின போது, தேவன் "நான் உன்னோடே கூட இருப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினார் " (யாத். 3:12). அதேபோல், நாமும் மக்களை வழிநடத்த நம்மிடம் போது மான நீதி ஆதாரமில்லை, எங்களால் முடியவில்லை என்று தயக்கங்காட்டு கிறோம். ஆனால், முழு பெலனோடு சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை நாம் பிரசங்கித்தால் கர்த்தர் இவ்வுலகத்தின் முடிவு பரியந்தமும் நம்மோடு இருப்பார் (மத். 28:20).

**8. மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு நாம் புத்தி சொல்ல வேண்டும்**

பாவம் நிறைந்த மனிதனை மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளத் தூண்டும் முயற்சியில் நாம் " ஞானமுள்ளவர் களைப் போல கவனமாய் நடந்து கொள்ள " அவர்களுக்கு புத்திச் சொல்ல வேண்டும் " (எபே. 5:15). ஒருவர் ஜீவனுக்குப் போகிற வழியில் பிரவேசித்து அதில் நிலைத்திருக்கும்படி நாம் புத்திச் சொல்ல வேண்டும் (மத். 7:14). நம் நடத்தையில் நாம் கிறிஸ்தவனாயிருப் பதற்கு நாம் பரிசுத்த வழியில் நடக்கிற வர்களாயிருக்க வேண்டுமென்று நினைவுபடுத்தப்படவேண்டும் (ஏசாயா 35:8). மேலும், நம் நடையில் நாம் தொடர்ந்து பூர்வப்பாதைகளை கேட்டு விசாரிக்கிறவர்களாயிருக்க வேண்டும் (எரே. 6:16).

நான் கர்த்தருடைய வழியைப் பின்பற்றினால், நான் எங்கே போவேன்? நான் எந்த வழியைப் பின்பற்றுவேன்? அது நீதியின் பாதையாகத்தான் இருக்கும் (சங். 23:3); அது அன்பின் பாதையாகத் தான் இருக்கும் (1 யோவான் 4:19); அது விசுவாசப் பாதையாகத்தான் இருக்கும் (எபி. 11:6). அது ஊழியப் பாதையாகத் தான் இருக்கும் (மத். 23:11,12).

இப்படிப்பட்ட வழியை நாம் வல்லமையாக, ஊக்கமாக, உண்மை யாகப் பிரசங்கிப்போமாக. அப்போது இப்பூமியில் இழந்து போனவர்கள் பரலோகத்தில் மீட்கப்பட்டவர்களாயிருப் பார்கள். " ...நித்திய வழியிலே என்னை நடத்தும் " (சங். 139:24).

சபை

# தீர்க்கதரிசனத்தில் ராஜ்யம்

## *The Kingdom in Prophecy*

*Frank Chesser*

ராஜ்யமும், சபையும் ஒன்று தான் (மத். 16:18,19). ராஜ்யமானது இயேசுவின் சமகாலத்தவர்களின் வாழ் நாளிலேயே ஸ்தாபிக்கப்பட இருந்தது (மாற்கு 9:1). முதல் நூற்றாண்டில் அது சமீபத்தில் இருந்தது (மத். 4:17). அது பலத்தோடே வருவதாக இருந்தது (மாற்கு 9:1). அப்போஸ்தலர்களிடத்தில் பரிசுத்த ஆவி வரும் போது அவர்கள் பெலனடைவதாக இருந்தது (அப். 1:8). ராஜ்யத்தில் அறிவிக்கப்படவிருந்த சுவிசேஷம் முதன் முதலாக எருசலேமில் பிரசங்கிக்கப்பட இருந்தது (லூக். 24: 47).

மேற்சொல்லப்பட்ட வாக்குத்தத் தங்களெல்லாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் நிறைவேறியது. அதன் விளைவாக ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப் பட்டது. இயேசு இப்போது தாவீதின் ஆவிக்குரிய சிங்காசனமாகிய ராஜ்யத்தில் அல்லது ஜீவனுள்ள தேவனுடைய சபை யில் ஆளுகை செய்து கொண்டிருக் கிறார் (அப். 2:29,33). இயேசு ராஜ்யம் அல்லது சபையை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பார் (1 கொரி. 15:24). எனவே, ஆயிர வருட அரசாட்சி என்பது மனிதனுடைய கற்பனையில் உதித்த ஒன்றாகவே உள்ளது.

பழைய ஏற்பாடு ராஜ்யத்தை எதிர் பார்த்தது. தாவீதின் ராஜ்யத்தைப் பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தம் (2 சாமு. 7:12,16). பழைய சரீரப்பிரகாரமான ராஜ்யத்தை மிஞ்சி உலகளாவிய



ஆவிக்குரிய ராஜ்யமாகிய சபையில் நிறைவேறியது. இது மனித யூகத்தின் அடிப்படையில் ஆனதல்ல. இந்த உண்மையானது தாவீதின் சொந்த வார்த்தைகளாலே உறுதிப்படுத்தப்பட்டி ருக்கிறது (சங். 132:11). மிக வெளிப்படை யாக சொல்லப்பட்டிருக்கிற (அப். 2:29, 33) வசனங்களிலும் இது உறுதிப்படுத் தப்பட்டிருக்கிறது. அப். 2:29,33 வசனப் பகுதி இப்பேது இயேசு கிறிஸ்து தாவீதின் ஆவிக்குரிய சிங்காசனமாகிய ராஜ்யத்தில் அதாவது புதிய ஏற்பாட்டு சபையில்

ஆளுகை செய்து கொண்டிருக்கிறார் என்று வெளிப்படையாக அறிவிக்கிறது. ஜனங்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த போது, அவர்கள் தேவனாலேயே அந்த சபையில் சேர்க்கப்பட்டு, இவ்விதமாக இயேசுவின் ராஜரீகத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்தனர்.

ஏசாயா 9:6,7 வசனங்கள் இயேசுவைப் பற்றிய மறுக்க முடியாத தீர்க்கதரிசனங்கள். இந்த வசனப்பகுதி இயேசு " தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படுத்துவார் என்று வாக்குரைக்கிறது (ஏசாயா 9:17). இந்த தீர்க்கதரிசனத்திற்கும் சரீரப்பிரகாரமான ராஜ்யம், சிங்காசனம், அரசாட்சி மற்றும் ஆயிர வருட அரசாட்சி போன்றவை களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

முதல் நூற்றாண்டு யூதர்கள் இயேசு சொன்ன ராஜ்யத்தை சரீரப் பிரகாரமான ஒன்றாகத்தான் பார்த் தார்கள். ஆனால், இயேசு தம்முடைய மூன்று வருட பூமிக்குரிய ஊழியத்தில் அதைத் தொடர்ந்து மறுத்தார். அவர் திரும்பத்திரும்ப தம்முடைய ராஜ்யத் தின் ஆவிக்குரிய தன்மையை வலியுறுத் தினார். அது யோவான் 18: 36-ல் விவரிக் கப்பட்டிருக்கிறது. மறுபடியும் அப்போஸ் தலர் இரண்டாம் அதிகாரம் அவர் சொன்ன ராஜ்யத்தின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்பதை வெளிப் படையாகச் சொல்கிறது. மேலும், இயேசுவின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து முதல் பெந்தெகொஸ்தே நாளிலிருந்தே அவர் அங்கே வீற்றிருக் கிறார் என்பதைத்தான் வலியுறுத்துகிறது.

தானியேல் 2:44-ல் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது பற்றி தீர்க்கதரிசனம் உரைக்கிறது. " அந்த ராஜாக்களின் நாட்களிலே." யார் அந்த ராஜாக்கள்? நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் கண்ட சிலை நான்கு பாகங்களைக் கொண்டது. அச்சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும், அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதன் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும், பாதி களிமண்ணுமா யிருந்தது (தானியேல் 2:31,33). தானியேல் நேபுகாத்நேச்சரிடம் அந்த நான்கு பாகங்களும் நான்கு ராஜ்யாங் களை அடையாளப்படுத்துகிறது என்று அறிவித்தார் ".

அந்த நான்கு ராஜ்யங்கள் பாபிலோனிய ராஜ்யம், பெர்சிய ராஜ்யம், கிரேக்க ராஜ்யம் மற்றும் ரோம ராஜ்யம் என்பவைகளாகும். இந்த நான்காவது ராஜ்யத்தின் ராஜாக்கள் ஆட்சி செய்யும் நாட்களில் தான் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பது தீர்க்கதரிசனம். இது இந்தப் பாடத்தைப் பற்றிய மற்ற வசனங்களோடு ஒத்துப் போகிறது. சபை அல்லது ராஜ்யம் உண்மையாகவே முதல் நூற்றாண்டில் ரோம ராஜாக்கள் அரசாண்ட நாட்களில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக் கப்பட்டது (அப். 2).

இந்த ராஜ்யத்தின் பிரமாணம் என்ன? எரேமியா இதன் ஆவிக்குரிய தன்மையைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார் (எரே. 31:31,34), எபிரெய எழுத்தாளர் இந்த தீர்க்க தரிசனத்தை மேற்கோள் காட்டி அதை புதிய ஏற்பாட்டுடன் பொருத்திப்பார்க் கிறார் (எபி. 8:6,13). இயேசு கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டி ருக்கிற தம்முடைய பிரமாணத்தினால் தம்முடைய ராஜ்யத்தை (சபையை) ஆளுகை செய்து கொண்டிருக்கிறார். மேலும், அதன் ஆராதனை, பணி செயல்பாடு போன்றவற்றையும் ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கிறார்.

# மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்

## IN THE HOLY OF HOLIES

*Doyle Kee*

நாம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருக்கும்போது. அதே நேரத்தில் நாம் தேவாலயத்திற்கு புறம்பே இருக்க முடியாது. ஒன்று நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது உலகத்தின் வழியில் நடக்க முடியாது. நாம் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறோம் அல்லது இருளின் ராஜ்யத்தில் இருக்கிறோம். நாம் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறோம் அல்லது பிசாசின் பிள்ளையாக இருக்கிறோம். பரிசுத்த வேத வாக்கியங்கள் இதற்கு இடைப்பட்ட உறவைப் பற்றி ஒருபோதும் பேசுவதில்லை. தேவனுடைய ராஜ்யத்திற்கு அதிக தூரத்தில் இல்லாத ஒருவரைப் பற்றி நம் கர்த்தர் பேசியிருந்தாலும், அவர் ராஜ்யத்திற்குள் இருப்பதாக அறிவிக்க முடியாது.

ஒருவரிடத்தில் கிறிஸ்துவின் ஆவி இல்லையென்றால், அவர் கிறிஸ்துவை உடையவராக இருக்க முடியாது (ரோமர் 8:9). நாம் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம் அல்லது தாங்க முடியாத பாவப் பாரத்தை சுமந்து திரிகிறோம்.

ஆவிக்குரிய நிலையிலோ அல்லது உறவிலோ காணப்படும் இந்த வேறுபாடு பலர் மத்தியில் அதிக முக்கியத்துவத்தைப் பெறவில்லை. இப்படிக் கருப்பும், வெள்ளையும் கலந்த எண்ணம் அன்பற்ற தன்மையைத் தான் காட்டுகிறது. அது பிரிவினை ஆவியாக கருதப்படுகிறது. இயேசு பேசின இடுக்கமான வழி பலரால் சரிவர புரிந்து கொள்ளப்படவில்லை. தேவன் யாரை அந்த நித்திய பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஏற்றுக் கொள்வார் என்கிற விவாதம் தொடர்ந்து கொண்டே இருக்கும். அந்த விவாதத்திற்கு தனிப்பட்ட முறையில் நாம் முற்றுப் புள்ளி வைத்தால் சமாதானமும், சந்தோஷமும் நமக்குக் கிடைக்கும். வரலாற்று உண்மையிலிருந்து நமக்கு கிடைக்கும் இயேசுவின் இரத்தத்தினாலே நாம் தேவனுடைய சமூகத்திற்குள் பிரவேசித்து விட்டோம் என்பது தான். நாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது நாம் தேவ சமூகத்திலிருந்து ஒருபோதும் பிரிக்கப்படுவதில்லை என்பதற்கு உத்திரவாதம் அளிக்கிறது. ஆனால், பலருக்கு காரியங்கள் இப்படியிராது என்று தேவ வசனங்கள் அறிவிக் கிறது. இருந்தபோதிலும் " தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படுவார் என்று வேத வாக்கியங்கள் எச்சரிக்கின்றன (2 தெச. 1:7,8).

நாம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருப்போம் அல்லது அதற்கு வெளியே இருப்போம். நாம் அவருடைய குமாரன் என்கிற வாசல் மூலமாக உள்ளே இருப்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். அப்படி வெளியே இருப்பவர்களை அந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு வர முயற்சி எடுப்போம்.


# நற்செய்தி ஊழியத்தின் விதைகள்

# THE SEEDS OF EVANGELISM

*Clayton Pepper*

விதைக்கிறவன் ஒருவன் சுவிசேஷ விதையை கிறிஸ்தவர்களின் இருதயங்களில் விதைக்கப் புறப்பட்டான். பலர் ஆத்தும அறுவடையைச் செய்யத்தக்கதாக விதைக்கப் புறப்பட்டான்.

விதைக்கிறவன் இழந்து போனவர்களுக்கு தேவனுடைய அன்பை எடுத்துரைத்தான். " தேவன், தம் முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் " (யோவான் 3:16)



மேலும், விதைக்கிறவன் மனிதனுடைய மீட்பிற்காக மனிதன் கொடுக்க வேண்டிய விலையைக் கொடுப்பதற்காக கிறிஸ்து பல பாடுகள்பட்டார் என்று சொன்னான். நாம் பாவி களாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் என்றான் (ரோமர் 5:8).

விதைக்கிறவன் இயேசு தமது சீஷர்களிடம் கொடுத்த கட்டளையை மேற்கோள்காட்டினான். " நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் " (மாற்கு 16:15). இந்த வார்த்தைகள் இன்று இயேசுவின் சீஷர்களுக்குப் பொருந்துகிறதுஎன்றும்விதைக்கிறவன் சொன்னான்.

அதன்பின்பு விதைக்கிறவன் பவுலின் கட்டளையை சுட்டிக்காட்டினான். "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி " என்று (2 தீமோத். 2:2).

விதைக்கிறவன் தன்னை கவனித்துக் கொண்டிருந்தவர்களிடம் எல்லோருக்கும் தாலந்துகளும், வாய்ப்புகளும் தரப்பட்டிருக்கிறதென்றும், இயேசு "தன் வேலைக்காரர்களிடம் உடைமைகளை விட்டுவிட்டு தூர

தேசத்திற்கு போன எஜமானாகவும் சொன்னார். பின்பு அந்த எஜமான் வந்து தன் வேலைக்காரர்களிடம் கணக்கொப்பு விக்கும்படி கேட்டுக் கொண்டான்".

விதைக்கிறவன் கிறிஸ்து நிச்சய மாகவே திரும்ப வருவார் என்கிற நிச்சயத்துடன் முடிக்கிறார்; நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் கொடுக்கப் பட்டிருக்கிற தாலந்துகளை எவ்விதமாக பயன்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தீர்மானிக்க கணக்கு ஒப்புவிக்கும் நாளை எதிர்கொள்ள வேண்டும் (மத். 25:14,30).

### வசனத்தைக் கேட்டவர்கள் எவ்விதமாக பதிலளித்தார்கள்

★ சில விதைகள் கடினமும், அக்கறை யற்றதுமான இருதயங்களின் மீது விழுந்தது. வசனத்தை அவர்கள் விசுவாசித்துக் கீழ்ப்படிந்து விடாதபடி பொல்லாங்கன் வந்து அதைப் பறித்துக் கொள்ளுகிறான். அவர்கள் அது தங்களுடைய வேலை அல்ல. அது மற்றவர்களுடைய வேலை என்று நினைத்தார்கள்.

★ மற்றவர்கள் பகை உணர்வை வெளிப்படுத்தினார்கள்; இழந்து போன வர்கள் வேண்டுமென்றே காரியங்களை அறியாமலிருக்கிறார்கள். அவர்கள் சுவிசேஷத்தை அறிய விரும்பினால், சபைக் கட்டிடத்திற்கு வரட்டும் என்று சொல்கிறார்கள்.

★ சிலர் மக்களைப் போய் சந்திக்கும் காரியத்தில், அந்த அணுகுமுறையில் எந்த மாற்றமும் ஏற்படாது என்று முன் கூட்டியே தீர்மானித்து விடுகிறார்கள்.

★ சிலர், " இங்கே ஜனங்களை சந்திக்க முடியாது, அவர்கள் செவிக்கொடுக்க மாட்டார்கள் " என்று சொன்னார்கள்.

இங்கே விதைக்கிறவன் தன்னு டைய பங்காக அல்லது பதிலாக ஆத்தும ஆதாயம் செய்யப் பயிற்சி கொடுத்து அவர்களை பவுலைப் போலவும், ஆதிக் கிறிஸ்தவர்களைப் போலவும் வீடுகள் தோறும் போதிக்க வைத்ததன் காரண மாக சபைகள் பெற்ற வெற்றியைப் பற்றிச் சொன்னார். " தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபபேதசம் பண்ணி இயேசுவே கிறிஸ்து வென்று பிரசங்கித் தார்கள் " (அப். 5:42). " பிரயோஜன மானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து உபதேசம் பண்ணி " (அப். 20:20).

★ சிலர், " நமக்கு வேலையாட்கள் எங்கே கிடைப்பார்கள்? " என்று கேட்டார்கள். மற்றவர்கள், " எங்களைப் பொறுத்தளவில் நாங்கள் சரியாக இருக்கி றோம் " என்றார்கள். விதைக்கிறவன், அவர்களை இரட்சிப்பதற்கு முயற்சி எடுப்பதற்குப் பதிலாக, ஜனங்கள் அறியாமையிலேயே இருந்து அழிந்து போக விட்டுவிடலாம் என்று முடிவு செய்தான்.

## இரண்டாவது குழுவின் பதில்

அந்த விதைக்கிறவன் சொன்ன வைகளைக் கேட்ட இரண்டாவது சபை, " இது அருமையான பாடம்; உடனே நாம் தொடங்க வேண்டும் " என்று சொன் னார்கள். அப்படியே அவர்கள் செய்தார்கள்.

அந்த சபையில் அதற்கு முந்தைய போதனைகளில் இழந்து போனவர் களை எப்படிச் சந்திக்க வேண்டும் என்பது பற்றிய போதனைகள் வெறுமை யாயிருந்தது. அவர்களு டைய வேதபாட

வகுப்புகள் பெரும்பாலும் விசுவாசத்திற்கு உத்தரவு சொல்லும் விதத்திலேதான் அமைந்திருந்தன, விசுவாசத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் விதத்தில் அமையவில்லை. அச்சபையின் பிரசங்கியார் தனக்கு வேதாகமப் பள்ளியில் இழந்து போனவர்களை எப்படிப்போய் சந்திக்க வேண்டுமென்று போதிக்கவில்லையென்றும், பொதுவான பிரசங்கங்களை எப்படிச் செய்ய வேண்டுமென்று மாத்திரம் போதிக்கப் பட்டதாகவும் சொன்னார்.

இருந்தபோதிலும், பல சந்தேகப் பேர்விழிகளின் முன்னிலையிலும், போதிய ஆயத்தம் இல்லாமலும் அவர்கள் ஆத்தும ஆதாயப் பணியைத் தொடங்கினார்கள். அந்த சபையார் எப்படி வல்லமையாக ஊழியம் செய்ய வேண்டுமென்று போதிக்கப்படாத காரணத்தால், பல தவறுகள் நடந்தது. சில வேலையாட்கள் உற்சாகமிழந்து ஊழியத்தை விட்டு வெளியேறினார்கள். சிலர் ஊழியப் பணியை விமர்சித்தார்கள். அந்த சபையாரைப் பொறுத்தவரை தேவனுக்கு உண்மையாயிருப்பது என்பது சபை கூடி வருதலும், நல்லொழுக்க வாழ்வும், சபையின் பொருளாதாரத் தேவை களைச் சந்திக்க உதவுவதுமாகத்தான் இருந்தன. சபை கூடுமிடத்திற்கு பெருங்கூட்டம் வந்தால் மகிழ்ச்சி, கொஞ்சபேர் வந்தாலும் அதிலும் அவர்கள் திருப்திபட்டுக் கொண்டார்கள். இப்படிப்பட்ட மனநிலையை உடைய மக்கள் சபையில் பெரும்பான்மையாக இருந்தபடியால் அவர்கள் சுவிசேஷப் பணிக்கு எதிராக முறுமுறுத்தார்கள்.

அந்த சபையின் மூப்பர்களுக்கு விதைக்கிறவன் சொன்னவைகள் உண்மைதான் என்று தெரிந்திருந்தது; ஆனால், இருக்கின்ற எல்லா ஆதாரங்களையும், இழந்து போனவர்களை, சந்திக்க பயன்படுத்தலாமா, பயன்படுத்த வேண்டாமா என்பதை தீர்மானிக்கும் உரிமையை தேவன் தங்களுக்கு தந்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்களைப் பொறுத்தவரை சுவிசேஷப் பணி என்பது செய்யலாம், செய்யாமலும் இருக்கலாம் என்பதைப் போன்றது தான். அங்கே புகார்கள் வந்தபடியால் அல்லது முறுமுறுப்பு ஏற்பட்டபடியால் அந்தத் திட்டத்தை நிறுத்த அவர்கள் முடிவெடுத்தார்கள். ஆத்தும ஆதாயத்திற்கு ஆதரவு கொடுக்கப்படவுமில்லை. அது உற்சாகப்படுத்தப்படவுமில்லை.

விதைக்கிறவன் எப்போதும் மார்க்கப்பிரிவினை கூட்டத்தார் வேதாகம அதிகாரத்தை அவமதிப்பதற்காக கண்டிக்கப்படுவதை எப்போதும் கேட்டிருக்கிறார். ஆயினும், மேற்சொல்லப்பட்டிருக்கிற இக்கூட்டத்தார் தேவனுடைய அதிகாரத்தை கடுமையாக அவமதித்தார்கள்.

விதைக்கிறவன் வெளிப்படுத்தின விசேஷத்தில், இதே வார்த்தைகள் மேற்கோள் காட்டப்பட்டிருப்பதையும் நினைத்துப் பார்த்தார் " இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார் (வெளி. 22:18,19).

## மூன்றாவது குழுவின் பதில்

விதைக்கிறவன் ஊழிய விதையை விதைத்த மற்றுமொரு சபையைப் பார்வையிட்டார். அவர்கள் மிக உற்சாகமாக பதிலளித்தார்கள். அவர்கள் மற்ற சபையார் எப்படி வெற்றிகரமாக ஊழியம் செய்தார்கள் என்பதை மிக ஜாக்கிரதையாகப் படித்தார்கள். பல மாதங்கள் அவர்களுடைய ஊக்கமும், உற்சாகமும் அதிகமாகவே இருந்தது. அச்சபையின் பிரசங்கியார் இழந்து போனவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவரும் முயற்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தார், அதை முதன்மைப்படுத்தினார். பிரசங்கியாரும், மூப்பர்களும் செயல்படுகிறவர்களாயிருந்தார்கள். அவர்கள் முன்னின்று நடத்தினார்கள்.

ஆனால், பல மாதங்கள் கடந்தபின், பிற காரியங்கள் அவர்களுக்கு முக்கியமாகத் தெரிந்தன. கடைசியில், இழந்துபோனவர்களைப் பற்றி குறைவாகத் தான் பேசப்பட்டது. தலைவர்கள் மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்க வேண்டிய காரியத்தில் குறைவான ஈடுபாடே காட்டினார்கள். பிரசங்கியார் பாவத்தைப் பற்றியோ அல்லது இழந்து போன ஆத்துமாக்கள் பற்றியோ எப்போதாவது தான் குறிப்பிடுவார். சுவிசேஷப் பணியிலிருந்த ஊழியர்கள் ஆத்தும ஆதாயம் முக்கியமான வேலை அல்ல என உணர்ந்தது வெளிப்படையாகவே தெரிந்தது. வருமானம் ஈட்டுவதும், வியாபார நாட்டமும், பொருளாதார ஆதாயமும் முதல் இடங்களைப் பிடித்தன. சபை குழுவாக சேர்ந்து செய்யும் செயல்பாடுகளில் பொழுது போக்கு அம்சங்களின் மீது அவர்கள் கவனம் திரும்பியது. ஆத்துமாக்கள் விழுந்து போவதை விட பந்து விளையாட்டில் தோல்விகள் ஏற்படுவது பெரிதாக பேசப்பட்டது. விளையாட்டுகள், மீன் பிடித்தல், தோட்டவேலை போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் சபை அங்கத்தினர்களின் பெரும்பாலான நேரத்தை எடுத்துப் போட்டது.

இப்போது விதைக்கிறவன் வேத வசனங்களை நினைத்துப் பார்க்கிறார். "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும், ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும், நெருக்கப்பட்டு, பலன் கொடாதிருக்கிறார்கள் " (லூக்கா 8:14). விதைக்கிறவன் எபேசு பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டதையும், லவோதிக்கேயாவிலிருந்த கிறிஸ்தவர்கள் குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருந்தபடியால் மனந்திரும்பும்படி சொல்லப்பட்டதையும் நினைத்துப்பார்க்கிறார் (வெளி. 2,3 அதிகாரங்கள்) தேவனுடைய சத்தியத்தை தங்கள் கைகளில் வைத்திருந்த மக்கள் மனதில் இப்படி இருதயத்தை உடைத்தெறியும் எண்ணங்கள் வந்து போயின. இருந்தபோதிலும் எல்லோரும் இழந்து போனார்களே!

## நான்காவது குழுவின் பதில்

விதைக்கிறவன் நான்காவது சபையை சந்தித்து அங்கே சுவிசேஷ விதையை விதைத்தார். அந்த விதை உண்மையும் நன்மையுமான இருதயங்களில் விழுந்தது. அந்த மக்கள் ஜெபிக்கிறவர்களாகவும் ஒருவரிலொருவர் அன்பு காட்டுகிற மக்களாகவும் இருந்தார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையை சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டார்கள். சபையின்

தலைவர்கள் சபையிலுள்ள முக்கிய மான அங்கத்தினர்களை அழைத்துக் கொண்டு மிக வேகமாக வளர்கிற, ஆத்தும ஆதாயம் செய்கிற சபைக்குப் போனார்கள். அங்கே போய் அந்த சபையின் ஆத்தும ஆதாயத் திட்டத்தைப் படித்தார்கள். அவர்கள் ஊழியம் செய்கிற வேதாகமப் பள்ளியை எப்படி உருவாக்கினார்கள் என்பதைப் படித்தார்கள்.

அந்த சபையின் ஊழியர் சபை வளர்ச்சி பற்றிய புத்தகங்ளை வாசிக்க வும் படிக்கவும் செய்தார். அவர் எப்போதும் உற்சாகமானவராக காணப் பட்டு இழந்து போனவர்களை போய்ச் சந்திக்கும் காரியத்தில் சபை அங்கத்தி னர்களை உற்சாகப்படுத்தினார்.

மூப்பர்களும், பிரசங்கியாரும் மக்களின் மனநிலை மாறிவிட்டதை உணர்ந்து சபைக்கு வராமல் வெளி யிருப்பவர்களைப் போய் சந்திக்கும் திட்டத்தை மாத்திரம் அவர்கள் வைத் திருக்கவில்லை. இழந்து போனவர் களை சந்திக்க அதற்கு திட்டமிட உதவும் புத்தகங்களை அதிகமாகப் படித்தார்கள். அதை அவர்கள் முன்னின்று செய் தார்கள். குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையாவது சபை வளர்ச்சி மற்றும் ஆத்தும ஆதாயம் பற்றிய கருத்தரங்கு களில் சபையின் முக்கிய அங்கத்தி னர்கள் பங்கேற்கத்தக்க அதன் செலவு களைப் பொறுப்பெடுத்துக் கொள் கிறார்கள். சில மூப்பர்கள் எப்போதுமே அந்த குழுவுடன் செல்கிறார்கள். அந்த மூப்பர்கள் எருசலேம் சபை போல் தினந்தோறும் ஊழியத்தில் ஈடுபட்டு, தினந்தோறும் ஆத்தும அறுவடை செய்தார்கள். தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றி ருந்தார்கள், இரட்சிக்கப்படுகிறவர் களைக் கர்த்தர் அனுதினமும் சபை யிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2:47). மற்றும் " தினந்தோறும் தேவால யத்திலேயும் வீடுகளிலேயும் இடை விடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள் " (அப். 5:42) போன்ற வசனங்களை மனதில் கொண்டு செயல்பட்டார்கள்.

கடந்த காலங்களில் அவர்கள் சபை வருகைக்கென்றும், காணிக் கைக்கென்றும் இலக்கு நிர்ணயித்த தாகவும், ஆனால், இப்போது ஆத்தும அறுவடைக்கென இலக்குகள் வைக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். மேலும், அவர்கள் நம்முடைய எல்லா திட்டங்களிலும் சுவிசேஷப் பணி சம்மந்தமான தகவல்கள் இடம் பெற வேண்டும் என்று தீர்மானித்தார்கள். பக்தி விருத்தி ஏற்படுத்தும் திட்டமானது அதோடு முடிந்து விடாது. அது இழந்து போனவர்களைச் சந்திப்பதில் தான் முடிகிறது. அதேபோல் நற்கிரியைகளில் ஈடுபடுவது முடிவல்ல; அது இழந்து போனவர்களைச் சந்திக்கும் ஒரு வழி யாகத்தான் இருக்கிறது.

அதன்பிறகு விதைக்கிறவன் ஆதி திருச்சபையை, அந்த எருசலேம் சபை யைப் பற்றி நினைத்தார். அப்போஸ் தலர்களின் தலைமையின் கீழ் அவர்கள் எப்படி தினந்தோறும் போதித்து தினந் தோறும் ஆத்தும ஆதாயம் செய்தார்கள் என்றெல்லாம் எண்ணினார். அவர்க ளெல்லாரும் சபை புதுப்பிக்கப்பட வேண்டுமென்று எண்ணி, அதாவது, ஊழிய வாஞ்சையுள்ள சபையாகத் தாங்கள் சபை இருக்க வேண்டுமென்று விரும்பினார்கள். ஊழிய வாஞ்சை யுள்ள சபை இழந்து போனவர்களை சந்திப்பதற்கு எப்போதும் முக்கியத்துவம் கொடுக்கும்.

அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

# பிணக்குகளை சரிசெய்தல்

## *Fixing The Frictions*

**P.C. Philomon Raja**

திருமண வாழ்க்கையில் தம்பதியினரிடையே எறமும் கருத்து வேறுபாடுகள் அல்லது பூசல்கள் குறித்தும், அதனை வசனத்தின் துணை கொண்டு சரி செய்வது குறித்தும் படிக்க நம் மனதினை ஆயத்தப்படுத்துவோம்.

ஒருவேளை நீங்கள் இவ்வாறாக எண்ணலாம். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு என்பது சகஜமான ஒன்றுதானே என்று; உண்மை தான். ஆனால், சமீபகால தகவல்களும், புள்ளி விவரங்களும் நம்மை பிரமிக்கவும், கலங்கவும் செய்கின்றன. விவாகரத்து திருமணத்தினை விட சாதரணமாகவும், மிக வேகமாகவும் நடக்கின்றன. விவாகரத்து கோருவோரில் மெத்த படித்த மேதாவிகளே அதிகம். அதிலும் கிறிஸ்தவ வாலிப பிள்ளைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற தகவல் என்னை மிகவும் கலங்கச் செய்தது.

சமாதானத்தின் தேவனுடைய பிள்ளைகள் இவ்வாறு இருப்பது எவ்வளவு வேதனைக்குரியது. இதனை கேள்விபட்ட தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கலக்கமடைவதும், தேவனுடைய சமூகத்தில் கண்ணீரோடே விண்ணப்பம் செய்வதும் இயல்புதானே. அதே வேளையில் சத்துருவானவனின் இந்த குழப்பம் தனை கையாள வேண்டியது அவசியமான ஒன்றல்லவா!.

ஆகையால், புதிதாக திருமணமானவர்களோ அல்லது திருமணமாகி மனக்கசப்புடனே வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற உங்கள் அனைவருக்கும் இந்த தியானமானது மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று நான் கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். ஏனெனில், தேவனுடைய வார்த்தை நம் சிந்தனைக்கு எட்டாத அளவு வல்லமையுள்ளது (எபி. 4:12; ஏசா. 55:9,10; யோவான் 8:32).

### I. பிணக்குகள் அல்லது பூசல்கள் வர காரணங்கள்

அன்பானவர்களே! திருமண வாழ்க்கையில் கருத்து வேறுபாடுகள் அல்லது பூசல்கள் வருவதற்கு காரணங்கள் அநேகம் உண்டு. சில குறிப்புகளை நாம் படித்து அறிந்து கொள்வோம்.

#### 1. பின்னணியில் வேறுபாடு

இரண்டு நபர்கள் குடும்ப வாழ்வில் ஒன்று சேரும் போது, இருவரும் இருவகையான கலாச்சாரத்தை, அதாவது, குடும்ப பழக்க வழக்கமுடையவர்கள் என்பதை நன்கு அறிய வேண்டும். இருவருமே வித்தியாசமான காரியங்களை செய்யும் வித்தியாசமான குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என்பதை உணர வேண்டும். ஒருவர் நகர வாழ்க்கை பின்னணியில்

இருந்து வந்தவராகவும், மற்றவர் கிராம வாழ்க்கை பின்னணி யினை கொண்ட வராகவோ இருக்கலாம். ஒருவர் படித்த வராகவோ மற்றவர் குறைவாக படித்த வராகவோ அல்லது படிக்காதவராகவோ இருக்கலாம்.

ஒருவர் சத்தமாக பாடல் கேட்பதை விரும்புவராக மற்றவர் அமைதியை விரும்புவராக இருக்கலாம். இது போன்ற அநேக பின்னணி வேறுபாடுகள் இருக்கலாம். இதனை ஒருவருக் கொருவர் நன்கு புரிதல் அவசியம். ஒருவர் குறையை மற்றவர் பரியாசம் செய்வதோ, மதிப்பு குறைவாக நடத்து வதோ அல்லது அதனை பெரிதாக்கி அவமானடைய செய்வதோ தேவனு டைய பார்வையில் மகா பயங்கரமான பெருமையின் பாவமாக இருக்கிறது. (பிலி. 2:3) " ஒன்றையும் வாதினாலா வது, வீண் பெருமையினாலாவது செய் யாமல், மனத்தாழ்மையினாலே ஒரு வரையொருவர் தங்களிலும் மேன்மை யானவர்களாக எண்ணக்கடவீர்கள். மேலும், எல்லாம் வல்ல ஆண்டவர் அடிமையின் ரூபமெடுத்து தன்னை தாழ்த்தினதை நினைவில் கொள்வோம் (பிலி. 2:4,8).

## 2. தன்மையில் வேறுபாடு

இரண்டு நபர்கள் குடும்ப வாழ்க்கையில் ஒன்று சேரும்போது, இருவரும் தங்களது தனிதன்மையில் (சுபாவங்களில்) வேறுபட்டிருக்கலாம். ஒருவர் யாவரிடமும் சகஜமாக பழகு பவராகவும், மற்றவர் கூச்ச சுபாவ முடையவராகவும் இருக்கலாம். ஒருவர் சுத்தத்தை விரும்பி வீட்டை எப்பவும் சுத்தமாக வைத்திருப்பராகவும், மற்றவர் வீட்டில் இஷ்டப்படி நடப்பராகவும் இருக்கலாம். ஒருவர் தாமதமாகவே தூங்கி தாமதமாகவே எழுபவராகவும் மற்றவர் அதிகாலையிலே எழுபவ ராகவும் இருக்கலாம். இதனை ஒருவருக்கொருவர் முதலில் ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், தேவன் இரு ஜாடிகளை அல்ல. ஜாடியையும் மூடியை யுமே ஒன்றாக இணைக்கிறார்.

இருவருமே எல்லாவற்றிலும் ஒரே சுபாவமுடையவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒருவர் தன்மையை மற்றவருக்குள் திணிக்க முயன்று தோற்றுப்போக வேண்டாம். யோபுவின் சுபாவம் தேவன் அனுமதிக் கின்ற எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வ தாகவும்; அவருடைய மனைவி சந்தோஷங்களை மட்டும் ஏற்றுக் கொள்பவராகவும் இருந்தார். யோபு 2:9,10. " அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள். அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையை யும் பெறவேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்ய வில்லை".

## 3. தவறான அணுகுமுறைகள்

தவறான அணுகு முறைகளால் கருத்து வேறுபாடு அல்லது பூசல்கள் உருவாகி பெரிதாக வளர்கிறதாயிருக் கிறது. பொருத்தமற்ற சில அணுகு முறைகள் என்னவென்று அறிய வேண்டியது அவசியமானதாகும்.

அ. வன்முறை

வன்முறை என்பது ஒருவர் தனது சக்தியை நேர்மையற்ற முறையில் மற்றவருக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பயன்படுத்துவதாகும். " நான் எவ்வளவு நேரம் தான் பொறுமையாயிருப்பேன்? விட்டேன் பாருங்க ஒரு அறை, அப்புறம் தான் அமைதியானாள் " என தனது வன்முறை செயலுக்கு நியாயம் கற்பிப்பது தேவனுடைய பார்வையில் மகா பயங்கரமானதாக இருக்கிறது. நாம் வன்முறையை பயன்படுத்தவே கூடாது! (ரோமர் 12:17, 21). "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு ".

ஆ. தெறிக்கும் வார்த்தை

உங்களுக்கு பிடிக்காததை செய்யும் போது உங்கள் ஆதங்கத்தினை வெளிப்படுத்த கடினமான வார்த்தைகளை கொட்டி தீர்ப்பது ஒரு கிறிஸ்தவரின் அடையாளம் அல்ல. அது தவறானதாகும்; அதைக் குறித்து கர்த்தர் நியாயம் விசாரிப்பார்.

மத். 12:36,37 " மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக் கொப்புவிக்க வேண்டும் என்று உங்க ளுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார் ".

II. பிணக்குகள் அல்லது பூசல்களை சரி செய்வது எப்படி?

பிணக்குகள் உண்டாவதற்கான காரணங்களை நாம் படிப்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று அதனை சரி செய்து எப்படி என அறிவதும் மிக அவசியமானதாகும்.

1. நடக்க முடியாதவற்றை எதிர்பாராதிருங்கள்

எல்லா பிரச்சனைகளுக்கும் நேர்த்தியான தீர்வு கிடைத்தவிடும் என்ற எண்ணத்தோடு பூசல்களை எதிர் கொள்ள வேண்டாம். ஏனெனில், திருமணத்திற்கு முன்பு குறைந்தது 18 முதல் 22 ஆண்டுகள் அவர்கள் வாழ்ந்த பழக்கவழக்கம், பரிமாற்ற முறை, உணர்ச்சி வெளிப்பாடு உடனே மறைந்து விடும் என்றால் அது இயலாது. நீங்கள் விரும்புவது தேவனுக்கு முன்பாக நேர்மையாக இருக்குமானால் அதற்காக ஜெபத்தோடு தேவனிடம் காத்திருங்கள். (சங். 27:4) கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.

2. மோதல்கள் மத்தியில் வாழக் கற்றுக் கொள்ளுங்கள்

பிரச்சனைகளுடன் வாழ உங்களை பழக்கிக்கொள்ளுங்கள். விலகிவிடுவதால் பிரச்சனை என்பது தீர்வது போல இருக்கும்; ஆனால், புதிய பிரச்சனைகளுக்கு அது வழிவகுக்கும். உங்கள் துணையாளரிடம் இருக்கும் நல்ல குணங்கள் சிலவற்றை மனதிலே அடிக்கடி அசைபோடுங்கள். நாம் விரும்பும்படி எல்லாம் அவரோ/அவளோ மாறிவிடமாட்டார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள். பிரச்சனை வேண்டாம் என்று ஜெபிக்காமல், இந்த பிரச்சனையை ஏற்றுக்கொண்டு சமாளித்து, தேவன் விரும்புகிற வாழ்வு வாழும்படி நாம் ஜெபிப்பதையே தேவன் விரும்புவார். நீங்கள் நடக்க வேண்டிய பள்ளதாக்கினை தவிர்த்துவிடாதீர்கள். (சங். 23:4). " நான் மரண இருளின்

பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும் ".

3. பிரச்சனைகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடுங்கள்.

நீங்கள் விவாதிக்க போகின்ற செயலின் முக்கியத்துவத்தை மதிப்பிடுங்கள்.

அ. உங்களை நீங்களே பரிசோதியுங்கள்

இந்த பிரச்சனையை கிளறுவதால் என்ன நன்மை உண்டாகும். அல்லது எவ்வளவு தீமை உண்டாகும் என்று உங்களை நீங்களே பரிசோதியுங்கள். என் துணையை பழிவாங்க நான் ஆர்வமாக இருக்கின்றேனா அல்லது அவர் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேனா என உங்கள் மனோநிலையை நீங்கள் பரிசோதியுங்கள் (மத். 7:1,5).

ஆ. கவனமாய் பேசுங்கள்.

பிரச்சனைகளை பேசுகையில் வார்த்தைகளை கவனமாக தேர்வு செய்து பேசுங்கள். எப்பொழுதுமே உங்கள் துணைவரை அற்பத்தனமானவர் என்றோ, அன்பற்றவர் என்றோ குறை கூறுவதற்கு பதில், " நீங்கள் அப்படி நடந்திருந்தால் எனக்கு பிடிக்கும் என்று மென்மையாக " கூறுங்கள். (கொலே. 4:6). " அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக ".

இ. கவனமாய் கேளுங்கள்

உங்கள் கருத்துகளை அவரிடம் பதிவு செய்வது உங்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அதேபோல அவரது பதில்களையும் நீங்கள் கவனமாக கேட்பது மிக அவசியம். நீங்கள் நினைத்தது ஒன்றாகவும், உண்மையில் நடந்தது ஒன்றாகவும் இருக்கலாம். உங்கள் துணையாளரையும் அறிவுள்ளவராக, மதிப்புள்ளவராக உங்களுக்கு நிகராக நினையுங்கள். (யாக். 1:19). ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள் ".

ஈ. இருவருக்கும் ஏற்புடைய தீர்வை நாடுங்கள்

உங்கள் இருவரையும் கர்த்தருக்கு முன் திருப்திப்படுத்தும் ஒரு தீர்வை நாடுங்கள். தவறு இருப்பவர் மன்னிப்பு கேளுங்கள். நீங்களும் மன்னியுங்கள். பிறகு மன்னித்த பழைய கதைகளை மீண்டும் தோண்டாதிருங்கள். (கொலே 3:13). " ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் ".

4. ஒரு கிறிஸ்தவர் பணிவுள்ளவர் என்பதை காண்பியுங்கள்

உறவு முறைக்கு மூலாதாரமே பணிவு தான். இது எப்பொழுதும் இருவருடைய மனதிலும், செயலிலும் இருக்க வேண்டும். (எபே. 5:21) தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

இறுதியாக....

பிரியமானவர்களே! உங்களை சுற்றி ஓடுகிற உலகம் உங்களை வேடிக்கை பார்க்கிறது. நீங்கள் அவர்களுக்கு யாரை காண்பிக்க விரும்புகிறீர்கள். உங்களையா? அல்லது, உங்களையும் என்னையும் மீட்க தன்னை பலியாக தந்த கிறிஸ்துவையா? மத். 5:16 " இவ்விதமாய், மனஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. கிறிஸ்து சொன்னதை மனதில் வைத்துக் கொள்வோம்! செயல்படுவோம்.

# நீங்கள் மற்றவர்களிடமிருந்து சிறந்ததை வெளியே கொண்டு வருகிறீர்களா? அல்லது மோசமானதை வெளியே கொண்டு வருகிறீர்களா?

# Do You Bring Out the Best or the Worst in Others?

*W.T. Allison*

கால் நூற்றாண்டுக்கு முன்பாக பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த ஒரு சமூகவியல் பேராசிரியர் தன் வகுப்பு மாணவர்களிடம் ஓர் ஆராய்ச்சியை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். அதாவது, மிக மோசமான குடிசைப் பகுதிக்கு சென்று 200 சிறுபையன்களின் சூழ்நிலையை படிக்கும்படி கேட்டுக் கொண்டார். அந்த மாணவர்கள் அந்த குடிசைப்பகுதியில் வாழ்ந்த சிறுபையன் களின் பழக்கவழக்கங்கள், வீடுகள், அவர்களுடைய கல்வி போன்றவை களைப் படித்து பிறகு அந்த சிறுபையன் களில் எத்தனைபேர் வருங்காலத்தில் குற்றவாளிகளாக மாறுவார்கள் என்று ஆய்வறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். மாணவர்களின் ஆய்வறிக்கை ஆராய்ச்சி 200 சிறுபையன்களில், 180 பேர் சிறைச் செல்வார்கள் என்று முன்னறி வித்தது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதே பேராசிரியர் மற்றுமொரு வகுப்பு மாணவர்களிடம் பழைய மாணவர்களின் கூற்றின் நம்பகத் தன்மையை உறுதி செய்ய அந்த 200 சிறுபையன்களிடம் இருப்பிடத்தைக் கண்டறியும்படி கேட்டுக் கொண்டார். அதில் பெரும்பாலான சிறுபையன்கள் கண்டறியப்பட்டனர். அந்த மாணவர்கள் ஆச்சரியப்படத்தக்க அளவில் சிறு பையன்களில் 200ல் 4 பேர் மட்டுமே சிறைக்குச் சென்றிருந்தார்கள். பெரும் பாலானோர் நல்ல குடிமக்களாக இருந் திருக்கிறார்கள்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு பார்த்த அந்த சிறுபையன்கள் இப்போது பெரியவர்களாகி விட்டார்கள். அவர்களிடம் பேசும்போது அவர்களு டைய வாழ்க்கையில் பொதுவான அம்சம் ஒன்று இருந்ததை கண்டறிந் தோம். ஒவ்வொரும் ஒரே ஆசிரியரால் போதிக்கப்பட்டார்கள். பல்கலைக்கழக சமூகவியல் வகுப்பு மாணவர்கள் அந்த ஆசிரியரின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்தனர், அந்த ஆசிரியர் எழுபது வயது மதிக்கத்தக்க ஒருவராக ஒரு மருத்துவ மனையில் இருந்தார். அந்த ஆசிரிய ரிடம் சிறுபையன்களின் சூழ்நிலை எதிராக இருந்தபோதிலும் எப்படி அவர் களைச் சிறந்த, நல்ல மனிதர்களாக மாற்றினீர்கள் என்று கேட்டபோது அவர்,

" நான் அவர்களுக்கு கொடுத்ததெல்லாம் ஒன்று தான். அது அன்பு மட்டும் தான் " என்று பதிலளித்தார்.

அன்பு, சரியாகப் புரிந்து கொள்ளப் பட்டு, பகிர்ந்து கொள்ளப்படும் போது அது வாழ்க்கையில் மாற்றங்களை உண்டாக்கும். அப்படிப்பட்ட மாற்றத்தை அச்சுறுத்தலோ, பயமோ ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. வெற்றிகரமான மனித உறவுகள் ஒரே வாக்கியமாக இவ்விதமாகக் கூறப்பட முடியும். உங்க ளிடமிருந்து சிறந்ததை எதிர்பார்க்கிற வர்களுக்காக நீங்கள் சிறப்பாகவே செயல்களை செய்வீர்கள். உங்களிடமி ருந்து மோசமானவைகளை எதிர்பார்க் கிறவர்களுக்காக நீங்கள் சிறப்பாகச் செயல்படமாட்டீர்கள்.

தேவனும் நம்மை இவ்வித மாகவே நடத்துகிறார்! நாம் பாவிகளாயி ருந்தபோது, நம்பிக்கையில்லாதவர் களாக இருந்தபோது, அவர் நம்மைப் பார்த்து அதாவது, நம் மீது நோக்கமா யிருந்து நம்மால் இன்னும் சிறப்பாகச் செய்ய முடியுமென்று எண்ணினார். நமக்குள் திறன் இருப்பதை அவர் கண்டார். அவருடைய பார்வையில் நாம் அருமையாகக் காணப்பட்டோம். அதனால்தான் அவர் நமக்காக செயல் பட்டார். அதனால் தான் அவர் தம் முடைய ஒரே பேறான குமாரனையே நமக்காக அனுப்பினார்.

தேவனுடைய பிள்ளையாக, அவருடைய குமாரானுடைய இரத்தத்தி னாலே மீட்கப்பட்டவர்களாக நீங்கள மற்றவர்களிடமிருந்து சிறந்ததை வெளிக்கொண்டுவருகிறீர்களா? அல்லது மோசமானதை வெளிக்கொண்டு வருகி றீர்களா? அன்பும், தயையும் மக்களை மாற்றும் சக்தியைப் பெற்றிருக்கின்றன. இவைகளை செயல்படுத்துவதும் எளிது! உலகத்தை மாற்ற நீங்கள் உதவுவீர் களா?

## தியானியுங்கள்

1. ஆவிக்குரிய போராட்டம் கடுமையாக இருக்கும்போது சங்கீதம் 27ஐ தியானியுங்கள்.
2. மற்றவர்களிடத்தில் காட்டும் அன்பில் குறைவுள்ளவர்களாக இருந்தால் 1 கொரி. 13ஐ தியானியுங்கள்.
3. மன்னிக்க சிரமப்பட்டால் மத்தேயு 18ஐ தியானியுங்கள்.
4. தேவனுடைய பிராணத்தைப் பற்றிய அறிவில் குறைவுள்ளவர்களாக இருந்தால் யாத். 20; மத். 23 அதிகாரங்களை தியானியுங்கள்.
5. சந்தேகத்திலும், விசுவாசக் குறைச்சலிலும் இருக்கும்போது எபிரெயர் 11,12 அதிகாரங்களை தியானியுங்கள்.

# வாழ்க்கை வாழ்வதற்கே

# Life is To Live

**Bro. Benny Martin**

நாம் வாழ்கின்ற வாழ்க்கை தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஈவு என்பதை பல நேரங்களில் மறந்து விடுகிறோம். இன்று பல வாலிபர்கள் வாழ்க்கையின் மதிப்பை உணராமல் அதை தங்கள் தவறான செயல்பாடுகளினால் சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் வாழ்க்கையே வெறுத்து விட்டது என்று சொல்லி அரைகுறையாக வாழ்ந்து தேவனுடைய ஈவாகிய வாழ்க்கையை அர்த்தமற்றதாக, வியர்த்தமாக ஆக்குகிறார்கள். அருமையானவர்களே! தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற வாழ்க்கை எவ்வளவு விலையேறப்பெற்றது என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

## I வாழ்க்கை தேவனுடைய வெகுமதி

அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்து தத்துவஞானிகளிடம் பேசும்படி அழைக்கப்பட்டபோது, அவருக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பை மிக முக்கியமான காரியங்களை அவர்களுக்கு அறிவிப்பதில் செலவழித்தார். ஆம்! வாழ்க்கையின் ஆரம்பத்தை அவர்களிடம் வலியுறுத்தினார். மேலும், அவர் எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிறவர் மெய் தேவனாகிய யெகோவா என்பதை மிக நம்பிக்கையாக உறுதிப்படுத்தினார் (அப். 17:25). பின்பு, இளம் ஊழியரான தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவன் என்று நம் சிருஷ்டிகரை நினைவுப் படுத்துகிறார் (1 தீமோ. 6:14). டார்வின் கொள்கை மனிதன் பரிணாம வளர்ச்சியில் குரங்கிலிருந்து வந்தான் என்று சொல்கிறது. அப்படியென்றால், பரிணாம வளர்ச்சியில் வேறொரு ஜீவராசியாக மனிதன் இந்நேரம் மாறியிருக்க வேண்டுமே, நாம் இன்றும் குரங்குகளை எல்லாம் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம். தேவனால் குரங்குகளாக படைக்கப்பட்டவைகள் குரங்குகளாகத்தான் இருக்கின்றன; தேவனால் மனிதனாக படைக்கப்பட்ட மனிதன் மனிதனாகத்தான் இருக்கின்றான். மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான். வேறெந்த சிருஷ்டியும் தேவ சாயலில் படைக்கப்படவில்லை (ஆதி. 1:26,27). எனவே தான், ஒரு மனிதனுடைய உயிரை எடுக்கும் உரிமை எந்தச் சூழ்நிலையிலும் மனிதனுக்கு கிடையவே கிடையாது. வாழ்க்கை பரலோகத்திலிருந்து தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட வெகுமதி என்கிற உண்மையை நாம் ஆழ்ந்து சிந்திக்கும் போது மனிதன் இப்பூமியில் சிருஷ்டிக்கப்பட்டதின் நோக்கத்தை சிந்திக்காமல் இருக்கவே முடியாது. ஏசாயா மனிதன் தேவ மகிமைக்கென்று சிருஷ்டிக்கப்பட்டான் என்று சொன்னார்

(ஏசாயா 43:7) அப்படியிருக்கும் போது ஏன் லட்சக்கணக்கான மக்கள் தங்களுக்கும் யெகோவாவுக்கும் சம்மந்தமில்லாதது போல் வாழ்கிறார்கள்? சாலொமோன் ஞானி தன் தள்ளாடும் வயதில் தான் இப்பூமியில் இருப்பதற்கான நோக்கத்தைத் தேடி ஆராய்ந்தார்கள். அவர் தன் வாழ்க்கையை திரும்பிப் பார்க்கும்போது, தன் இளவயதில் மகிழ்ச்சியைப் பெறுவதற்காக சில மதியீனமான காரியங்களில் இறங்கியதை நினைத்து நொந்து போகிறார். சூரியனுக்குக் கீழே வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிய அவர் எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வியில் போய் முடிந்தது. கடைசியாக, மனித வாழ்வின் நோக்கம் தேவனுக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதுதான் என்கிற முடிவுக்கு வந்தார் (பிரசங்கி 12:13); மனித இனம் வேறு எவ்விதத்திலும் திருப்தி அடையவே முடியாது. எனவே, பிரிய மானவர்களே, தேவனுடைய ஈவாகிய வாழ்க்கையை பொக்கிஷமாகக் கருதுங்கள். அதை உங்கள் சிருஷ்டிகரை மகிமைப்படுத்தப் பயன்படுத்துங்கள்; அதற்கான முயற்சியில் நீங்கள் ஈடுபடும்போது இம்மையிலும், மறுமையிலும் ஆசீர்வாதமான ஒன்றை கண்டடைவீர்கள்.

## II வாழ்க்கை என்பது ஒருமுறை அனுபவம்

நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் வாழ்க்கையின் மற்றுமொரு நிலை ஒருவர் வாழ்க்கையை ஒருமுறைதான் வாழ்கிறார் என்பதாகும். அதாவது, நமக்கு இன்னொரு மனிதப் பிறவி இவ்வுலகில் கிடையாது. சில மதங்களில் போதிக்கப் படுவது போல் மறுஅவதாரம் என்பதெல்லாம் இல்லை. மரணம் நம் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒன்றாக இருக்கிறது. இம்மரணமும் கூட மனிதன் கலகத்தினால் ஏற்பட்ட விளைவுதான் (ரோமர் 5:12). மரணம் என்பது மனிதனுக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறபடியால் நாம் வாழும் போது தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது அடுத்த வாழ்க்கைக்கு அதாவது நித்திய ஜீவனை சுதந்தரிப்பதற்கு நம்மை நிச்சயப்படுத்திக் கொள்கிறோம். இப்பூமியில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை நம் நித்தியத்திற்காக ஆயத்தப்படும்படி யாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யம் தங்களுடைய இருதயங்களை இலகுவாக்க தேவன் கொடுத்த சிட்சைகளை கண்டுகொள்ளாமல் இருந்தபோது, ஆமோஸ் தீர்க்கதரிசி அவர்கள் மேல் வரவிருக்கும் பயங்கரமான நியாயத்தீர்ப்பைக் குறித்து அவர்களை எச்சரித்தார். " இஸ்ரவேலே உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு " (ஆமோஸ் 4:12). நாம் இவ்வாழ்க்கை முடிந்து இனி வரும் உலகில் பரலோகத்தை அல்லது நரகத்தைத் தெரிந்தெடுப்பதற்கு ஓர் ஆயத்த களமாகத்தான் இப்பூமி இருக்கிறது.

நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பத்து கன்னிகைகளைப் பற்றிய உவமையைச் சொன்னார். அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்க ளென்றும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களென்றும் சொன்னார். புத்தியுள் கன்னிகைகள் என்று இயேசுவால் அழைக்கப்பட்டவர்கள் ஆயத்தமாயிருந்த கன்னிகைகளாயிருந்தார்கள். மீதமிருந்த புத்தியில்லாத கன்னிகைகள் ஆயத்த மில்லாதவர்களாயிருந்தார்கள் (மத்தேயு 25:1,13). தேவனுக்கும், மனிதனுக்கும் ஜென்ம விரோதியான பிசாசு மனித இனத்திற்கு ஒரு மாபெரும் தீமையை செய் திருக்கிறான். அதென்னவென்றால் நித்தியத்திற்கு இப்பொழுதிருந்தே ஆயத்தமாக வேண்டிய அவசியமில்லை அதற்கு இன்னும் நாள் இருக்கிறது என்று

மனித மனதில் வித்திட்டு நம்மை ஆயத்தமாகவிடாமல் முடக்கிப்போட்டிருக்கிறான். உதாரணமாக, கத்தோலிக்க உபதேசத்தின்படி இப்பூமியில் பாவம் செய்து தங்களை சுத்திகரித்துக் கொள்ள முடியாதவர்களின் ஆத்துமாக்கள் பரலோகம் போவதற்கு உதவியாக சுத்திகரிப்பு நிலையம் என்று ஓர் இடம் இருப்பதாகவும் அங்கே போய் அவர்கள் தங்களை முழுமையாக சுத்திகரித்து பரலோகம் போவதற்கு தங்களை ஆயத்தமாக்கிக் கொள்ள முடியும் என்றும் உபதேசம் இருக்கிறது. ஆனால், வேதாகம உபதேசத்தின்படி இப்பூமியில் நித்தியத்திற்கு தங்களை ஆயத்தமாக்காத வர்களுக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படும் என்று வேதாகமத்தில் எங்குமே சொல்லப்படவேயில்லை. அதென்னவென்றால், இப்பூமியில் ஒருவர் தேவக் கட்டளையாகிய ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படியவில்லையென்றால் அவருடைய இரட்சிப்பு அதோகதி அல்ல. அந்த நபருடைய மரணத்திற்குப்பின் கூட இப்பூமியில் உயிரோடிருக்கும் மற்றொருவர் அவருக்குப் பதிலாக ஞானஸ்நானம் பெற்றால் மரித்தவருக்கு இரட்சிப்பு கிடைக்கிறது என்று போதிக்கிறார்கள். ஆனால், இவை களுக்கு ஆதாரமாக பூதகண்ணாடி வைத்து அவர்கள் தேடினாலும் வேதத்தில் எதையும் காணவே முடியாது.

இப்பூமியில் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை விலையேறப்பெற்றது; அதன் மதிப்பை உணராமல் இருக்க வேண்டாம்; அற்பமான காரியங்களுக்காக நாம் அதை வீணடிக்க வேண்டாம். அது உங்கள் கையை விட்டு நழுவி உங்களை ஆயத்த மற்ற நிலையில் விட்டுவிட அனுமதிக்க வேண்டாம். நம் வாழ்க்கை தேவனுடைய ஈவாக இருக்கிறபடியால் அதை அரைகுறையாக அல்ல முழுமையாக தேவனுக்குப் பயந்து வாழ்ந்தால் என்றென்றும் அழிவே இல்லாத நித்திய வாழ்வை இனிவரும் வாழ்வில் அதாவது பரலோகில் தேவன் தந்திடுவார். நித்திய வாழ்வை சுதந்தரிக்க நீங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளையும் தேவன் தாமே வாய்க்கச் செய்வாராக!

## கலாத்தியர் நிருபத்தில் ஆவிக்குரிய மனிதன்

1. ஆவிக்குரிய மனிதன் விழுந்து போன சகோதரனை சீர்பொருந்தப் பண்ணுவான் (6:1)
2. ஆவிக்குரிய மனிதன் மற்றவர்கள் தங்கள் பாரங்களை சுமக்க சந்தோஷமாக உதவுவான்
3. ஆவிக்குரிய மனிதன் தனக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று எண்ணமாட்டான் (6:3)
4. ஆவிக்குரிய மனிதன் தன் ஆவிக்குரிய கடமைகளுக்கு பொறுப்பேற்கிறான் (6:5).
5. ஆவிக்குரிய மனிதன் விதைத்தல் மற்றும் அறுத்தல் விதியை நன்றாகப் புரிந்து கொள்கிறான் (6:7,8)

# பேதுருவின் குறைகள்

## Peter's Imperfections

*O.P. Baird*

அப்போஸ்தலனாகிய பேதுரு நம்மைப் போல் அதிக மனிதத் தன்மை உடையவராக காணப்பட்டார். அவரிடம் பலமும், பலவீனமும், காணப்பட்டது. ஆனால், இயேசுவைக் கிறிஸ்துவாகவும், தேவனுடைய குமாரனாகவும் ஏற்றுக் கொள்ளுகிற காரியத்தில் அதிக விசுவாச முடையவராகக் காணப்பட்டார். அதனால் தான் பேதுருவின் தவறு களைப் புரிந்து கொள்ளுதலை இயேசுவால் திருத்த முடிந்தது. பேதுருவை பலப்படுத்தவும் முடிந்தது. நாமும் அவரிடம் விசுவாசமாயிருந்து, அவருடைய வார்த்தையிலிருந்து அறிவுரைகளை எடுத்துக்கொண்டால் கிறிஸ்து நமக்கும் பேதுருவுக்கு செய்த விதமாகவே செய்வார். பேதுருவின் குறைகளிலிருந்து சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ளமுடியும்.

### பேதுரு இயேசுவைக் கடிந்து கொள்ளுதல்

ஒரு சந்தர்ப்பத்தில் பேதுரு உண்மையாகவே இயேசுவை கடிந்து கொண்டார். இந்தச் சம்பவம் (மத். 16: 21,23) வசனத்தில் இடம் பெற்றிருக் கிறது. இயேசு தாம் எருசலேமுக்குப் போய் பாடுகள்பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார். " அப்பொழுது பேதுரு அவரைத்தனியே அழைத்துக் கொண்டு போய் ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான். அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் " என்றார்.

இயேசு வனாந்தரத்தில் சோதிக் கப்பட்டபோது சாத்தான் இயேசுவிடம் "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன் " என்று சொன்னான். இயேசு தம்முடைய நோக்கத்திலிருந்து பிசாசு தம்மை திருப்பப் பார்ப்பதாகவும், அப்படி திசை திருப்ப பிசாசு பேதுருவைப் பயன்படுத்து வதையும் உணர்ந்து கொண்டார். அந்நேரத்தில் பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் இயேசு பூமிக் குரிய ராஜாவாக எருசலேமை ஆளுவார் என்று நினைத்தார்கள். இயேசுவுக்கு எது ஏற்றது என்பது இயேசுவை விட தனக்கு நன்றாகத் தெரியும் என்று நினைத்தார். ஆனால், சில நாட்களுக்கு முன்பாக தான் வெளிப்படுத்தின விசுவாசத்திற்கு அது எதிராயிருந்தது.

தேவன் தம்முடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருக்கிற போதனைகளையும், விதிமுறைகளையும் அறிந்து கொள்வதை நாடாமல் தங்கள் எண்ணங்களையும், திட்டங்களையும் நினைப்பது ஜனங்களுக்கு எளிதான காரியமாயிருக்கிறது. நாம் உலகத்தாரைப் போல சிந்திக்காமல், கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இருக்க வேண்டும். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் " (ரோமர் 8:6).

## மறுரூப மலையில் பேதுரு

இயேசு, பேதுரு யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய மூவரையும் கூட்டிக் கொண்டு உயர்ந்த மலைக்குப் போனார். அங்கே அவர் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப் போல் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும், எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள் (மத். 17: 1,3). அவர்கள் சீக்கிரமாக சம்பவிக்கப் போகிற இயேசுவின் மரணத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கே அவருடைய சத்துருக்கள் அவருக்கு எதிராக நிறைவேற்றப் போகிற மரணம் என்றில்லாமல், அவர் எருசலேமிலே நிறைவேற்றப் போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள் (லூக்கா 9:31). இயேசுவின் மரணம் அவ்விதமாக பேசப்பட்டதன் காரணம், இயேசு ஜனங்களை தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கும்படி வந்தார். அதை நிறைவேற்றுவதற்கு இயேசுவின் மரணம் அவசியமாக இருந்தது. அந்தச் சூழ்நிலையை இயேசு தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார், ஏற்ற நேரம் வரும் வரை அவருடைய சத்துருக்களால் அவரைக் கொல்ல முடியவில்லை. மற்றுமொரு சந்தர்ப்பத்தில் இயேசு இவ்விதமாகச் சொன்னார். " நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார், ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன் என்றார் " (யோவான் 10:17,18). ஓ! அவர் நம்மை எவ்வளவாய் நேசிக்கிறார்.

சீஷர்கள் மறுரூபமாகி மோசேயோடும், எலியாவோடும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். "அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி; ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான். அவன் பேசுகையில் இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று (மத். 17:4,5). அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசுவைத் தவிர வேறொருவரையும் காணவில்லை (வச. 8).

மறுரூபமலையில் மூன்று சீடர்களின் அனுபவம் மோசேயும், எலியாவும் மற்ற தீர்க்கதரிசிகளும் தேவனுடைய செய்தித் தொடர்பாளர்களாக இருந்தார்கள். அவர்கள் வரவிருந்த இயேசுவை சுட்டிக்காட்டி அவருக்கு வழியை ஆயத்தமாக்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது மனுஷர் தங்களுக்கான தேவ சித்தத்தை இயேசு மூலமாக கற்றுக் கொள்ள வேண்டும். அவருக்கு முன்பாகச் சென்றவர்களிடமிருந்து அல்ல. இயேசுவின் வார்த்தை பழைய ஏற்பாட்டில் அல்ல புதிய ஏற்பாட்டில் தான் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மையானது எபிரெயர் புத்தகத்திலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் " (எபி.1:1,2). பேதுருவுக்கு இது மோசேயையும், எலியாவையும் கனப்படுத்த உத்தேசித்த போது புரியவில்லை.


இருந்தபோதிலும் பேதுரு தன் தவறான எண்ணத்தை இயேசுவிடம் வெளிப்படுத்தின நிலையிலும் இயேசுவுக்கு தன்னை ஒப்புக் கொடுத்திருந்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் இங்கே மூன்று கூடாரங்களைப் போடுவோம் " என்றார். பேதுருவின் விசுவாசம் அவரை கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிய வைத்தது.

## ஒன்றின் வல்லமை

1. ஒரு நல்ல சமாரியன் எரிகோ சாலையில் காயப்படுத்தப்பட்ட மனிதனை காப்பாற்றினான் (லூக்கா 10)
2. ஒரு வயதான மனிதன் (நோவா) மனித இனம் முற்றிலும் அழியாமலிருக்கக் காரணமாயிருந்தார் (ஆதியாகமம் 6; எபி. 11:7)
3. தனக்கு தகுதியில்லை என்று கருதிய ஒரு மனிதன் (மோசே) பார்வோனை எதிர்கொண்டு இஸ்ரவேலர்களை வழிநடத்தினார் (யாத்திராகமம் 3)
4. ஒரு பெண் (எஸ்தர்) காலகாலமாக கடைபிடிக்கப்பட்ட பாரம்பரியத்தை உடைத்தெறிந்து, ராஜாவின் சிங்காசனத்திற்கு போய், ஒட்டுமொத்த சேத்தையும் இனப்படு கொலையிலிருந்து காப்பாற்றினாள் (எஸ்தர் 4)
5. ஒரு சிறுபையன் கொண்டு வந்த ஐந்த அப்பமும், இரண்டு மீனும் ஐயாயிரம் பேரை போஷித்தது (யோவான் 6)

இயேசுவின் வாழ்க்கையையும், மரணத்தையும் உற்று கவனிப்பவர்கள் உண்மையாகவே அவர் யார் என்று முடிவெடுக்கிற விஷயத்தில் முதல் நாளிலிருந்தே பிரிந்துதான் காணப்படுகிறார்கள். சிலர் அவரை இம்மானுவேலாக பார்த்தார்கள். இம்மானுவேல் என்றால் " தேவன் நம்மோடிருக்கிறார் " என்று பொருள். ஆனால், ஏரோதும் அவனுடைய ஆதரவாளர்களும் அவரை " அழிக்க " வகை தேடினார்கள், ஒருவேளை தன்னுடைய ராஜ்யபாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுமோ என்கிற பயத்தால் இயேசுவைக் கொலை செய்ய வகை தேடியிருக்கலாம் (மத். 1:23; 2:13).

பேதுரு, இயேசுவைப் பற்றிச் சொல்லும் போது, " நீர் ஜீவனுள்ள தேவனுடைய கிறிஸ்து " என்று ஆணித்தரமாகச் சொன்னார். அதேநேரத்தில் மற்ற சீஷர்கள் அவரை யோவான் ஸ்நானனாகவும், எலியாவாகவும், எரேமியாவாகவும் அல்லது தீர்க்கதரிசிகளுள் ஒருவராகவும் பார்த்தார்கள் (மத். 16:13,16).



# வித்தியாசமாக வேடிக்கை பார்ப்பவர்கள்

## Bystanders in Contrast

*Michael L. King*

இயேசு தம்முடைய ஊழியத்தைத் தொடங்கியபோது, தம்முடைய வார்த்தைகளை அற்புத அடையாளங்களினால் உறுதிப்படுத்தினார். " அவருடைய சீஷர்கள் அவரிடம் விசுவாசம் வைத்தார்கள் " (யோவான் 2:11). ஆனால், பரிசேயர்கள், இயேசுவின் கிரியைகளைப் பார்த்தபோது " பிசாசுகளின் தலைவனாகிய பெயெல் செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறான் " என்று சொன்னார்கள். ஆனால், ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு; தாவீதின் குமாரன் இவர் தானோ? என்றார்கள். இருசாரார் இடையே காணப்பட்ட பிரிவினை இயேசுவை இவ்விதமாகச் சொல்லத் துரிதப்படுத்தியது. " தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலை நிற்கமாட்டாது " (மத். 12:22,25).

இயேசுவின் பூமிக்குரிய சஞ்சாரத்தில் மற்றெந்த காலகட்டத்தையும் விட அவருடைய சிலுவை மரணத்திற்கு முந்தைய கடைசி வாரத்தில் அதிக குழப்பங்கள் ஏற்பட்டன. சிலர் " அவர் சிலுவையில் அறையப்பட வேண்டும் " என்று சொன்னார்கள். மற்றவர்கள் " ஏன், அவர் என்ன பாவம் செய்தார் "? என்றார்கள். அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது வேதபாரகரும், பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் அவரை தேவனுடைய குமாரனாக ஏற்க மறுத்து, சிலுவையிலிருந்து இறங்கி வரும்படி சவால் விட்டார்கள். இருந்தபோதிலும், தூரத்தில் அவருக்கு உறுதியான ஆதரவாளர்கள் அநேகர் இருந்தார்கள். குறிப்பாக, கலிலேயாவிலிருந்தே அவருக்குப் பின் சென்று ஊழியம் செய்த பெண்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும், யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் அவர்களோடு இருந்தார்கள் (மாற்கு 15:40,41).

அந்த ஸ்திரீகள் இயேசுவைப் பற்றிய உறுதியான தீர்மானம் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களை சிலுவைக்கு முன் கடைசிவரை நின்றவர்களாகவும், இயேசு உயிர்த்தெழுந்தபோது கல்லறைக்கு முதலில் சென்றவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் நிச்சயமாகவே சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த மற்ற கள்வர்களுடைய வேறுபட்ட அபிப்பிராயங்களுக்கு சாட்சிகளாயிருந்தார்கள். ஒருவன் சந்தேகமாக " நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள் என்று அவரை இகழ்ந்தான் ". அதே நேரத்தில் மற்றுமொரு கள்வன் " ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் " என்றான் (லூக். 23:39,43). கடைசியாக, உற்றுக் கவனிப்பவர்களால் இயேசுவின் சரீரம் உண்மையாகவே உயிர்ந்தெழுந்ததென்றோ, களவு போய் விட்டதென்பதையோ ஏற்றுக்கொள்ள முடியவில்லை (மத். 28:78; 12,13).

இப்போது நாம் இயேசுவின் வாழ்க்கை மற்றும் மரணத்தை ஒட்டி நடந்த வரலாற்றுச் சம்பவங்களிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகள் பிரிந்து இருக்கிறோம். நாம் இந்தச் சம்பவத்தை உற்று நோக்கும்போது இந்தச் சிலுவைக் காட்சியை பார்த்து அவர்களுடைய புரிந்து கொள்ளுதலில் ஏதாவது வித்தியாசத்தைக் காண்கிறீர்களா? ஏனென்றால், இப்படிப்பட்ட வித்தியாசங்கள் தான் பிரிவினையை உண்டு பண்ணுகிறது. அவிசுவாசிகளையும் குழப்பத்தில் தள்ளுகிறது. பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் பிரிவினையைத் தவிர்க்கும்படி

அறிவுறுத்துகிறார். "ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தி யிருக்கவும் வேண்டுமென்று புத்திசொல்லுகிறேன் " (1 கொரி. 1:10). யாக்கோபு தன் வாசகர்கள் தங்கள் வாயைத் துதித்தலுக்கும், சபித்தலுக்கும் பயன்படுத்த அனுமதித்த தற்காக கடிந்து கொள்கிறார் (யாக். 3:10). நம் வாழ்க்கையில் நாம் காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டிய நிலையில் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டிய நிலையில் இருப்பதாக உணர்கிறோமோ?

எபிரெய எழுத்தாளர் நாம் கிறிஸ்துவின் மூல உபதேசங்களை விட்டு, பூரணராகும்படி கடந்து போக வேண்டும் என்று வலியுறுத்துகிறார். நம்மால் அப்படிச் செய்ய முடியவில்லையென்றால், கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவர் களுக்கும், நமக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஏனெனில், ஒரு தரம் பிரகாசிக் கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும் மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறார்கள்! " நாம் பூரணராகும்படி கடந்து போவோமாக " (எபி. 6:1,6).

நாம் கிறிஸ்துவினிடத்தில் ஆத்துமாக்கள் கொண்டு வருவதில் துடிப்புள்ளவர் களாயிருக்கிறோமா? அல்லது நம் பிடிவாதமான, பிரிவினை ஆவியினாலே மக்களை துரத்துகிறவர்களாயிருக்கிறோமோ? சிலுவையின் அருகில் நாம் எப்படிப் பட்ட குற்றவாளிகளாக இருக்கிறோம்?.

## பிரித்தெடுக்கப்பட்ட நிலை

1. தேவன் ஆபிரகாமை இஸ்ரவேலர்களின் தகப்பனாகத் தெரிந்து கொண்டபோது, அவரை தேவனற்ற சூழ்நிலையிலிருந்து பிரித்தெடுத்தார் (ஆதி. 12:1)
2. இயேசு இவ்வுலகத்திற்கு வந்தபோது அவர் பாவிகளை நேசித்தார். ஆனால், பாவமான வாழ்க்கையை நடத்தாமல் தன்னை பிரித்தெடுத்துக் கொண்டார் (எபி. 7:26)
3. கிறிஸ்தவம் எல்லா மார்க்கங்களிலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்ட ஒன்றாக, தனித்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது (யோவான் 14:6)
4. கிறிஸ்தவர்கள் பாவம் நிறைந்த இவ்வுலகத்திலிருந்து தங்களை பிரித்தெடுத்துக் கொண்டு அசுத்தமானதைத் தொடாதிருக்க வேண்டும் (2 கொரி. 6:17).

# மரித்தவர்களுக்கு தயவு

## Kindness To The Dead

*Glenn Colley*

விதவைகளாகிய நகோமியும், ரூத்தும் பெத்லெகேமுக்குப் பயணித்து போவாசின் தர்ம காரியங்களை அனுபவிக்கத் தொடங்கியபோது, நகோமி போவாசின் நற்குணத்தை இப்படிப்பட்ட வார்த்தைகளினால் புகழ்ந்தாள் : "உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தவர்களுக்கும் தயவு செய்கிற கர்த்தராலே அவன் ஆசீர்வதிக்கப்படுவானாக" என்று. (ரூத். 2:20)

உயிரோடிருக்கிறவர்களுக்கு தயவு செய்து என்பதைப் புரிந்து கொள்வது சுலபமானது. ஆனால், போவாஸ் மரித்தவர்களுக்கு எப்படி தயவாயிருந்தான்? நிச்சயமாகவே, நகோமி மற்றும் ரூத்தின் தேவைகளை சந்தித்ததின் மூலமாக போவாஸ் அவர்களுடைய இறந்துபோன கணவர்களான எலிமெலேக்கு மற்றும் மக்லோனின் நினைவுகளையும், ஆசைகளையும் கனப்படுத்தினான். அவர்களுடைய மனைவிகளை விசாரித்தபடியால் மரித்தவர்களுக்கும் அவர் தயவு செய்தார்.

மரித்தவர்களுக்கு தயவு செய்தல் என்பது நாம் மரிக்கும் போது நாம் விட்டுச் செல்கின்ற நம் துணை, பிள்ளைகள் அல்லது பெற்றோர்களை இளகிய மனதோடு விசாரிக்கும் கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்துகிறது. அது இனிமையானது. நம் ஆண்டவரும் சிலுவையில் கடும் வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது தம்முடைய மரணத்திற்குப் பிறகு தாயாரை பராமரிக்கும்படி யோவானை கேட்டுக் கொண்டார் (யோவான் 19:26, 21). சில விருப்பங்கள் இதைவிட ஆழமானதாகவும் அல்லது உணர்ச்சி வசப்படத்தக்கதாயும் இருக்கிறது.

பரிசுத்த வேத வாக்கியங்கள் விதவைகளை விசாரிப்பது சம்மந்தமாக பல கட்டளைகளை உள்ளடக்கியிருக்கின்றன. ஏனென்றால், கணவன் அல்லது தகப்பன் மரிக்கும்போது நிர்கதியாய் நிற்கிற விதவைகளை நாம் எப்படி நடத்துகிறோம் என்பதைக் குறித்து நம் கர்த்தர் மிகவும் கவனமாக இருக்கிறார். மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு முன்பாகவே எபிரெய விதவை ஒருத்திக்கு தன் கணவனால் குழந்தைகள் இல்லையென்றால் இறந்து போன தன் கணவனுடைய சகோதரனை மணந்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தாள், அவள் பராமரிக்கப்படும்படியும், மணந்து கொண்டு பிள்ளைகளை வளர்க்கும்படியும் இவ்விதமாக அனுமதிக்கப்பட்டாள் (ஆதி. 38: 6,11) உபாகமம் 25:5,7 வசனங்கள் இதைக் கட்டளையாக இட்டு, சகோதரனுடைய கடமை என்றும் எடுத்துக் கூறுகிறது (உபா. 25:5,7).

யாத். 22:22,23 வசனங்கள் ஒரு ஸ்திரீயின் கணவன் மரிக்கும்போது அந்த ஸ்திரீயின் நலன்களைப் பாதுகாக்க சீயோனிலிருந்து ஒரு தகப்ப னுடைய பார்வையில் கர்த்தர் காண்ப தைத் தான் காட்டுகிறது. விதவை யையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமல் இருப்பீர் களாக. அவர்களை எவ்வளவாகிலும் ஒடுக்கும்போது, அவர்கள் என்னை நோக்கி முறை யிட்டால், அவர்கள் முறையிடுதலை நான் நிச்சயமாய்க் கேட்டு உங்களைப் பட்டயத்தினால் கொலை செய்வேன் என்று தேவன் சொன்னார். " உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனு மாயிருக்கிறார். அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல; " அவர் திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைக்கும் நியாயஞ் செய்கிறவரும் அந்நியன் மேல் அன்பு வைத்து அவனுக்கு அன்ன வஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக் கிறார் " (உபாகமம் 10:17,18).

நம் ஆண்டவர் துன்மார்க்க மான யூதர்களை கடுமையாக கடிந்து கொள்ளும்போது, " மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்; இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள் " என்று (மத். 23:14). நிச்சயமாகவே, மற்றவர்களின் வீடுகளைப் பட்சித்துப் போடுவதோ அல்லது பிறரை ஏமாற்று வதோ பாவந்தான். ஆனால், இங்கே இயேசு குறிப்பாக அவர்கள் விதவை களுக்குச் செய்ததை சுட்டிக் காட்டுகிறார்.

நம்முடைய காலத்தில் தேவன் விதவைகளை எந்த அளவு விசாரிக் கிறார்? நிச்சயமாகவே குறைவாக இல்லை. உத்தம விதவைகாகிய விதவை களைக் கனம் பண்ண வேண்டும் என்று பவுல் நமக்குப் போதிக்கிறார் (1 தீமோ. 5:3,5). " ஆதித்திருச்சபையிலிருந்த விதவைகள் தங்கள் வறுமை மற்றும் தேவை காரணமாக கிறிஸ்தவர்களு டைய செலவில் பராமரிக்கப்பட்டார்கள். அது இன்றும் பொருத்தமான, சரியான ஒன்றாக இருக்கிறது. நாம் திக்கற்றப் பிள்ளைகளையும், விதவைகளையும் விசாரிக்கவில்லையென்றால் மாசில் லாத சுத்தமான பக்தியை நாம் நடை முறைப்படுத்தாதவர்களாக இருப்போம். திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும்; உலகத்தால் கறைபடாத படிக்குத்தன்னைக் காத்துக் கொள்ளுகிற துமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக் கிறது " (யாக். 1:27).

நகோமி போவாசின் நற் குணத்தை புகழ்ந்ததன் மூலமாக விதவைகளை நாம் விசாரிக்க வேண்டும் என்கிற ஒரு தூண்டுதலை நமக்குள் உண்டாக்கியிருக்கிறார். நாம் விதவை களை விசாரிக்கும் போது நாம் உயிரோடி ருக்கிறவர்களையும் மரித்தவர்களை யும் விசாரிக்கிறோம்.

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

ஒரு நாள், நெடுஞ்சாலையில் நான் என் நண்பரோடு வாகனத்தை ஓட்டிச் சென்று கொண்டிருந்தேன். வேகம் காட்டும் கருவியை நான் பார்த்தபோது வேக வரம்பை மீறி வேகமாக நாங்கள் சென்று கொண்டிருந்ததை கவனித்தேன். வாகனம் மிக வேகமாக சென்று கொண்டிருப்பது போல் நான் உணரவில்லை. 90 கி.மீ. வேகத்தில் போய்க் கொண்டிருப்பது போல் தான் எனக்குத் தோன்றியது. என் நண்பர் வாகனம் எவ்வளவு வேகமாக போய்க் கொண்டிருக்கிறது என்பதை வேகம் காட்டும் கருவியில் கண்டு சிரித்தார். " நீங்கள் மிக வேகமாகச் செல்கிறீர்கள் " என்றார் ஒரு பெரிய சிரிப்புடன்.

இவ்வுலகமானது சூறாவளி போன்ற செயல்பாடுகளால் சிக்கித் தவிக்கிறது. நாம் மிக அவசரமான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் மிகவும் களைப்புடன் படுக்கையில் போய் விழுகிறோம், ஒரு புதிய நாளைக் காணவும் அதிக வேலைகளைச் செய்யவும் சீக்கிரமாக எழுகிறோம். நாம் தொலைபேசி அழைப்பு களை குவித்துக்கொள்வதில் திருப்தி அடை வதில்லை. இப்போதெல்லாம் நாம் எங்கெல்லாம் போகிறோமோ அங்கெல்லாம் அலைபேசியையும் எடுத்துச் செல்கிறோம். நம் பிரச்சினையை அதிகப்படுத்தவே அவைகளை நாம் எடுத்துச் செல்கிறோம்.

இந்த அவசர உலகில் நம் பிள்ளை களும் சிக்கிக்கொள்கிறார்கள். அவர் களுக்கு பள்ளியில் இசைப் பயிற்சியும், விளையாட்டு பயிற்சியும், நாடகம், பாடல் போன்ற பயிற்சிகள் தொடர்ந்து இருக் கின்றன. அவர்கள் தங்கள் பங்களிப்பை ஆற்றும்படி ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அவசரமாக போகச் சொல் கிறோம்.

நாம் அதிவேகமாக ஆகி விட்டோம். நம் வாழ்க்கை எத்தனை வேகமாக மாறிவிட்டது என்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். நாம் அதிக மான வேலைகளைச் செய்ய குறைவான நேரமே நம்மிடத்தில் உண்டு என்பதை அறிந்திருக்கிறோம். நமக்கு உடற்பயிற்சி செய்வதற்கு நேரமில்லை, சரியான ஆகாரத்தைச் சாப்பிட நேரமில்லை. அதிவேக உணவகங்கள் எவ்வளவாய்



**அமர்ந்திருங்கள்**

Be Still

***Jessie Granville***

எண்ணிக்கையில் பெருகியிருக்கிறது என்பதை எப்படி விளக்குவீர்கள்? நம் நண்பர்களுடன் பேசுவதற்கு நமக்கு நேரமில்லை. நம் குடும்பங்களோடு செலவிட நமக்கு நேரமில்லை. அதைவிட பரிதாபம் என்னவென்றால், ஜெபிக்க நமக்கு நேரமில்லை. தேவனோடு ஐக்கியப்பட நமக்கு நேரமில்லை. நமக்கு தேவ காரியங்களுக்கு நேரமே இல்லை.

நாம் மிகவும் சோர்வடைகிறோம். நாம் வீட்டிற்கு வந்தவுடனேயே தொலைக்காட்சிக்கு முன்பாகப் போய் விழுகிறோம். நம்மால் உணவு தயார் செய்யவே முடிவதில்லை. நாம் உணர்வற்ற நிலையில் நம் வேலையை செய்ய வேண்டும், செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டே முட்டாள்தனமாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மூழ்கிப்போகிறோம். நம் வேதாகமத்தை நாம் வாசிக்க வேண்டும், படிக்க வேண்டும் என்று நமக்குத் தெரியும். ஆனால், நம் மனம் களைப்பால் உணர்வற்றுப் போகிறது.

சில உறுதியான ஆத்துமாக்கள் ஜெபிக்க அமைதியான நேரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அதிகாலையில் எழுந்தருக்கப் பழகிவிட்டார்கள். மற்றவர் களோ தாமதமாக படுக்கைக்குச் செல்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும், எனக்கு பயமாக இருக்கிறது. நம்மில் பலர் ஆவிக்குரிய பிரகாரமாக எதையுமே செய்வ தில்லை. எனவே, சபையானது எதை விசுவாசிக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள முழுமையாகப் பிரசங்கியாரையும் சகோதரர்கள் எழுதும் கட்டுரை களையும் சார்ந்திருக்கும் அளவிற்கு மறுபடியும் வழிவிலகிச் சென்றிருக்கிறது. நாம் தொடர்ந்து பழைய பாரம்பரியங்களை பிடித்துக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், அந்த சகோதரர் நாம் மாறவேண்டும் என்று சொல்கிறபடியால் நாம் புதிய பாரம் பரியங்களை பற்றிக் கொள்கிறோம். நாம் மறுபடியும், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிற காலத்தில் இருக்கிறோம் (எபே. 4:14).

சமநிலையை நாம் எப்படித் திரும்பப் பெறுவது? இவ்வுலகம் நம்மை நாள் முழுவதும் பின்னே இழுக்கிறது. நம் சகோதரர்கள் இடது புறமும், வலது புறமும் நம்மை நாள் முழுவதும் இழுக்கிறார்கள். மறுபடியும் நாம் அமர்ந்திருக்க கற்றுக் கொள்வதற்கான நேரம் இது. " நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் " (சங். 46:10).

" மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? " (மத். 16:26). நாம் அவசர அவசரமாக காரியங்களைச் செய்து எதை சாதித்தோம்?

இவ்வுலக வாழ்க்கை மாத்திரம் நம் நம்பிக்கையாக இருந்தால் நம் பரபரப்பான செயல்பாடுகளுக்கு ஓரளவு அர்த்தம் இருக்கும். நாம் இப்பூமியில் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த வருடங்களி லேயே செய்ய வேண்டியிருந்தால், நிச்சயமாக நாம் செய்து முடிப்போம்!

ஆனால், ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்தவரை, அவன் மன அழுத்தத்திற்குட் படுத்தப்பட்டு அவசர அவசரமாக காரியங்களைச் செய்ய வேண்டியதில்லை. நாம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். நமக்கு தேவனோடும், இரட்சகராகிய இயேசுவோடும் நித்தியத்தைச் செலவழிக்க வாழ்நாள் முழுமையாக இருக்கிறது. நாம் ஒவ்வொரு நாளும் எவைகளைச் செய்கிறோமோ அவைகள் அந்த ஆதாயத்திற்கு உதவி செய்கின்றன அல்லது அதற்கு தடையாக இருக்கின்றன.

தேவனுடைய வார்த்தையை நேரம் எடுத்துப் படிப்பதை விட வேறு எது முக்கியமாக இருக்கிறது? தேவனோடும், உங்கள் குடும்பத்தோடும் ஐக்கியப்படுவதை விட வேறு எது முக்கியமாக இருக்கிறது?

வெளியிலிருந்து நம்மை இழுக்கும் சக்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து தேவனுடைய வார்த்தையிலிருந்து தேவனுடைய வார்த்தையை கவனிக்க நேரத்தை எடுத்துக் கொள்வோம்.

தேவனுடைய வார்த்தையைச் சுருக்கி பத்திரிக்கை கட்டுரை வடிவிலோ அல்லது பிரசங்க வடிவிலோ தர வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். தேவனுடைய வார்த்தையை சுருக்க முடியாது. அது வளமானது, கருத்துச் செறிந்த முழுமை யானது. அது துரித உணவு பதார்த்தமல்ல, அது முழுமையான ஆகாரம். அதன் மதிப்பு உணரப்பட அதை மெதுவாக ரசித்து ருசிக்க வேண்டும்.

நாம் வாழ்கின்ற உலகம் அவசரமான உலகம் என்பதில் எவ்வி சந்தேகமு மில்லை, உண்மையாகவே. இதற்கு இணையாக நாம் போட்டிபோட வேண்டிய தாயிருக்கிறது. ஆனால், தேவனுக்கென்று நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த பைத்தியக்கார உலகில் தேவன் ஒருவரே ஞானமுள்ளவர், அவர் ஒருவரே அமளியில் அமைதி ஆகவே, அவர் சமூகத்தில் அமர்ந்திருங்கள்!.

சம்காரிடம் ஒரு தாற்றுக்கோல் இருந்தது
தாவீதிடம் கவண் இருந்தது
தொற்காளிடம் ஊசிநூல் இருந்தது
ராகாபிடம் கயிறு இருந்தது
மரியாளிடம் தைலம் இருந்தது
மோசேயிடம் கோல் இருந்தது
நீங்கள் தேவனுக்குக் கொடுக்கத்தக்க ஏதாவது உங்களிடம் இருக்கிறதா?



# உங்கள் குழந்தைகளைப் பற்றி எப்படி?

## WHAT ABOUT YOUR CHILDREN?

*Max Patterson*

ஏலியின் குமாரர்களான ஓப்னியும், பினெகாசும் கர்த்தரை அறியவில்லை (1 சாமு. 2:12), அவர்கள் தேவனுடைய ஆராதனையை மதிக்கவில்லை (1 சாமு. 2:17). அவர்கள் ஒழுக்கக்கேடாய் நடந்து கொண்டார்கள் (1 சாமு. 2:22). இந்தக் கீழ்ப்படியாமையின் காரணமாக தேவன் ஏலியின் வீட்டைத் தள்ளி, அதை முடிவுக்குக் கொண்டு வந்தார். மேலும், ஆசாரியத்துவத்தில் ஏற்பட்ட இந்த சீர்கேடு ஜனங்கள் தேவனுக்கு விரோதமாகத் திரும்பி தங்களைச் சுற்றிலும் இருந்த தேசங்களைப் போல் தங்களுக்கும் ராஜா வேண்டும் என்று கேட்கும்படியான காரணங்களுள் ஒன்றாக அமைந்தது.

இஸ்ரவேலர்கள் பெலிஸ்தரோடு செய்த யுத்தத்தில் ஏலியின் குமாரர்களான ஓப்னியும், பினெகாசும் கொல்லப் பட்டார்கள். 98 வயதான ஏலிக்கு இந்தக் காரியம் அறிவிக்கப்பட்டது. தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டதும் அறிவிக்கப்பட்டது. ஏலி தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டவுடனே ஆசனத்திலிருந்து வாசலின் பக்கமாய் மல்லாக்காக விழுந்தான்; அவன் கிழவனும் ஸ்தூலித்தவனுமாயிருந்தபடியால் பிடறி முறிந்து செத்துப் போனான் (1 சாமு. 4:18). ஏலியின் மருமகள் அதாவது பினெகாசின் மனைவி நிறை கர்ப்பிணியாயிருந்தாள், அவள் கர்ப்ப வேதனைப்பட்டுக் குனிந்து பிரசவித் தாள். அவள் இக்கபோத்தைப் பெற்று மரித்தாள் (1 சாமு. 4:21).

கர்த்தர் ஏலியின் குமாரரைத் தள்ளியதற்கு அவர்களுடைய ஒழுக்கக் கேடான, துன்மார்க்கமான வாழ்க்கை ஒரு காரணமாக இருந்தது. " இருந்தபோதிலும் ஏலி அவர்களை அடக்காமல் போன காரணத்தால் பாவம் செய்தார் " (1 சாமு. 3:13). ஏலி என்ன நடக்கப் போகிறதென்பதை முழுமையாக உணர்ந்திருந்தால் அவர் தன்னுடைய குமாரர்களை அடக்கியிருப்பார்.

இன்று நமக்கு அனுபவத்திலிருந்தும், தேவ வாக்கியங்களிலிருந்தும் நம் பிள்ளைகளை அடக்காவிட்டால் என்ன நடக்கும் என்பது தெரிகிறது. ஆகையால், கிறிஸ்தவ பெற்றோர்களாக நாம் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்க்க நம்மால் முடிந்தவைகளைச் செய்ய வேண்டும் (எபே. 6:1,4).

# நம் இருதயமும், நமது வாயும்!

*Bro. K. Pandian*

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும், சமாதானமும் உண்டாவதாக. நம் இருதய எண்ணங்களும், நமது வாயின் பேச்சுகளும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையதாய் இருக்கிறது. இருதயத்தின் நிறைவினால் தான் வாய் பேசுகிறது என்கிறார் நமதாண்டவர். வசனத்தைக் கேள்வி பட்டு வருகிற தான " விசுவாசம்" இருதயம் சம்பந்தப்பட்டது. (ரோமர் 10:10) நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கைப்பண்ணப்படும். மேலும், மனுஷன் பேசும் வீணான வார்த்தைகளைக் குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென கிறிஸ்து எச்சரிக்கின்றார். ஆகவே, நாம் நம் இருதயத்தில் கிறிஸ்துவின் ஆலோசனைகளை நிரப்பி நமது வாயின் வார்த்தைகளை சரிப்படுத்திக் கொள்வோம். இருதயத்தின் விசுவாசம் நீதி உண்டாக்குவதைப் போல நம் வாயின் வார்த்தைகளால் இரட்சிப்பு அல்லது ஆசீர்வாதம் வரும்.

மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்று சாமுவேலிடம் சொல்லப்பட்டது. நாம் வீட்டை விட்டுப் புறப்படும் போது முகத்தை எப்படியெல்லாம் சீர்படுத்திக் கொள்ள வேண்டும். கட்டளைகளில் பிரதானமானது முழு இருதயத்தோடு தேவனிடம் அன்புகூருவது. எனவே, மனுஷனுடைய இருதயம் தேவ வார்த்தைகளை விசுவாசிப்பதும், தேவனிடம் அன்பு கொள்வது மான முக்கிய கடமை கொண்டுள்ளது. அந்தக் கடமையை நிறைவேற்றும் போது தான் கெட்ட வார்த்தை வாயிலிருந்து நீங்கி பக்தி விருத்திக்கேதுவான வார்த்தை களை மற்றவருக்கு பிரயோஜனம் உண்டாக நாம் பேச முடியும் (எபேசி. 4:29) விசேஷமாக கிறிஸ்துவின் சபை மக்களாகிய நாம் அடிக்கடி திருவசனங்களை கேட்கும் பாக்கியம் பெற்றவர்களாய் இருக்கிறோம். யாக்கோபு நிரூபத்தில் நீங்கள் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இராவிட்டால் உங்களையே ஏமாற்றிக் கொள்கிறீர்கள் என்கிறார். மலைப்பிரசங்கத்தில் இயேசு இருதயத்தில் சுத்தமுள்ளவனே தேவனை தரிசிக்க முடியும் என்றார். பேதுரு அப்போஸ்தலன் " கர்த்தராகிய இயேசுவை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் " (1 பேதுரு 3:15) என்கிறார். ஆகவே, ஆண்டவரின் வார்த்தைகளை நம் இருதயத்தில் அதாவது மனதில் வைத்து அதின்படி நடக்கவும் பேசவும் வேண்டிய தாயிருக்கிறது.

நமது சரீரத்ததை நாம் அனுதினமும் சுத்தப்படுத்திக்கொள்கிறோம். இருதயத்தை ஆண்டவர் வார்த்தைகளால் எப்படி சுத்தப்படுத்திக் கொள்வது? என்று பார்ப்போம். மத். 15:18-20-ல் நம் *இருதயத்திலிருந்து* புறப்படுகிற சில காரியங் களினால் நாம் *தீட்டுப்படுகிறோம்.* அவற்றை கிறிஸ்துவின் உபதேசத்தால் எப்படி சுத்தப்படுத்திக் கொள்ளாலம் என பார்க்கலாம். பொல்லாத சிந்தனைகள் நம் இருதயத்தில் வரும் போது இயேசு சொல்கிறார் (மத். 5:39) தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம். தேவன் நீதியை சரிக்கட்டுவார் என நாம் சமாதானம் கொள்ள வேண்டும். கொலை பாதகங்களுக்கு கோபமே மூலக்காரணம், நியாயமில்லாமல் கோபியாதே, வீணனே, மூடனே என்று பேசினால் நியாயத்தீர்ப்புக்கும், எரி நரகத்திற்கும் ஏதுவாகும் என இயேசு எச்சரிக்கின்றார். மனுஷனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்காது என்பதை உணர்ந்து கோபங்கொண்டாலும் பாவம் செய்யாமலிருக்கவே புதிய ஏற்பாடு நம்மை வழி நடத்துகிறது. அடுத்ததாக, இருதயத்திலிருந்து விபச்சாரங்களும், வேசித்தனங்களும் புறப்பட்டு மனுஷனை தீட்டுப்படுத்துகிறது. இதற்கு உலகமும் ஒத்துழைக்கிறது. நாம் உலகத்தாரல்ல. இயேசு சொல்கிறார். ஒரு பெண்ணை தவறான எண்ணத்தோடு பார்ப்பது இருதயத்தில் விபச்சாரம் செய்ததற்கு சமம் (மத். 5:28). ஆகவே, கிறிஸ்துவின் உபதேசம் நம் தவறான எண்ணங்களைக் கட்டுப்படுத்தி நாம் தீட்டாகாமல் இருக்க வழி நடத்துகிறது. களவை பற்றிக் குறிப்பிடும் போது ஒருவன் முதலாவது தேனுடைய ராஜ்ஜியமாகிய சபை வாழ்க்கையையும், தேவனுடைய பந்தியையும் தேடி பிராயசப்படும்போது அவன் தேவைகளை பிதாவானவர் சந்திப்பார் என்றும் மேலும் நமக்கு வேண்டியவைகளைப் பரலோகம் தகப்பனிடம் கேட்டு பெற்றுக் கொள்ள வழி யிருக்கிறது (மத். 7:11) என்றும் போதிக்கிறார். பொய் சாட்சியும் மனுஷனை தீட்டுப் படுத்தும். நல்லதுக்காக பொய் சொல்லலாம் என்பது பிசாசின் தந்திரம் கிறிஸ்து "உள்ளதை உள்ளதென்று " சொல்லுங்கள் என்கிறார். இறுதியாக தூஷணங்கள் (மற்றவரை திட்டுதல்) பற்றி இயேசு ஆண்டவர் குறிப்பிடும் போது, பதிலுக்கு சபியாதிருங்கள் ஆசீர்வதியுங்கள், அவர்களுக்காக ஜெபியுங்கள் என்று நம் எண்ணங்களை சரி செய்கிறார். இல்லையெனில் மனுஷன் டென்ஷன் (மன அழுத்தம்) காரணமாக பாதிக்கப்படுகிறான். அதை விட முக்கிய காரணம் நாம் தீட்டுபட்டால் அது நம்மை தேவனிடமிருந்து பிரித்துவிடும் (ஏசா. 59:2).

ஆகையால், நம் இருதயத்தை சீர்படுத்திக் கொண்டு தேவனோடே ஐக்கியமாக இருக்கவே தேவன் நம்மை சபையில் சேர்த்திருக்கிறார். நீதி உண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் என்ற பவுல் இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும் என்றார். இங்கு வாயின் அறிக்கை என்பது *முக்கியமான சூழ்நிலையில் நாம் பேசும் வார்த்தைகளைக்* குறிக்கும். வசனங்களை இருதயத்தில் விசுவாசிப்பதின் அடையாளமாக நம் பேச்சு அமைய வேண்டும். நம் தேவன் தம்மை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் தேவன் என்று ஏன் அழைக்கப்பட்டார்? அவர்களின் இருதயத்தின் நிறைவும் வாயின் பேச்சுகளும் அப்படியிருந்தது.

உதாரணமாக, **ஆபிரகாம் :-** தன் குமாரனை பலியிட வேண்டிய சூழ்நிலையில் மலை மீது ஏறும் சமயத்தில் தன் வேலைக்காரனிடம் " நானும் என் குமாரனும் தேவனை தொழுது கொண்டு *திரும்பி* வருவோம் " (ஆதி. 22:5) என்று தன் விசுவாசத்தை அறிக்கையிட்டார். மற்றும் அவருடைய மகன் தகன பலிக்கான ஆடு எங்கே என்று கேட்ட பொழுது மனமுடைந்து போகாமல் ஆதி. 22:8, " என் மகனே தேவன் தமக்குத் தகன பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார்" என்று தன் அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தினார். நாமும் தற்போதைய நம் சூழ்நிலைகளைக் கண்டு கலங்காமல் " கர்த்தர் என் மேய்ப்பராய் இருப்பதால் நான் தாழ்ச்சியடைய மாட்டேன் " என்று நம்பிக்கையோடு பேசுவோம்.

**ஈசாக்கு :** – திருமண வயதில் இருந்த வாலிபன் ஈசாக்கு இந்த உலக இன்பங்களை நாடி ஓடாமல் " சாயங்கால வேளையிலே தேவனை தியானம் பண்ண போனான் " (ஆதி. 24:63).

மேலும், தனக்காக துரவுகளை (கிணறு) வெட்டின போது அது தங்களுடையது என்று வம்பு பேசியவர்களிடம் வாக்குவாதம் பண்ணாமல் விட்டுக் கொடுத்தார். நாமும் வேத வாசிப்பு, ஜெபம் இவைகளுக்கு நம் நேரங்களை ஒதுக்கி வாக்குவாதத்திற்கு விலகி இருப்போம் (1 கொரி. 6:7).

**யாக்கோபு :-** இறுதியாக இஸ்ரயேல் என்று தேவனால் பெயரிடப்பட்ட யாக்கோபு தன் மாமன் லாபான் வீட்டில் வேலை செய்த போது அவனுடைய சம்பள விஷயத்தில் அநியாயம் நேரிட்டது. பதிலுக்கு யாக்கோபு அவனை வையாமல் தேவன் தனக்கு பட்சமாக இருந்ததை வாயினால் அறிக்கையிட்டான்: " என் தேவன் என்னோடே இராமற்போனால் நீர் இப்போது என்னை வெறுமையாய் அனுப்பி யிருப்பீர். தேவன் கடிந்து கொண்டதால் எனக்கு உதவி செய்தார் " என்றான் (ஆதி. 31:42) நாமும் நமக்கு அநியாயம் நேரிடும் போது சோர்ந்து போகாமல், தேவன் நம்மோடு இருப்பதை உணர்ந்து அறிக்கையிடுவோம்.

நாம் தேவனுடையக் கட்டளைகளை முழு இருதயத்தோடு காத்து நடந்து கொண்டால் தேவன் நம்மை மற்றவர் மத்தியில் மேன்மையாக வைப்பதாக வாக்கு கொடுத்துள்ளார் (உபா. 26:16,19) நாமும் ஞானஸ்நானத்தில் இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டபோது அவரை ஆண்டவராக ஏற்று வாக்கு கொடுத்திருப்பதால் அவருடைய உபதேசங்களைப் பின்பற்றி தேவன கிருபையால் மேன்மையடைவோம். தேவன் உங்களோடு இருப்பாராக. ஆமென்.

**சிரிக்க, சிந்திக்க**

மகன் : " அப்பா, உங்களை தேவன் தான் படைத்தாரா? "

அப்பா : " ஆம் "

மகன் : " என்னையும் தேவன் தான் படைத்தாரா? "

அப்பா : " ஆம் "

மகன் : தேவன் இரண்டாவது வேலையை நன்றாக செய்திருக்கிறாரே, அப்படித்தானே?

# சிட்சிக்க விருப்பம்

## The Will To Discipline

***Dale Grissom***

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்க்கத் தவறும் போது மிகப் பெரிய தவறு செய்கிறார்கள். அதன் விளைவாக, பலகுழந்தைகள் கலகம் செய்கிறவர்களாக, சுயநலவாதிகளாக வளர்ந்து தங்கள் பெற்றோர்களுக்கு மிகுந்த மன வேதனையைக் கொண்டு வருகிறார்கள். 1 சாமுவேல் 2 மற்றும் 3 ஆவது அதிகாரங்களில் ஏலி தன்னுடைய குமாரர்களை சிட்சிக்கத் தவறியதால் அவர்கள் பெருத்த அவமானத்தைக் கொண்டு வந்ததை நாம் வாசிக்க முடியும். இன்று பெரும்பாலும் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் விரும்புகின்ற எல்லாவற்றையும் கொடுக்க, பிள்ளைகளுக்கு தேவையில்லாதவற்றைக்கூட வாங்கிக் கொடுக்கத் தங்களை தியாகம் செய்கிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மரியாதையுள்ளவர்களாக, பொறுப்புள்ளவர்களாக, கீழ்ப்படிகிறவர்களாக, கடினமாக உழைப்பவர்களாக இருக்கும்படி போதிக்கவில்லையென்றால் தங்கள் பிள்ளைகளுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள்.

பிள்ளை வளர்ப்பைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை நாம் மறந்து விட்டது போல் தெரிகிறது. நாம் உலகத்தின் வழிகளைப் பின்பற்றுகிறோம். கொலை, கொள்ளை மற்றும் உலகில் தலைவிரித்தாடுகின்ற கண்மூடித்தனமான பாலியல் உறவு போன்றவைகளில் வாலிபர்களின் பங்கு கணிசமான அளவு இருக்கிறது என்பதைக் குறித்து ஆழமாக நாம் சிந்திக்க வேண்டும். பல இளம் வயதினர் திருமணம் ஆகாமலேயே சேர்ந்து வாழ்கிறார்கள், திருமணம் இல்லாம லேயே பல குழந்தைகள் பிறக்கின்றன, பல இளம் வயதினர் கருக்கலைப்பில் ஈடுபடுகிறார்கள்.

நாம் சிந்திக்கத் தாமதமாகி விட்டோம்; ஒழுங்கற்ற தேசத்தின் பயங்கரமான பாவங்களைப் பார்த்து வெட்கப்படாத சமுதாயமாக மாறிவிட்டோம். பலர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் போதனைக்குக் கீழ்ப்படியாதபடி பாவத்தால் தங்களை கடினப்படுத்தியிருக்கிறார்கள்.

நாம் பிள்ளை வளர்ப்பில் மிகவும் கடினமான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பெரும்பாலான வாலிபர்கள் இரவு நேரங்களில் வெளியே போகிறார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது பெற்றோர்களுக்கு தெரிவதில்லை. பெற்றோர்கள் அப்படிப்பட்ட பழக்கத்திற்கு தொடர்ச்சியாக மறுப்பு தெரிவித்திருக்க வேண்டும். அதன் காரணமாக, குடிப்பழக்கமும், போதைப் பழக்கமும், விபச்சாரமும் அவர்களுடைய வாழ்க்கையில் ஒன்றோடு ஒன்றாகக் கலந்து விட்டது. நம் குழந்தைகளை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் நாம் சிறந்ததை முடிந்த

வரை செய்ய வேண்டும். நம் பிள்ளைகளோடு உலகத்தில் போட்டி போடும் உலகில் உள்ள பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. அதனால், அவர்கள் எல்லா வித பாவங்களிலும் ஈடுபடுகிறார்கள். இது கிறிஸ்தவப் பெற்றோர்களுக்கு வேலையைச் சற்று கடினமாக்குகிறது.

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்க சிறந்தவைகளைச் செய்யுங்கள். " பிதாக்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபே. 6:4). தினசரி தியானங்கள், ஜெபம், வேத பாடம் போன்றவைகள் நம் வாழ்க்கையின் அங்கமாகவும், நம் பிள்ளைகளுடைய வாழ்க்கையின் அங்கமாகவும் ஆக வேண்டும். பெற்றோர்களே மீண்டும் உங்கள் வீட்டை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பொறுப்பை எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளை ஒழுங்குப்படுத்தத்தக்க அவர்களிடத்தில் அன்பு காட்டுங்கள். ❀

## எபிரெயர் புத்தகத்திலிருந்து "கடவோம்"

1. நாம் பயந்திருக்கக்கடவோம் (எபி. 4:1)
2. நாம் ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம் (எபி. 4:11)
3. நாம் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம் (எபி. 4:14)
4. நாம் தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம் (எபி. 4:16)
5. நாம் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் (எபி. 10:22)
6. நாம் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம் (எபி. 10:25)
7. நாம் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி. 12:1)
8. நாம் கிருபையை பற்றிக் கொள்ளக்கடவோம் (எபி. 12:22)
9. நாம் பாவத்தைத் தள்ளவிட்டு ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி. 12:11)
10. நாம் தேவனுக்கு ஸ்தோத்திரப்பலியை செலுத்தக் கடவோம் (எபி. 13:15)



# பெற்றோர்களை மதித்தல்

## *Respect For Parents*

***Charles E. Burch***

தேவன் மோசேயிடம் அந்த சீனாய் மலையில் பத்துக் கட்டளை களைக் கொடுத்தபோது ஐந்தாவது கட்டளை இவ்விதமாகச் சொல்கிறது; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக (யாத். 20:12). தேவன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்களிடம் மாத்திரம் தங்கள் பெற்றோர்களை கனம் பண்ணும்படி கட்டளையிடவில்லை. கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழ் பவர்களுக்கும் பவுல் இவ்விதமாக எழுதினார். " பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப் படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமி யிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனை யாயிருக்கிறது " (எபே. 6:1,3).

இஸ்ரவேலில் தேவன், பிடிவாதமும், அடங்காப் பிடாரியுமான பிள்ளைகளுக்கு மரண தண்டனையை விதித்திருந்தார் (உபா. 21:18,21). இதை கிறிஸ்துவும் புதிய ஏற்பாட்டில் " தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் " என்று சொல்லும் போது மேற்கோள்காட்டுகிறார் (மத். 15:4). சாலமோன் ஞானியும் இவ்விதமாகச் சொன்னார். " உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும் போது அவளை அசட்டை பண்ணாதே " என்று (நீதி. 23:22).

தேவன் எல்லோர் மீதும் அவரவர் பெற்றோர்களை நேசிக்கவும், கனப்படுத்தவும், மதிக்கவும், உதவவும் வேண்டுமென்ற பொறுப்பினை வைத்திருக்கிறார். ஆனால், இயேசுவின் நாட்களில் வாழ்ந்த வேதபாரகர்களும், பரிசேயர்களும் இந்த கட்டளையைத் தவிர்க்க வேறு வழியைக் கண்டுபிடித்தார்கள். அவர்களைக் கடிந்து கொள்ளும்போது இயேசு இவ்வித மாகச் சொன்னார். " நீங்களோ, எவனாகிலும் தகப்பனையவாது தாயையாவது நோக்கி; உனக்கு நான் செய்யத் தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம் பண்ணாமற் போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள் " (மத். 15:5,6). வேதபாரகர்களும், பரிசேயர்களும் பெற்றோர்களை கவனித்து அவர்களுக்கு வயதான காலத்தில் உதவும் படியாக பிள்ளைகளுக்குக் கட்டளையிடாமல் அதை "கொர்பான்" என்னும் காணிக்கையின் பேரில் இவர்கள் அதைப் பெற்று அனுபவித்தார்கள். " கொர்பான் " என்றால் " தேவனுடைய சேவைக்காக, பரிசுத்த பயன்பாட்டிற்காக முறையான பொருத்தனையுடன் தனியாக எடுத்து வைக்கப்படும் ஒரு பொருளாகும் ". எனவே, அதை மனிதர்கள் யாரும் பயன்படுத்தக் கூடாது. ஆனால், அவர்களுடைய பாரம்பரியம் கொர்பான் என்னும் காணிக்கையின் பேரில் அவர்கள் அந்த பணத்தைப் பிள்ளைகளிடமிருந்துப் பெற வழியைக் கண்டு பிடித்து அவர்கள் தங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கினதாக இயேசு அவர்களை குற்றஞ்சாட்டினார் (மத். 15:6).

இன்று நிலைமை எப்படி இருக்கிறது? இன்று பெற்றோர்களை மதிக்காத நிலைமை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு எதையும் நம் சமுதாயத்தில் காணப்படுகிறது. இருந்த போதிலும், நியாயப்பிரமாணம் கொடுக் கப்பட்டபோது பெற்றோர்களை மதிக்காமல் இருந்தது எப்படிப் பாவமாகக் கருதப்பட்ட தோ அப்படித்தான் இப்போதும் தேவனால் கருதப்படுகிறது. குழந்தைகள் சித்திர வதைப்படுத்தப்படுவது பற்றி அதிகமாக நாம் கேள்விப்படுகிறோம். இது பயங்கரமானது. ஆனால், பெற்றோர்கள் இந்தக் காரியத்தில் ஈடுபடுவதை நாம் அதிகமாக செய்திகளில் பார்க்க முடியாது. நாம் பெற்றோர்களிடம் பேசும் விதத்தால், நம் சொற்களால், வாழும் விதத்தால் அவர்களை அவமதிக்க முடியும்.

நாம் மேலான அதிகாரத்தை மதித்து, நம் பிள்ளைகளுக்கு அதைப் போதிக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார்.

# மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?

# What Will A Man Give In Exchange for His Soul?

***B. Arjunan***

உலகத்திலே மனுஷன் பிறக்கிறான் பின்பு மரிக்கிறான். அவனால் தன் ஜீவனை இரட்சிக்க முடியவில்லை. ஏனெனில், அது மனுஷனால் கூடாதது. அந்த ஜீவனை உண்டாக்கின தேவனுக்கு மட்டுமே அந்த அதிகாரம் இருக்கிறது. ஆகையால், மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? ஒரு பொருளை வாங்கும்போது பணமோ, பொருளோ கொடுத்து வாங்குகிறோம். அதைப் போல தன் ஜீவனுக்காக என்னத்தைக் கொடுக்க முடியும். ஒன்றையும் கொடுக்க முடியாது. ஆனால், பரிசுத்த வேதாகமம் அதற்கான வழியைப் போதிக்கிறது. முதலாவது, " தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? " (மாற். 8:35,37). எவன் ஒருவன் தன் உயிரை காக்க நினைக்கிறானோ, அவன் தன் உயிரை இழந்து போவான். இதுவரை உலகத்தில் அதிக நாட்கள் உயிரோடு இருக்க வேண்டும் என்று தன் உயிரை காக்க நினைத்த ஏராளமானோர் இதில் தோல்வி யடைந்துள்ளார்கள். மனுஷனுடைய நாட்கள் மிகவும் குறுகினதாயிருக்கிறது. 969 வருடம் உயிரோடிருந்த மெத்தூசலாவை குறித்து வேதாகமம் போதிக்கிறது. அவனே அதிக வருடம் உயிரோடிருந்தவன். அவனும் அதற்குப்பின்பு மரித்தான் என வேதத்தில் படிக்கிறோம். இந்த ஜீவனை அதாவது உயிரை காக்க நினைக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்கள் அதை இழந்துபோவார்கள்.

ஆண்டவர் இயேசு கூறும் ஒரு உவமையிலே ஒரு ஐசுவரியவானைப் பற்றி படிக்கிறோம். அவன் தன் ஜீவனை காக்க; " ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி; மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் " என்றார் (லூக். 12:19,20). தனக்காகவே சேர்த்துவைத்தவனுடைய நிலைமையைப் பார்த்தீர்களா! நான் எதற்காக இவ்வளவு சேர்த்து வைக்கிறேன் என்று கடுகளவும் சிந்திக்காமல் தன் ஆத்துமாவை நேசித்து சேர்த்தான். ஆனால், அவனால் அவனுடைய ஆத்துமாவை தப்புவிக்க முடியவில்லை. அவனுடைய கனவு எல்லாம் மாயையாக போய்விட்டது. அதைப்போல சிலுவையில் தொங்கிய கள்வர்களில் ஒருவன் தன்னுடைய ஜீவனை இரட்சிக்க

விரும்பி; " நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள் என்று அவரை இகழ்ந்தான் " (லூக். 23:39). மற்ற கள்வனுக்கு கிடைத்த பாக்கியம் இவனுக்குக் கிடைக்கவில்லை. எவன் ஒருவன் தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறானோ அவன் அதை இழந்துபோவான். அப்படியானால் நம் ஜீவனை இரட்சிக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.

அந்த வசனத்தின் பிற்பகுதியில் வாசிக்கிறோம். " என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான் " என்றார். ஆண்டவர் நிமித்தமாக ஜீவனை இழக்கும்போது அதை திரும்பவும் பெற்றுக்கொள்வோம். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! ஆம், சுவிசேஷத்தினிமித்தமாக தங்களுடைய ஜீவனை இழந்தவர்கள் அதை அடைந்தார்கள். ஸ்தேவான் என்ற தேவ மனுஷனை கல்லால் அடித்துக் கொன்று போட்டார்கள். அவனோ " அதோ, வானங்கள் திறக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான் " (அப். 7:56). என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று ஆண்டவர் இயேசு சொன்ன வசனத்தை இங்கே நினைவுகூருங்கள். மேலும், ஆண்டவர் இயேசு சொல்வதை கவனியுங்கள். " என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்த மாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனை யாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களை யாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய் களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் " என்றார் (மாற்கு 10:29,30). ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையை நம்பி தன் தேசத்தையும், இனத்தையும், தன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு விட்ட ஆபிரகாமை தேவன் கைவிட்டாரா? கடல்கரைமணலத்தனையான பிள்ளைகளையும், தேசத்தையும் சுதந்தரித்துக்கொண்டான். அன்று ஆபிரகாமை ஆசீர்வதித்த கர்த்தர் இன்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்மையும் ஆசீர்வதிக்க சித்தமுள்ள வராயிருக்கிறார். அவருடைய வார்த்தையின்படி ஆண்டவர் நிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் ஜீவனை இழக்கும்போது அதை இரட்சித்துக் கொள்வோம். ஏனெனில், நம்முடைய தேவன் மரித்தோரை உயிரோடு எழுப்புகிற தேவன். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். நீங்கள் சோர்ந்து போகாமல் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களை நோக்கிப்பாருங்கள். அவர்களுடைய சரித்திரத்தை அப்போஸ்தல நடபடிகளில் படியுங்கள்.

இந்த ஜீவனுக்கு ஈடாக மனுஷன் என்னத்தைக் கொடுப்பான். பழைய ஏற்பாட்டில் ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்று படிக்கிறோம். பழைய பிரமாணம் ஜீவனுக்கு ஈடாக அந்த ஜீவனை கொடுக்கவில்லை. மாறாக அந்த ஜீவனை எடுத்தது. ஆகையால், அது நீக்கப்பட்டது. ஆனால், இயேசுவோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கும்படி வந்தேன் என்கிறார். " திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக்

கொடுக்கிறான் " (யோவான் 10:10,11). இந்த வசனத்தின்படி இயேசுவானவர் தன் ஜீவனை கொடுத்து ஜீவன்களை இரட்சிக்கிறார். ஒரு மனுஷனுடைய ஜீவனை இரட்சிப்பதற்கு ஈடாக இயேசுவின் இரத்தம் செலுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய நற்செயல்கள் மூலமாக அல்ல. நம்முடைய புண்ணியத்தினாலும் அல்ல. பலர் நினைக்கின்றனர். தானதர்மங்கள் செய்தால் போதும் நம்முடைய பாவகருமங்கள் எல்லாம் மாறிவிடும். நம்முடைய ஆத்துமா காப்பாற்றப்படும் என்று. நாம் நம்முடைய பாவங்களை கழுவ முடியாது. எந்தவிதமான தானதருமங்களும் நம்முடைய பாவத்தை கழுவாது. நாம் நம்முடைய அன்றாட அழுக்குகளை கழுவுவதுபோல பாவத்தை கழுவிவிடலாம் என நினைக்கின்றனர். உள்ளத்தின் பாவகறையை கழுவ இயேசுவின் இரத்தம் தேவை. அந்த இரத்தமே பரிசுத்த இரத்தம். ஆடு, மாடு, கோழி இவைகளின் இரத்தம் பாவங்களை கழுவாது. அதன் மீது நம்பிக்கை வைக்கிறவர்கள் பின்நாளிலே ஏமாற்றம் அடைவார்கள். ஆடு, மாடு, கோழிகளை மனிதன் தன்னுடைய உணவுக்காக அன்றாடம் பயன்படுத்துகிறான். அந்த ஆடு, மாடு, கோழி எப்படி ஒரு மனுஷனுடைய ஜீவனை காப்பாற்றும். சிந்திக்க வேண்டுகிறேன். மனுஷனுடைய போதனைகளை தள்ளிவிட்டு தேவனுடைய சத்தத்திற்கு செவிகொடுங்கள்.

## தேவன் மனுஷனுக்கு செய்த காரியங்கள் என்ன?

இதை நாம் எண்ணிக்கையில் சொல்லிவிட முடியாது. எழுத்தால் எழுதி விடவும் முடியாது. சொல்லால் சொல்லிவிடவும் முடியாது. அத்தனை நன்மைகளை நமக்குச் செய்திருக்கிறார். ஆகையால், பவுல் எழுதும்போது; " தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் " என்றார் (2 கொரி. 9:15). சொல்லிமுடியாத ஈவு என காண்கிறோம். ஒரு மனுஷனுக்கு வியாதி வந்துவிட்டால், பலவிதமான பிரச்சனைகள் இருப்பதாக டாக்டர்கள் சொல்லிவிடுகிறார்கள். அது உண்மையாகவே இருக்கிறது. சரீரத்தில் உள்ள ஒரு உறுப்பு செயல் இழந்து விட்டால் அதை சரி செய்வது எவ்வளவு கடினமாகிவிடுகிறது. அப்பொழுது தான் நாம் நினைக்கிறோம் தேவனுடைய ஈவுகளை நினைத்து மரணம் வரை இயங்கிக் கொண்டிருக்கும் இயந்திரத்தை மாம்சத்தில் உருவாக்கியிருக்கிறார். இரும்பினால் செய்த இயந்திரங்கள் தேய்ந்துபோய் பழுதாகி நின்றுவிடுகிறது. பிறந்தது முதல் அதன் வளர்ச்சிக்கு ஏற்ப மாம்சத்தில் வளர்ச்சியடையக்கூடிய இயந்திரத்தை நம் இருதயத்தில் பதித்துள்ளார் எத்தனை ஆச்சரியமான காரியம். தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்கு அவருக்கு ஸ்தோத்திரம். மேலும், " தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? " (ரோமர் 8:32). தேவன் எவ்வளவு நல்லவர் என்று பார்த்தீர்களா! அவர் மனுஷனுக்கு செய்த காரியங்களை நினைத்தால் நாள்போவது தெரியாது. அவருடைய மகிமை அற்புத மானது. அதைக்குறித்து பேசுங்கள் அதைக்குறித்து தியானியுங்கள். எங்களோடு கடிதத்தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காகவும், உங்கள் குடும்பங் களுக்காவும் ஜெபிக்கிறோம்.

# தனிநபர் ஊழியத்தில் ஈடுபடும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய வசனங்கள்

## Verses Every Personal Worker Should know

*Ken Tyler*

I **வேதாகமத்தைப் பற்றிய சரியான மனப்பான்மை** - உபா 4:2; உபா. 12:32; நீதி. 30:6; வெளி. 22:18,19; யோவான் 10:35; கலா. 1:8,9; 2 யோவான் 9; மத். 7:21,23.

II **நாம் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழுகிறோம். - மோசேயின் பிரமாணத்தின் கீழ் அல்ல.** கொலோ. 2 :14; ரோமர் 7:1,7; 2 கொரி. 3:7,11; எபி. 9:15,17

III **ஒரே சபை** மத். 16:13,19; எபே. 4:4; கொலோ. 1:18; 1 கொரி. 12:13; எபே. 2:16.

IV **சபையின் ஆரம்பம் :** அப். 2:37, 42, 47

V **இரட்சிப்பின் திட்டம்:** கேள்விப்படுதல் (ரோமர் 10:17); விசுவாசித்தல் (எபி. 11:6) மனந்திரும்புதல் (லூக். 13:3,5) (அப். 17:30); கிறிஸ்துவை அறிக்கையிடுதல் (அப். 8:37) (ரோமர் 10:9,10) ஞானஸ்நானம் பெறுதல் (அப். 2:38; அப். 22:16).

VI **ஞானஸ்நானம் ஓர் அடக்கமாயிருக்கிறது** : ரோமர் 6:3,4; கொலோ. 2:12 யோவான் 3:23

VII **ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளுதல்** (யோவான் 4:23,24; மத். 15:9)


VIII **வாரத்தின் முதல் நாளில் ஆராதனை, கர்த்தருடைய பந்தி** அப். 20:7; 1கொரி. 11:20; மத். 26:17; 26,29; அப். 2:42; கொடுத்தல் 1 கொரி. 16:12; பிரசங்கம் அப். 20:7; ஜெபம் 1 தெச. 5:17; கொலோ. 4:2; பாடல் எபே. 5:19; கொலோ. 3:10; வேத வசனங்களைப் படித்தல் (அப். 20:7).

IX **சபையின் ஆளுகை அமைப்பு** (பிலிப். 1:1)

X **மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் தகுதிகள்** (1 தீமோ. 3:1,13; தீத்து 1:5,9; 1 பேதுரு 5:1,4)

XI **மூப்பர்கள் கண்காணிகள் மற்றும் மேய்ப்பர்கள் போன்றவைகளெல்லாம் ஒரேவிதமான மனிதர்களைக் குறிக்கும் பதங்கள் தான்** (அப். 20:17,28; 1 பேதுரு 5:12; தீத்து 1:5,7).

XII **ஸ்திரீகளின் பங்கு :** 1 தீமோ 2:11,12; 1 கொரி. 14:34)



# எல்லோருக்கும் சுவிசேஷம்

## *The Gospel Is For All*

***Earl Edwards***

இயேசு இந்தப் பூமியில் வாழ்ந்தபோது ஒருமுறை தம்முடைய சீடர்களிடம் அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலு மாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, " வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் " என்று சொன்னார் (யோவான் 4:35).

இன்று இயேசு சபையில் இருக்கிற நம்மிடம் நேரடியாகப் பேசுகிறதாக இருந்தால், இவ்வுலகில் இருக்கும் பலருடைய ஆவிக்குரிய மோசமான நிலையைக் காண நம்முடைய கண்களை ஏறெடுக்க முதலில் சொல்வார் என்று நான் நம்புகிறேன். அவர்களுக்கு சுவிசேஷம் தேவை என்பது வெளிப்படையாக இருக்கிறது என்று சொல்வார். இரண்டாவதாக, நம் மாபெரும் தேவனிடத்திலுள்ள ஆவிக்குரிய உதவியை மறுமதிப்பீடு செய்ய நம் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் படியாக நம்மிடம் சொல்வார் (சங். 27:9,10; 131; 1,38). ஆனால், அநேகமாக எல்லா வற்றையும் விட முதல் நூற்றாண்டு சீடர்களிடம் சொன்னதுபோல் " வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் " என்று சொல்வார். நாம் சகல ஜாதிகளையும் சீஷராக்க வேண்டுமென்பது அவருடைய விருப்பம் என்பதையும் நமக்கு நினைப்பூட்டுவார் (மத். 28:19). ஏனென்றால், சுவிசேஷம் என்பது எல்லோருக்குமானது.

ஆவிக்குரிய தேவையில் இருப்பவர்களும், அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யும் தேவனும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும், இது ஒவ்வொரு கிறிஸ்தவனின் வேலையா யிருக்கிறது. நம் வசனப்பகுதியாகிய யோவான் நான்காம் அதிகாரத்திற்கு திரும்பும் போது, இயேசு சரீரப்பிரகாரமான ஆகாரத்தை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. ஏனென்றால், அருகில் உள்ள சீகார் கிராமத்தி லிருந்து திரளான மக்கள் வருவார்களென்று அவர்களுடைய ஆத்துமாக்கள் மீது அவர் அக்கறை கொண்டிருந்தார் என்பதை நாம் கவனிக்க முடியும். இயேசு விளை நிலங்கள் அறுப்புக்கு விளைந்திருக்கிறதைக் காண்கிறார் (வ. 35).

இன்று பல அவசர ஆவிக்குரிய தேவைகள் உண்டு. தொலைநோக்குப் பார்வை உள்ள ஒரு சபை உண்மையாகவே அது கிறிஸ்துவை உடைய சபையாக இருந்தால் செய்யப்பட வேண்டிய பணியின் அவசரத்தன்மையை உணர்ந்து கொள்ளும். அதுபோல், ஒருவர் உண்மையாகவே தொலைநோக்குப் பார்வை உடையவராக, முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவராகயிருந்தால் அந்த அவசரத் தன்மையை உணர்ந்து கொள்வார்.

## அறுப்புக்கேற்ற விளைநிலங்கள் உலகம் முழுவதிலும் உள்ளன

" நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் " என்று ஆண்டவர் சொன்னார் (மற்கு 28:19). முதிர்ச்சியடைந்த தனிப்பட்ட கிறிஸ்தவர்களும், கீழ்ப்படிதலுள்ள சபைகளும் நம் ஆண்டவர் சகல தேசங்களுக்குப் போக வேண்டுமென்று கட்டளையிடும் போது ஒரு தேசத்திற்குப் போவதில் திருப்தியடைய மாட்டார்கள். ஆகவே, நாம் உலக முழுவதிலுமுள்ள அறுப்பு நிலங்களை நம் கண்களைக் கொண்டு ஏறெடுத்துப் பார்க்க வேண்டும். நாம் பவுல் செய்ததுபோல் கிறிஸ்துவின் நாமம் அறிவிக்கப்படாத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிப்பதன் மூலம் கிறிஸ்துவைப் பற்றிய செய்தியை அவர்கள் கேள்விப்படும் படியும், உணர்ந்து கொள்ளும்படியும் செய்ய முடியும் (ரோமர் 15:20,21). கடந்த சில வருடங்களில் அப்படிப்பட்ட தேசங்களைப் போய் சந்திப்பதில் கிறிஸ்துவின் சபையார் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். உண்மையில் சொல்லப் போனால், 1939ல் இரண்டாம் உலகப்போர் வெடித்த போது ஐரோப்பா முழுவதும் சேர்த்தே குறைவான எண்ணிக்கையிலான கிறிஸ்துவின் சபைகளே இருந்தன. அதுவும் எல்லாமே இங்கிலாந்தில் தான் இருந்தன. ஆனால், 1977ல் ஐரோப்பா விலுள்ள 20 நாடுகளில் 195 கிறிஸ்துவின் சபைகள் இருந்தன. அப்படிப் பார்க்கும் போது நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். ஆனால், இன்னும் செய்வதற்கு பல வேலை இருக்கின்றன. மேற்சொல்லப்பட்ட இடங்களில் நாம் ஊழியத்தைப் பொறுத்தவரை வஸ்திரத்தின் ஓரத்தைத்தான் தொட்டிருக்கிறோம். உலகின் 133 நாடுகளில் கிறிஸ்துவின் சபைகள் உள்ளன. ஆனால், அவற்றுள் பாதி தேசங்களில் பணியை இப்போதுதான் தொடங்கியிருக்கிறோம். அந்த நாடுகளில் பலர் சுவிசேஷத்தை கேள்விப்பட்டதே இல்லை. ஆனால், உலகின் 242 நாடுகளை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டால் தேவை அதிகமாகவும், அவசரமாகவும் இருக்கிறது.

## நாம் சுவிசேஷத்தை எல்லோரிடத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டும்

சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று இயேசு சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். எப்படிப் பார்த்தாலும் நாம் அந்தப் பணிக்கு எந்த அளவு அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டுமோ அந்த அளவு இல்லை. சகோதரன் என்பவர் கிறிஸ்துவின் சபையாரால் ஊழியத்திற்கென்று ஜப்பான் தேசத்திற்கு 1891லிருந்து தோராயமாக 1941 வரை அனுப்பப்பட்டிருந்தார்.

ஜப்பானில் அவர் பல வருடங்கள் ஊழியம் செய்தபிறகு, அவருக்கு உதவி செய்த பல சபைகள் அவருடைய பொருளாதார உதவிகளை நிறுத்திவிட்டு அந்த

தொகையை அமெரிக்காவிலுள்ள தேவனற்றவர்கள் மத்தியில் செலவழிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவருக்கு கடிதத்தின் மூலமாக தெரிவித்தனர். ஆனால், அர்ப்பணிப்புடையவராக காணப்பட்டபடியால் உலகப்பிரகாரமான வேலை ஒன்றை அவர் தெரிந்தெடுத்து தான் நேசித்த ஜப்பானியர்களுக்கு தொடர்ந்து போதித்தார்.

சகோதரர்களே, நம் தேவன் மிகப்பெரியவர். இந்த அழிந்துபோகின்ற உலகம் அவருடைய அன்பையும், இரக்கத்தையும் பற்றி கேள்விப்பட வேண்டும். இந்த அறுப்புக்கேற்ற விளைநிலங்களை சந்திக்க நம்மை நாம் ஒப்புக்கொடுத்தால் வாங்கு கிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே உண்மையாக பாக்கியம் என்பதை அனுபவத் தினால் நாம் கற்றுக்கொள்ள முடியும். (அப். 20:35).

### நாம் மற்றவர்கள் மீது கவனத்தைச் செலுத்த வேண்டும்

நாம் தேவனுக்காக வேலை செய்கிற மக்களாக இருக்கவேண்டுமென்றால் அறுப்பு நிலங்களை நம் கண்களைக் கொண்டு ஏறெடுக்கத்தக்க ஞானமுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்மீதே நாம் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு மற்றவர்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். நாம் மற்றவர்களைப் பற்றி சிந்திக்க தேவன் உதவிச் செய்வார். நாம் அப்படிச் செய்யும்போது மற்றவர்களையும் அறுப்புக்கேற்ற நிலங்களை நோக்கி கண்களை ஏறெடுக்கச் செய்கிற தொலைநோக்கு பார்வையுடைய மக்களாக மாறுவோம். ஏனென்றால், சுவிசேஷம் எல்லோருக்கும் தேவை என்பது அவர்களுக்கும் தெரியும்.

### மகிமையின் தொடுதலை விட்டுச் செல்லுங்கள்

மேகங்களால் நிரப்பப்பட்டு அவைகள் அலைந்து திரியும்
அந்த அழகான நேரத்தில் சூரியன் மறைவதை நீங்கள் கண்டதுண்டா?
அது பகலுக்கு வணக்கம் சொல்லிவிட்டு
பொன்னிற வளையத்தை விட்டுச் செல்வது கண்கொள்ளாக்காட்சி இல்லையா?

இங்கே மகிமையின் தொடுதல் பூமியில் ஆசீர்வாதத்தைப்போல்
என்றென்றும் நினைவில் நிற்கிறது
அந்த பொன்னான தொடுதல் உறுதியான
கண்களால் காணமுடியாத கரத்திலிருந்து உண்டானது.

சிலருடைய வாழ்க்கை சூரிய அஸ்தமனத்தின் போது
ஏற்படுகின்ற அந்த பிரகாசத்தை நமக்கு நினைவுப்படுத்துகிறது
அவர்கள் இவ்வுலகை விட்டுச் செல்லும்போது இனிமையாக
நினைவில் நிற்கிற மகிமையின் தொடுதலை விட்டுச் செல்கிறார்கள்.



# நமது ஊழியம் : முடியாத ஒன்றா?

# Our Mission : Is It Impossible?

*Wayne Barrier*

**பு**திய ஏற்பாடு தெளிவாகவே சபையின் ஊழியத்தை மத். 28:19,20 மற்றும் மாற்கு 16:15,16 வசனங்களில் விளக்குகிறது. ஊழியத்தைத் திறம்பட செயல்படுத்த வேறு சில வசனப்பகுதி களையும் புரிந்து கொள்வது அவசியமா கிறது. ஆனால், ஒட்டுமொத்தமாக ஊழியம் என்கிற வார்த்தைக்கு மேற் சொல்லப்பட்ட வசனங்களைப் போல் சிறந்த அர்த்தத்தை வேறெந்த வசனமும் கொடுப்பதில்லை. இன்று உலகில் 700 கோடி மக்கள் வாழ்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான மக்கள் மரணத்தினாலே எடுத்துக் கொள்ளப் பட்டு நித்தியத்திற்குள் கடந்து போகிறார் கள். நியாயத்தீர்ப்பில் எல்லோரும் தேவ னுக்கு முன்பாக நிற்பார்கள், அங்கே ஒவ்வொருவருடைய நித்தியத்திற்கேற்ப அதாவது பரலோகத்தில் வீடோ அல்லது நரகத்தில் வேதனையோ பூமியில் அவர் களுடைய கிரியைகளின் அடிப்படையில் கொடுக்கப்படும்.

இப்பூமியில் வாழும் கோடிக் கணக்கான ஆத்துமாக்களுக்கு கிறிஸ்து வின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் ஊழியத்தில் நாம் வெற்றி பெற்றிருக்கி றோமா? அதற்கான பதில் ஒவ்வொரு நாளும் மரிக்கும் பெரும்பாலானோருக்கு ஒருவரை விடுதலை செய்யும் சத்தியம் போதிக்கப்படுவதில்லை என்பதாகத்தான் இருக்கிறது (யோவான் 8:32). உலக மக்கள் தொகையில் பெரும்பகுதியை சந்திக்க நம்மிடத்தில் சொற்ப எண்ணிக் கையில் தான் ஊழியக்காரர் இருக்கி றார்கள். ஒவ்வொரு நாளும் பிசாசுடனான யுத்தத்தில் நாம் தோற்றுப்போகிறோம். ஏனென்றால், நம்மிடம் உள்ளது சிறிய சேனைதான், அதுவும் யுத்தத்திற்கு

போதுமான அளவு தயாராகாத நிலையில் தான் இருக்கிறது.

**இந்த ஊழியம் அசாத்தியமான ஒன்றா?**


அது முடியாததென்று நான் நினைக்கவில்லை. நம்மால் நிறைவேற்ற முடியாத எந்த ஒரு காரியத்தையும் நாம் செய்யும்படியாக அல்லது நிறைவேற்றும்படியாக தேவன் கட்டளையிடுவார் என்று நான் நம்பவில்லை. நமக்கான வேலையை நாம் உண்மையாக அல்லது உள்ளப்பூர்வமாக அணுகத் தவறிவிட்டோம் என்பது தான் பிரச்சனை என நான் நம்புகிறேன்.

நம்முடைய உயிருக்கு உலை வைக்கும் கொடிய நோய் ஒன்று நம்மை தாக்கியிருக்கிறது என்பதை நாம் கண்டுபிடித்து அதற்கு உடனடியான சிகிச்சை அவசியப்படாமல், அந்த சிகிச்சை எங்கே அளிக்கப்படும் என்பதை தேடும் அணுகுமுறையில் அவசரம் காட்டாமலிருப்போமா?. நம் உயிர் ஆபத்திலிருக்கிறது என்பதை நாம் அறிந்திருந்தால் நாம் சுகமாக எதையும் விட்டு வைத் திருக்கமாட்டோம். அவசியப் பட்டால், நம்முடைய நேரம், பணம், அறிவு, தனித்திறன் மற்றும் எல்லா வளங்களையும் நாம் காப்பாற்றப் படும்படியாக பயன்படுத்துவோம். உதவிக்காக மற்றவர்களை அழைக்க நாம் தயங்குவதில்லை. இந்த விஷயத்தைப் பற்றி தேவனிடத்தில் நாம் விரிவான முறையில் ஜெபத்தில் விவரித்திருப் போம். நாம் அதிக நாட்கள் வாழ்வதற்காக, சுகமடைவதற்கான பணியை செய்து முடிக்க எல்லோரையும் ஒன்று திரட்டவோ, நம்மால் முடிந்த வரை எல்லாவற்றையும் செய்யவோ நாம் தயங்க மாட்டோம், வெட்கப்படவும்மாட்டோம்.

நாமெல்லாருமே நம் நண்பர்கள் அல்லது குடும்ப அங்கத்தினர்கள் கொடிய வியாதியில் போராடுகிற விஷயத்தைப் பற்றிப் பரிச்சயப்பட்டிருக்கிறோம். ஓர் ஆத்து மாவை இரட்சிப்பது இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும் விட முக்கியமானது என்று இயேசு போதித்ததையும் நம்மில் பலர் அறிவோம். (மத். 16:26). நாம் நித்திய ஜீவனை கண்டடைய வேண்டுமென்றால் இவ்வுலகில் கிறிஸ்துவினிமித்தம் நம் சரீரப்பிரகாரமான ஆசைகளை இழக்க வேண்டும் அல்லது துறக்க வேண்டும் என்பதையம் அறிந்திருக்கிறோம் (மத். 16:25).

சுவிசேஷத்தினால் ஒவ்வொரு ஆத்துமாவையும் சந்திக்கும் நம் ஊழியம் எப்படி? ஆத்துமாக்கள் ஆபத்தில் இருக்கிறார்கள்! நம் ஒட்டுமொத்த ஊழிய முயற்சியை எப்படி விவரிக்கிறோம்? இந்த மாபெரும் நோக்கத்திற்காக என் தனிப்பட்ட முயற்சி எப்படி இருக்கிறது? நம் உயிருக்கு ஆபத்தான ஒரு சரீரப் பிரச்சனையை நாம் எப்படி அணுகுவோமோ அதே அணுகு முறையை ஊழியப் பணியை செய்து முடிக்க செயல்படுத்தினால் நம்மால் முடியும்.

நம் முதல் நூற்றாண்டு சகோதரர்கள் இந்த ஊழியப் பணியை சிறப்பாக செய்து முடித்தார்கள். அதன் மூலம் உலகெங்கும் சுவிசேஷம் பரம்பிற்று (கொலோ. 1:6). இன்றும் நாம் அதே விதமாகச் செய்ய வளங்களும், உபகரணங்களும், உள்ளன. அப்பணிக்கு நாம் நம்மை அர்ப்பணித்தால் மட்டுமே போதுமானது. பணி முடியாததல்ல ஆனால், நம்முடைய பங்கை நாம் செய்தால் மட்டுமே முழுமையான வெற்றியை அடைய தேவன் உதவி செய்வார் (எபே. 3:20)



# கூட்டாண்மையின் வல்லமை

## *The Power of Partnership*

***Bill McFarland***

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஐக்கியம் என்பது மாபெரும் மதிப்புடைய ஒன்றாயிருக்கிறது, ஏனென்றால், "ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்". சாலொமோன் ஞானி இந்த உண்மையை (பிரசங்கி 4:9,12) வசனங்களில் வலியுறுத்து கிறார். அந்த வசனங்களில் அவர் ஐக்கியத்தின் நான்கு நன்மைகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

நிறைவேறுதல் : ஒண்டியாயிருப் பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர் களுக்கு நல்ல பலனுண்டாகும் (வசனம் 9). இருவர் இணைந்து வேலை செய்யும் போது அதிக வேலை நடக்கும். அதிகமான வேலைகள் செய்து முடிக்கப்பட்டு அதிக கனி கொடுக்க முடியும். நாம் தனியாக வேலை செய்யும்போது அதிகமாக கனி கொடுக்கவோ, பலன் கொடுக்கவோ முடியாது.

உற்சாகம் : " ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிற வனுக்கு ஐயோ. அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே " (வசனம் 10). நாம் விழும் போது நம்மைத் தூக்கி விடவும், நம் வாழ்க்கைப் பாதையில் நம்மை உற்சாகப்படுத்தவும் நமக்கொருவர் இருப்பது எவ்வளவு ஆசீர்வாதமானது!

பிழைப்பு : இரண்டு பேராய்ப் படுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக் குச் சூடுண்டாகும்; ஒண்டியாயிருக்கிற வனுக்குச் சூடுண்டாவது எப்படி?

கிறிஸ்தவ வாழ்க்கையின் தேவைகள் மற்றும் சாவல்களின்படி நாம் தனியாக எதையும் செய்ய முடியாது. நம் விசுவாசம் தணிந்து போகாமலும், மரித்துப் போகாமலும் இருக்க நாம் ஒருவரையொருவர் சார்ந்து ஐக்கியமாக இருக்க வேண்டியதாயிருக்கிறது.

பெலன் : "ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது (பிர. 4: 12). முப்புரிநூல் எப்படி உறுதியாயிருக்கிறதோ அதேபோல் கிறிஸ்தவனுடைய வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் தன்னுடைய சகோதர சகோதரிகளோடு பின்னிப் பிணையப்பட்டிருந்தால் அவன் உறுதியாயிருப்பான்.

கிறிஸ்துவுக்குள் காணப்படும் ஐக்கியத்திற்கு நம் வாழ்க்கையை ஆசீர்வதிக்கும் வல்லமை உண்டு. அதற்கு ஈடு இணையே இல்லை. நாம் ஐக்கியத்தில் உறுதியாய்த் தரிக்க நிச்சயித்துக் கொள்வோம் (அப். 2:42).

## வயதுக்கேற்ப தகப்பனைப் பற்றி மகனுடைய எண்ணங்கள்

4 வயது : என் அப்பாவால் எதையும் செய்ய முடியும்.

7 வயது : என் அப்பாவுக்கு நிறையத் தெரியும்..... எல்லாம் தெரியும்

8 வயது : என் அப்பாவுக்கு எல்லாம் தெரியாது

12 வயது : ஓ, நல்லது அப்பாவுக்கு இயற்கையாகவே அதுவும் தெரியாது

14 வயது : அப்பா? பாவம் பழையகாலத்து ஆள்!

21 வயது : ஓ, அந்த ஆள் பழைய காலத்தைச் சேர்ந்தவாரச்சே; அவரிடம் அதை நீங்கள் எப்படி எதிர்பார்த்தீர்கள்?

25 வயது : அதைப் பற்றி அவருக்கு கொஞ்சம் தெரியும், அதிகமாகத் தெரியாது.


30 வயது : அதைப் பற்றி அப்பா என்ன நினைக்கிறார் என்பதைக் கண்டறிய வேண்டும்.

35 வயது : கொஞ்சம் பொறுமை; அப்பா என்ன அர்த்தம் சொல்கிறார் என்று முதலில் பார்ப்போம்.

50 வயது: அதைப் பற்றி அப்பா என்ன நினைத்திருப்பார்?

60 வயது: என் அப்பாவுக்கு உண்மையாகவே எல்லாம் தெரியும்.

65 வயது: அப்பாவோடு இன்னொரு முறை பேச நான் ஆசைப்படுகிறேன்.




# விசுவாசிகளாக மக்கள் எப்படி ஆக்கப்படுகிறார்கள்?

# How Are Persons Made Believers?

*G.F. Raines*

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியர்களிடம் இவ்விதமாகச் சொன்னார். " கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இருந்தாலும் தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே. கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன் " (1 கொரி. 4:15).

இந்த வாக்கியத்தின் உண்மையான பொருள் என்னவென்றால், " நான் உங்களை சுவிசேஷத்தினாலே விசுவாசிகளாக்கினேன் என்பதாகும் " (பார்க்க 1 யோவான் 5:1).

ஜனங்கள் சுவிசேஷத்தினாலே பிறப்பிக்கப்பட்டிருந்தால் அல்லது விசுவாசிகளாக்கப்பட்டிருந்தால், சுவிசேஷமல்லாமல், பரிசுத்த ஆவியானவரின் நேரடி செயல்பாட்டினால் அவர்கள் விசுவாசிகளாக்கப்படுவதில்லை. "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தி னாலே வரும் " (ரோமர் 10:17).

புதிய ஏற்பாடு முழுவதிலும் பார்த்தாலும் கூட அங்கே ஒருவர் சுவிசேஷமல்லாமல் விசுவாசியாகி கிறிஸ்துவினிடத்தில் மனமாற்றமடைந் ததாக எந்த ஒரு சம்பவமும் பதிவு செய்யப்படவில்லை. ஏனென்றால், ரோமர் 1:16-ல் பவுல் சொல்வதுபோல் " கிறிஸ்துவின் சுவிசேஷம் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது ".

இயேசு கிறிஸ்து பிரதான கட்டளையை தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு கொடுத்த போது " நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் " என்று சொன்னார் (மாற்கு 16:15,16).

பிரதானக் கட்டளையின் கீழ் பிரசங்கிக்கப்பட்ட முதல் சுவிசேஷப் பிரசங்கத்தில், அப்போஸ்தலனாகிய பேதுரு ஆவியானவர் தனக்குத் தந்தருளின வரத்தின்படியே (அப். 2:4) சந்தேகமின்றி, மிகத் தெளிவாக இவ்விதமாகச் சொன்னார். " நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் " என்று (அப். 2:38).



## சிரிக்க சிந்திக்க



**கணவனும், மனைவியும் காரில் சென்று கொண்டிருக்கும்போது பயங்கரமான வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் பிறகு, வெகுதூரம் அந்த கார் சென்றது. ஆனாலும், அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை. கடைசியாக, கணவன் வயல்வெளியில் நின்று கொண்டிருந்த ஒரு கோவேறு கழுதையைக்காட்டி மனைவியிடம் "இவைகளெல்லாம் உனக்கு உறவு முறையா?" என்று கேட்டார்.**

**அதற்கு மனைவி " ஆம் " திருமணத்தால் இப்படி ஒரு உறவு உண்டானது என்றாள் எரிச்சலாக.**

இரட்சிப்பு

# இதோ சீக்கிரமாய் வருகிறேன்

**Bro. Daniel Durairajan**

**வெளி. 22:12,13**

" இதோ சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது ".

நான் " *அல்பாவும்* (Alpha) *ஓமேகாவுமாயிருக்கிறேன்* (Omega). *ஆதியும் அந்தமும், முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறேன்* "

ஆல்பா - ஓமேகா என்பது Alphabetic Beginning and End. அதன் பொருள், மனித சமுதாயத்தின் A to Z வரை எல்லாமே இயேசுதான்.

ஆகவே, நாம் கிறிஸ்துவை சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆண்டவர் இயேசு வாழ்ந்திருந்த நாட்களில் அவரிடம் ஒரு ஐசுவரியமான வாலிபன் (மத். 19:16-22) வந்தான், வந்து நல்ல போதாகரே! நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான்? " ..... நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் " என்றார். இவைகளை யெல்லாம் என் சிறு வயது முதல் கைக் கொண்டிருக்கிறேன் என்றார். " இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான் ....." (வசனம் 22). அதற்கு இயேசு ".... உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்கு கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்று என்றார். இதைக் கேட்ட பொழுது அவன் துக்கமடைந்தவனாய் போய் விட்டான்.

இந்த காரியத்தில் இவன் இயேசுவை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இரண்டாவது, சின்ன வயதிலிருந்தே நான் ஒரு கிறிஸ்தவன் என்றான் *(எங்க அப்பா கிறிஸ்தவர் அப்பாவோடே அப்பா கிறிஸ்தவர் பரம்பரை கிறிஸ்தவர் என்றான். தவறு)* மூன்றாவது, இவனால் விடமுடியாத சில ஆஸ்திகள் இவனிடமிருந்தது. " *நாம் கூட சில பாவங்களை அந்தரங்கமாக, ஆஸ்தியைப் போல பாதுகாத்து வருவோம். முடிவு அல்லது விளைவு துக்கமானதாகத்தானிருக்கும்* ".

1 இந்த வார்த்தை கிறிஸ்துவினுடைய நித்தியத்தைக் குறிக்கிறது (The Enternity of Jesus Christ)

கிறிஸ்துவானவர் ஆரம்பமானவரும், முடிவுமானவருமாயிருக்கிறார். அவரே முதன்மையானவர் (யோவான் 1:1,4; கொலோ. 1:18). " ....எல்லாவற்றிற்கும் முதல்வராயிருக்கும்படி மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (ஏசா. 44:6) நான் முந்தினவரும், நான் பிந்தினவரும் தானே.... (யோவான் 8:58). ஆபிரகாமுக்கு முந்தினவர் என்று அவரே சொல்லுகிறார்.

எபிரெய நிருபத்தில் அடிக்கடி ஒரு வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது " என்றென்றைக்கும் " அல்லது " நித்தியம் " என்பதே! இந்நூல் தங்களுடைய தேவாலயத்தை தங்களுடைய (Temple), புனித நகரத்தை (Jerusalem) தங்களுடைய ஆசாரியத்துவத்தை, பலி செலுத்தும் முறைமையினை விடாமல் பற்றிக் கொண்டிருந்த மக்களுக்கு எழுதப்பட்டது. இவைகள் நித்தியமானவைகளல்ல. இந்த நிருபம் எழுதப்பட்ட கொஞ்ச நாட்களுக்குப் பிறகு " *தேவாலயம், எருசலேம், பலிபீடங்கள் யாவும்* " அழிக்கப்பட்டது.

ஆகவே, நாம் " அழிவுள்ளவைகள் " மீது நம்முடைய " ஜீவனை " அமைக்க வேண்டும்.

கிறிஸ்துவைப் பற்றி எழுதும்போது எபி. 1:8ல், சிங்காசனம் "நித்தியமானது" எபி. 5:6ல் " என்றென்றைக்கும் ஆசாரியர் எபி. 10:14ல் மாறாதவராயிருக்கிறார் " என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவினால் மாத்திரமே நமக்கு என்றென்றுமான ஒரு மீட்பு இருக்கிறது என்று நம்புகிறோம். ஏனெனில், அவர் "என்றென்றுமானவர் " அவர் நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர்.

## 2. இந்த வார்த்தை கிறிஸ்துவினுடைய ஊழியத்தைக் குறிக்கிறது

கிறிஸ்துவினுடைய ஊழியத்தின் தன்மையை இந்த வார்த்தை வெளிப் படுத்துகிறது. நாம் *எழுத்துக்களைக்* கொண்டு என்ன செய்வோம்? எழுத்துக்களைக் கொண்டு வார்த்தைகளை அமைப்போம்.

இயேசு கிறிஸ்து வார்த்தையாக இருக்கிறார். ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனோடிருந்தது (யோவான் 1:1,4). மேலும் அந்த வார்த்தை யானது மாமிசத்தில் வெளிப்பட்டது (யோவான் 1:14).

தேவன், அவருடைய வார்த்தையை ஆரம்ப முதல் கிறஸ்து வரையில் முழுமையாகப் பேசியுள்ளார். (எபி. 1:1,3). இன்றைக்கும் பேசுகிறவராயிருக்கிறார் (எபி. 12:25) பேசுகிறவருக்கு நீங்கள் செவி கொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

இயேசுவானவர் தேவன் வெளிப்படுத்தக் கூடியவர். நாம் தேவனை அறிந்து கொள்ள வேண்டுமானால் கிறிஸ்துவை அறிந்து கொள்ள வேண்டும் (யோவான் 17:3,) ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்.

இயற்கை காட்சிகளோ, திடீர் உணர்வுகளோ தேவனை வெளிப்படுத்தாது. அவருடைய (இயேசு) ஊழியம் அல்பாவும் ஒமேகாவுமாயிருக்கிறது. அவர் காணாமல் போனதை தேடினார் (லூக். 19:10) சபையின் பணியும் காணாமல் போனதைத் தேடி கண்டுபிடிக்க வேண்டுமென்பது.

சபையின் பணி மூன்று காரியங்களையுடையது (1) நீங்கள் (2) சேவை (3) இலக்கு

ஊழியம் செய்த சபைகள் நாள்தோறும் வளர்ந்தது. இன்றைக்கும் வளரும். (அப். 9:31; அப். 16:5) ஆனால், இயேசுவாகிய இந்த வார்த்தையை அநேகர் தள்ளினார். அப். 13:46ல் " .... நீங்களோ அதைத்தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறசாதி யாரிடத்தில் போகிறோம்.

" வேதாகமம் மகிவும் எளிமையானது " ஆனால் " கிரியை மிகவும் கடின மானது " " The Bible is very Simple but the work is too hard "

### 3. இந்த வார்த்தை கிறிஸ்துவின் தன்னிறைவைக் குறிக்கிறது (The Fullness of Jesus Christ)

தேவத்துவத்தின் பரிபூரணம் கிறிஸ்துவுக்குள் நிறைவாயிருக்கிறது (கொலோ. 2:9) அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள் (கொலோ. 2:10). எப்பொழுது உங்களுடைய வாழ்க்கையில் குறைவு ஏற்பட்டு தவிக்கின்றீர்களோ அப்பொழுதெல்லாம் இயேசுவினிடம் நிறைவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

என்னைப் பற்றி கவலையில்லையா? (லூக். 10:40) இது மனிதனுடைய கேள்வி.

அவர் உன்னை விசாரிக்கிறவராயிருக்கிறார் (1 பேதுரு 5:7)

இது தேவனுடைய பதில்!! உன்னுடைய அநேகக் கேள்விகளுக்கு இயேசுவே பதில்!! (Jesus Is Your Answer)

மனிதனுடைய குறைவுக்கு காரணம்

a) தேவனுடைய வார்த்தை அவனுடைய வாழ்க்கையில் ஒலிக்கவில்லை (ஏசா. 6:10)

b) மீட்பின் வாய்ப்பை இழந்து போகுதல் (எபி. 2:3,4)

c) ஒளியைப் பார்க்கிலும் இருளை அதிகமாக நேசித்தல் (யோவான் 3:19)

அழைப்பை அசட்டை செய்தல் அழிவுக்கு காரணமாகிவிடும். ஆகவே அவரை ஏற்றுக்கொள்வோம்.

விழித்திருக்கிறவன் மற்றொருவனை விழிக்கச் செய்வான். இரண்டாவது, விழித்தவன் தன் அடுத்த வீட்டு சகோதரனை விழிக்கச் செய்வான்.

மூன்றாவதாக, விழித்தவன் அந்த முழு இடத்தையே கலங்கடித்து அந்த பட்டணத்தில் எழுச்சியை உண்டாக்குவான்; இப்படி எழுப்பப்பட்ட பலர் எழுச்சியை உண்டாக்கும்போது இறுதியில் அது மீதமுள்ள நம்மையும் எழுப்புகிறது!

தன் கண்களில் விடியலுடன் விழிப்பவன் பெருகுகிறான்.

# நீங்கள் மறுபடியும் பிறந்து விட்டீர்களா? இல்லையென்றால், ஏன் இல்லை?

# *Have You Been Born Again? If Not, Why Not?*

*George Funk*

" இப்பொழுது நீ தாமதிக்கிற தென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ் நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு " (அப். 22:16). வாழ்க்கை யில் மிக முக்கியமான, வாழ்க்கையை யே மாற்றுகிற ஒரு முடிவை உங்கள் வாழ்நாளில் எடுப்பீர்கள் என்று உணர்கிறீர்களா?

வாழ்க்கைப் பிரச்சனைகளுக் கான பதில் இயேசு கிறிஸ்துவில் இருக்கிறது. ஆனால், பல நூற்றாண்டு களாக மனிதன் தன் விருப்பப்படி வாழ்க்கைக்கு விடை காண முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறான். ஆனால், தேவனில்லாமல் மற்றெல்லாத் தீர்வுகளும் தற்காலிகமானதும், வெறுமையானதாகவும் இருக்கிறது.

" நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் " (யோவான் 14:6) என்று இயேசு சொன்னார்.

நண்பர்களே, இயேசுதான் வழி! அவர் மூலமாக தேவன் நமக்கு வாக்குத் தத்தம் செய்திருக்கிற காரியங்களை கவனியுங்கள்;

1. " இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக் கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின " (2 கொரி. 5:17).
2. " உங்களுக்கு நித்திய ஜீவன் உண் டென்று நீங்கள் அறியவும், தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன் " (1 யோவான் 5:13).
3. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத் தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். குமாரனாகிய அவருக்குள் அவருடைய இரத்தத்தி னாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலோ. 1:13,14).

நாம் புதிய சிருஷ்டிகளாயிருக் கிறோம், நமக்கு நித்திய ஜீவன் உண்டு, நமக்குப் பாவமன்னிப்பு உண்டு, நாம் அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்குள்

உட்படுத்தப்பட்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றிருக்கிறோம் (அப். 2:38) போன்ற ஆசீர்வாதங்களையெல்லாம் உணர்ந்து பார்ப்பதும், அடையாளங் கண்டு கொள்வதும் பரவசமூட்டுகிறதாக இருக்கிறதல்லவா? இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும்? விசுவாசிக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இந்த முழு உலகத்திற்கும் தேவனுடைய திட்டம் இரட்சிப்புதான் (1 தீமோ. 2:4). எல்லோரும் மனந்திரும்பி இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

தண்ணீர் ஞானஸ்நானமானது ஒரு மனந்திரும்பிய பாவி கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு அவரோடு கூட உயிர்த்தெழுவதை (மறுபடியும் பிறப்பதை) அடையாளப்படுத்துகிறது (யோவான் 3:5). ஞானஸ்நானத்திற்குப் பிறகு பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின.

நீங்கள் இன்னும் தண்ணீர் ஞானஸ்நானம் பெறவில்லையென்றால் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற அந்த ஆரம்ப கால விசுவாசிகளின் மாதிரியைப் பின்பற்றி மறுபடியும் பிறக்கும்படியாக நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன் (கலா. 3:27). ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவை நாம் தரித்துக்கொள்கிறோம். அவரோடு கூட நாம் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுகிறோம். அதன் மூலம் தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறோம். ஓ! அவருடைய பிள்ளைகள் எவ்வளவு முக்கியமானவர்கள்!.

## திருமுழுக்கு

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். (ரோமர் 6:4,5)

# மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்

## Baptism is for the Dead

*Francies David*

உலக முழுவதிலும் ஞானஸ்நானம் என்பது முரண்பாடான ஒரு பாடமாகும். இந்தக் கட்டளையைப் பற்றி பலர் குழப்பத்தில் உள்ளார்கள். ஞானஸ்நானமானது தேவனிடத்திலிருந்து வந்த கட்டளை என்பதாலும், கிறிஸ்துவின் பிரதானக் கட்டளையின் ஒரு பகுதியாயிருப்பதாலும், அது லேசாக எடுத்துக் கொள்ளப்படக்கூடாது. இருந்த போதிலும் பெரும்பாலான மக்கள் அது இரட்சிப்பிற்கு அவசியமில்லை என்று நினைக்கிறார்கள். பல மத அமைப்புகள் ஒருவர் ஞானஸ்நானமில்லாமல் இரட்சிக்கப்பட முடியும் என்று பிரசங்கிக்கவும், போதிக்கவும் செய்கிறார்கள்.

இந்த முக்கியமான பாடத்தைப் பற்றிய உண்மையைப் புரிந்து கொள்ள நாம் வேத வாக்கியங்களை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்க வேண் டும் (2 தீமோத். 2:15). ஜனங்கள் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் பார்க்காத காரணத்தால் முரண்படுவது போல் தெரிகிற வசனங்களையும் தங்கள் பிரசங்கிமார்களால் என்ன அவர்களுக்கு போதிக்கப்பட்டதோ அதோடு இசைவாக இல்லாத வசனங்களை அவர்கள் கண்டு கொள்ளாமல் இருப்பது நமக்கு அதிக வருத்தத்தை அளிக்கிறது. வேதாகமம் ஒருபோதும் தனக்குத்தானே முரண்படுவதில்லை; வேதாகமம் ஒரு விஷயத்தைப் பற்றி ஓரிடத்தில் எதைச் சொல்கிறதோ அதே விஷயத்தைப் பற்றி வேறொரு இடத்தில் என்ன சொல்கிறதோ அவைகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். வேதாகமம் இரட்சிப்பிற்கு வித்தியாசமான வழிகள் உண்டென்றோ அல்லது ஞானஸ்நானத்தைப் பற்றி வித்தியாச மான உபதேசங்களையோ ஒருபோதும் போதிப்பதில்லை.

நாம் தேவனுடைய வார்த்தைக்கு திரும்பும் போது, " எல்லோரும் பாவஞ் செய்து தேவ மகிமை அற்றவர்களாகி " என்று எழுதினதை நாம் காண முடியும் (ரோமர் 3:23). " பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் " என்று யோவான் சொல்கிறார் (1 யோவான் 3:4). மனிதன் பாவம் செய்திருக்கிறபடியால், தேவனால் மனிதனோடு ஐக்கியம் கொள்ள முடியாது. பாவம் தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கிறது.

ஒருவர் பாவமன்னிப்பைப் பெற ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று வேத வசனங்கள் நமக்குச் சொல்கிறது (மாற்கு 16:16; அப். 2:38). ஆனால், நாம் காண விரும்பும் முக்கியமான காரியம் மரித்தவர்களுக்கான ஞானஸ்நானமாகும்.

ஆம், ஞானஸ்நானம் தாங்கள் பாவங்களில் மரித்துப் போனவர்களுக்கு ஒரு பாவி இயேசுவிலுள்ள தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி தண்ணீர் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படும்போது, அவர் தன்னுடைய பாவத்திற்கு மரிக்கிறார். பாவத்தில் மரித்துப்போயிருந்த பழைய மனுஷன் இப்போது பாவத்திற்கு மரித்துவிட்டான். " மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" என்று பவுல் மறுபடியும் சொல்கிறார் (ரோமர் 6:4). ஞானஸ்நானத்தில் நாம் பாவத்திற்கு அடிமைகளாக இருக்காதபடி பாவ சரீரம் முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது.

மேலும், நாம் இதே அதிகாரம் 7,8 வசனங்களை வாசிக்கும்போது "மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே " என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் கிறிஸ்துவோடு மரித்தால், உயிர்த்தெழுதலிலும் அவரோடு பிழைத்துமிருப்பான். 11வது வசனத்திற்கு நாம் வரும்போது நாம் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ள வேண்டும் என்று பவுல் விளக்குவதை நாம் காண முடியும்.

1 கொரி. 15:29-ல் பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள சகோதரர்களிடம் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார். அப்போது கேள்வியொன்றை கேட்கிறாார்; " மேலும், மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்? மரித்துப்போன ஒருவன், பாவங்களில் மரித்துப்போன ஒருவன் ஞானஸ்நானத்தின் மையப் பொருளாக இருக்கிறான். இந்த மரித்துப் போன நபர் ஞானஸ்நான கட்டளைக்குக் கீழ்ப்படியும்போது, புதிய மனிதனாக தண்ணீரிலிருந்து வெளியே வருகிறார். அந்த நபருடைய பழைய மனிதன் அல்லது பழைய வாழ்க்கை முறை இப்போது அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறது. அவர் இயேசுவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறார் (2 கொரி. 5:17).

மனிதர்களைப் பொறுத்தவரை ஆவிக்குரிய மரணம் என்பது சரீர மரணத்தைப் போல் உண்மையானதாகவோ அல்லது பயங்கரமான ஒன்றாகவோ கருதப்படுவதில்லை. ஆனால், தேவன் காண்பது போல் மரித்த ஆத்துமாக்களாக நம்மால் பார்க்க முடிந்தால் மரித்தவர்கள் என்று மிகத் தெளிவாக 1 கொரி. 15:29ல் விளக்கப் பட்டுள்ள வார்த்தையைப் புரிந்து கொள்வதில் நமக்குப் பிரச்சினையும் இருக்காது.

நண்பரே! நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுவீட்டீர்களா? இல்லையென்றால், தேவ வாக்கியங்கள் என்ன சொல்கிறதோ அதைப்படித்து அதன்படி செயல்படவேண்டும். உங்கள் பழைய பாவ வாழ்க்கைக்கு மரிக்க வேண்டும், அப்போது இயேசு கிறிஸ்துவுக்குள் உங்கள் பாவங்கள் கழுவப் பட்டது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

" இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் (அப். 22:16).



# சீமோன் பேதுரு

## Simon Peter

*Ray Hawk*

சீமோன் பேதுரு தன்னுடைய சகோதரனாகிய அந்திரேயா மற்றும் தன்னுடைய கூட்டாளிகளான யாக்கோபு மற்றும் யோவானுடன் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒரு கலிலேய மீனவர். இயேசு அவரை கேபா என்றழைத்தார். அதன் பொருள் கல் என்பதாகும். அப்போஸ்தலர்கள் பெயர்ப்பட்டியலில் பேதுருவின் பெயர் தான் முதலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யோவான் இயேசுவுக்கு மிக நெருக்கமானவராக இருந்தாலும் கூட பல நிலைகளில் பேதுரு தான் எல்லா வற்றிலும் முன்னோடியாக இருந்தார். கேள்விகள் கேட்பது என்று வரும் போது அவர் ஒருபோதும் வெட்கப்படவில்லை. " ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழு தரம் மட்டுமோ " என்று கேட்டான். அதேபோல் தான் நினைத்தது சரி என்று பட்டபோது இயேசுவை கடிந்து கொள்ளவும் அவர் தயங்கவில்லை. "இல்லை ஆண்டவரே! உமக்கு ஒரு போதும் அப்படி சம்பவிக்கக்கூடாது" என்று சொன்னார். பேதுரு தன்னுடைய விசுவாசத்தில் மிகத் தீவிரமாக இருந் தார். அவருடைய நிலைப்பாடு குறித்து யாரும் கேள்விக் கேட்க முடியாத அளவில் இருந்தது. " நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் " என்று பகிரங்க மாக அறிவித்தார்.

இயேசுவைப் பற்றி மற்றவர்கள் தகவல் அறிய விரும்பினால், அவர்கள் வழக்கமாக பேதுருவினிடத்தில் தான் சென்றார்கள். இயேசு அப்போஸ்தலர் களிடத்தில் கேள்விகள் கேட்டபோது,

வழக்கமாக பேதுருதான் முதலில் பதிலளிப்பார். அவர் கேள்வி கேட்கவும் பயப்படவில்லை. பதிலைப் பெற வலியுறுத்துவதிலும் பயப்படவில்லை. இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினாமே; எங்களுக்கு என்ன கிடைக்கும்? அவர் இயேசுவை கனப்படுத்த விரும்பி பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறார். ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம். பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் அவர் இயேசுவுக்கு மிக நெருக்கமான மூவரில் ஒருவராக இருந்தார். இருந்தபோதிலும், சீமோன் பேதுரு மனிதன் தானே.

பேதுரு எத்தனையோ விசுவாச உறுதியான அறிக்கைகளை விட்டிருந்தாலும் அவருடைய இருதயம் தவறான இடத்தில் இருந்ததாக இயேசு சொன்னார். " எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் " என்றார். தோட்டத்தில், இயேசு தாம் ஜெபித்த போது, தம்முடைய சீஷர்களை விழித்திருக்கும்படிச் சொன்னார். ஆனால், சீமோன் பேதுரு மற்ற சீஷர்களோடு சேர்ந்து தூங்கிவிட்டார். ஆயினும், இயேசு பேதுருவைப் பார்த்துதான், சீமோனே நீயும் உறங்குகிறாயா? ஒரு மணிநேரம் தூங்காமல் விழித்திக்கக் கூடாதா? என்று கேட்டார். மேலும், இயேசு பேதுருவிடம் சேவல் கூவுவதற்கு முன்பு நீ என்னை மூன்று முறை மறுதலிப்பாய் என்று சொன்னார். இயேசு சொன்ன அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியதை உணர்ந்த பேதுரு வெளியே போய் " மனங்கசந்து அழுதான் ".

இயேசு பேதுருவின் தலைமைத்துவப் பண்புகளை அடையாளம் கண்டு கொண்டார். இயேசு பேதுருவிடம் " என் ஆடுகளை மேய்ப்பாக " என்றார். அவர் மிகவும் சிக்கலான மனிதராக இருந்தார், எப்படியென்றால், ஒருமுறை தன் கலாச்சாரத்திற்கு எதிராக சுவிசேஷத்தை அறிவிக்க ஒரு புறஜாதியின் வீட்டிற்குச் செல்ல அவர் பயப்படவில்லை. அதன் காரணமாக சபையிலிருந்து சிலரால் விமர்சனங்கள் வந்தாலும் அதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. இருந்த போதிலும், மற்றுமொரு சந்தர்ப்பத்தில் ஏதாவது சொல்லிவிடுவார்களோ என்ற பயத்தில் புறஜாதி கிறிஸ்தவர்களோடு சகவாசம் வைத்துக் கொள்ள மறுத்தார்.

சிலர் பேதுரு சராசரி மனிதனை விட மேலானவர். அவர் தேவனுக்குச் சமமானவர். எனவே, நாம் கொர்நேலியுவைப் போல் பேதுருவைப் பணிந்து கொள்ள வேண்டும் என்று சிந்திக்க தூண்டப்படுகிறார்கள். இருந்த போதிலும், பேதுரு அந்த நூற்றுக்கதிபதிக்கு என்ன சொன்னாரோ அதைத் தான் நமக்கும் சொல்வார். " எழுந்திரும், நானும் ஒரு மனுஷன் தான் ".

சுவிசேஷகனாகவும், அப்போஸ்தலனாகவும் மாறிய இந்த மீனவரைப் பார்த்து நாம் ஆச்சரியப்பட்டே ஆக வேண்டும். பேதுரு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பிரசங்கித்திருந்தாலும் அவருக்கு விசேஷித்த பேச்சுத் திறமையோ அல்லது தைரியமாயிருப்பதற்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையோ கொடுக்கப்படவில்லை. அவர்

பவுலைப் போல் இவ்விதமாகச் சொல்ல முடியும். " சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப் போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும், பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது " (1 கொரி. 2:1,5).

பேதுரு உள்ளூர் ஆளாக இருந்தபடியால் வெற்றியுள்ள பிரசங்கியாக எல்லோராலும் அறியப்பட்டார் என்று ஒருவர் சொல்லலாம். ஆனால், யார் எப்படி சொன்னாலும் அவர் இயேசுவுக்காக வாழாதிருந்தால் பேதுரு யாரும் அறிந்திராத மீனவராகத்தான் இருந்திருப்பார். இயேசு துணிச்சலாக பேசுகிற ஒரு மனிதனை இயேசு ஆத்துமாக்களை போஷிப்பவராக மாற்றினார். பேதுரு என்னவாகவெல்லாம் ஆனாரோ அதற்கெல்லாம் காரணம் இயேசு அவருடைய வாழ்க்கையில் பிரவேசித்தது தான். இயேசுவால் தன்னுடைய வாழ்க்கையில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும் என்று அடையாளங் கண்டு கொள்ளும் ஞானத்தைப் பேதுரு பெற்றிருந்தார். நீங்கள் அதைப் பெற்றிருக்கிறீர்களா?. ❀

## ஆனால், என்னால் எதையும் செய்ய முடியாது!

உங்களால் ரொட்டி சுட முடியுமா? உங்களால் கேக் செய்ய முடியுமா?
உங்களால் ஏரிக்கரையில் மீன் பிடிக்க முடியுமா?
உங்களால் பாட்டுப்பாட முடியுமா? உங்களால் ஜெபிக்க முடியுமா?
உங்களால் சவரம் செய்ய முடியுமா? உங்களால் முடிவெட்ட முடியுமா?

உங்களால் கணினியை பயன்படுத்த முடியுமா? உங்கள் நண்பர் நன்றாக உணரத்தக்க அவருக்கு ஒரு கடிதத்தை உங்களால் எழுத முடியுமா?
உங்களால் நாயை நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்ல முடியுமா?
உங்களால் புத்தகத்தை வாசிக்க முடியுமா?

நம்மெல்லோராலும் பிரசங்கிக்க முடியாது. ஆனால், எல்லோராலும் ஊழியம் செய்ய முடியும். அதற்கு தேவையெல்லாம் கொஞ்சம் சிந்தையும், கொஞ்சம் தைரியமும் தான் எனவே, உங்கள் அரையைக் கட்டிக்கொண்டு களத்தில் குதியுங்கள்.
இன்று தேவன் உங்களோடு என்ன செய்கிறார் என்று பாருங்கள்!



# பாவம் இந்த மோசே?

## Poor Moses?

*Dalton Key*

இலட்சக்கணக்கான மக்களின் துணிச்சலான தலைவனாகிய மோசே யை தேவன் தம்முடைய ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடு விக்கும்படியாகத் தெரிந்து கொண்டார். நியாயப் பிரமாணத்தைக் கொடுத்த தினால் அதிகமாக மதிக்கப்பட்டார். இப்படிப்பட்ட மோசே தன் வாழ்க்கையில் நிராகரிக்கப்பட்டு துக்கத்துடன் வாழ்ந் தார். அவருடைய மனபாரங்கள் எகிப்தி லேயே தொடங்கி தன்னுடைய 120 வருட வாழ்க்கை முழுவதும் தொடர்ந்தது.

அமலேக்கியர் தாக்கியபோது பார்வோனிடமிருந்து இஸ்ரவேலர் களைத் தப்புவித்து அவர்களை இப்போது

தான் வெற்றிகரமாக வழி நடத்தினார் மோசே. எதோமியர்கள், மோவாபியர்கள், அம்மோனியர்கள், எமோரியர்கள், மீதியானியர்கள் ஆகியோர் சேர்ந்து இஸ்ரவேலர்கள் கானானுக்குப் பயணித்தபோது அவர்களை வழி மறித்தனர்.

அவருடைய சொந்த ஜனங்களும் அவருக்கு உதவியாயிருக்கவில்லை. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தேசம் அற்புதங்களாலும், அதிசயத்தாலும் பிரம்மிப்படைந்து திளைத்துப் போயிருந்தாலும், அவர்கள் தொடர்ச்சியாக இடைவிடாமல் தேவனுக்கு விரோதமாகவும், அவருடைய தாசனாகிய மோசேக்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள். எகிப்தை விட்டு வெளியேறுவதற்கு முன்பாக அவர்கள் ஆரம்பித்த முறுமுறுப்பை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமிக்கு அருகில் செல்லும் வரை தொடர்ந்தார்கள். இன்னும் காரியங்களை மோசமாக்க கோராகு தாத்தன், மற்றும் அபிராம் போன்றோர் மோசேயை தலைவன் என்னும் பொறுப்பிலிருந்து கவிழ்த்துப் போட முயற்சித்தார்கள். பாவ வனாந்திரமாகிய மாராவிலும், ரெபிதீமிலும், மேரிபா மற்றும் காதேசிலும் இஸ்ரவேல் புத்திரர் முறுமுறுக்கிறவர்களாக அல்லது மோசேயின் தலைமையை அபகரிக்க முயற்சிக்கிறவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர். ஒரு கட்டத்தில் ஜனங்கள் மோசேயைக் கல்லெறிந்துக் கொல்ல ஆயத்தமாயிருந்தார்கள்.

அவருக்கு நம்பிக்கையான தலைவர்கள் பல வேளைகளில் நம்பத்தகாதவர்களாக நடந்து உபகாரமாக இல்லாமல் அவருக்கு உபத்திரவமாக இருந்தனர். மோசே சீனாய் மலைக்கு கர்த்தரிடமிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொள்ளப் போனபோது அந்த மலை அடிவாரத்திலேயே ஆரோன் பொற்கன்றுகுட்டியை உண்டாக்கினார். மிரியாமும், ஆரோனும், ஆஸ்ரோத்தில் தேவனால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைப் பறிக்க முயற்சித்தனர். கானான் தேசத்திற்கு வேவு பார்க்க அனுப்பப்பட்ட பன்னிரெண்டு வேவுகாரரில் பத்துபேர் கலகக்காரர்களான இந்த இஸ்ரவேலர்களைக் கானான் சேத்திற்குள் பிரவேசிக்க மறுக்கும்படி செய்தனர். ஆம், மோசேக்கு பாடுகளுக்குப் பஞ்சமில்லாதிருந்தது. இருந்தபோதிலும், முறுமுறுப்பு என்னும் குப்பையிலிருந்தும் கலகமென்னும் மனவேதனையிலிருந்து மோசே மீண்டு மிகச்சிறந்த மனிதனாக எழுந்தார். " மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாயிருந்தான் " ஆனால், ஒருபோதும் பலவீனமாயிருக்கவில்லை. அவர் எதிர்ப்புகளின் மத்தியில் சாந்தத்தோடு உறுதியாக நின்றார். அவருடைய வாழ்க்கை பவுலின் வார்த்தைகளை நிருபித்தன "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம் " (ரோமர் 5:3,4).

அடுத்த முறை நீங்கள் உங்கள் பாடுகளைக் குறித்து முறுமுறுக்க சோதிக்கப்படும்போதும் இந்த அப்பாவியான மோசேயை நினைத்துக் கொள்ளுங்கள். அவருடைய உபத்திரவங்கள் அவரை முன்பை விட உறுதியானவராகவும், சிறந்தவராகவும் ஆக்கியது. அதே விதமாக உங்களுக்கும் நடக்கக் கூடும்.

வேத பகுதி பாடங்கள்

# பாரம் சுமத்தல்

## Burden Bearing

*Bruck Buckley*

" ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (கலா. 6:2) அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே " (கலா. 6:5).

பவுல் இரட்டைப் பேச்சில் ஈடுபட்டிருக்கிறாரா? பதில் இல்லை என்பதாகும். பாரங்கள் என்று கலா 6:2 மற்றும் 5ஆம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகள் வித்தியாசமான சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படும் இரண்டு கிரேக்க பதங்களிலிருந்து வருகின்றன. 2ஆம் வசனத்தில் பயன்படுத்தப்படும் பாரம் ஜனாங்களால் தாங்க முடியாத அதிக பாரத்தைக் குறிக்கிறது. அவர்களுக்கு உதவி இல்லையென்றால், மூழ்கிவிடுவார்கள்...ஆனால், இது அவர்களிடமிருந்து பாரத்தை முழுமையாக எடுத்துப்போடுவது என்று பொருள்படாது. மாறாக, அவர்களுடைய பாரத்தில் கைகொடுப்பது அல்லது உதவிச் செய்தல் என்று தான் பொருள்படும்.

5ஆம் வசனத்தில் இடம் பெற்றுள்ள பாரம் ஓர் இராணுவ வீரன் சுமக்கும் பாரத்தைக் குறிக்கிறது. அந்த பாரம் எப்போதுமே சுமக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொடுக்க முடியாது. இன்று நமக்கு பல வகையான பாரங்கள் உண்டு அவைகளை நாம் வேறு யாருக்கும் மாற்றிக் கொடுக்க முடியாது. அவரவர் தாங்கிக் கொள்ள வேண்டிய சரீரப்பிரகாரமான பாரங்களும், இயலாமைகளும் உண்டு. முடிந்தால் வேதனை நீங்க சில மருத்துவ உதவிகளை நாடலாம், ஆனால், நீண்ட காலத்திற்கு முறுமுறுப்பில்லாமல் நாம் தாங்க வேண்டும். சரீர ரீதியாக அல்லாமல் வேறுசில பாரங்களும் உண்டு. கிறிஸ்தவம் தாங்க முடியாத படி ஒருவர் மீது பாரத்தை வைக்கிறது. நமக்காக வேறொருவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய முடியாது. அது நம்முடைய பாரமாயிருக்கிறது. ஏற்கனவே மரித்த ஒருவருக்காக மற்றொருவர் ஞானஸ்நானம் பெறுவது வேத வாக்கியங்களின் படியான ஓர் உபதேசம் அல்ல.

நம் பாவங்கள் மன்னிக்கப்படலாம் ஆனால், அதன் விளைவுகள் இன்னும் பாரமாகவே இருக்கும். பவுலுக்கு மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அது அவருக்கு பாரமாகவே இருந்தது. பவுல் தன்னுடைய கடந்த காலத்தில் அறியாமையினாலும், அவிசுவாசத்தினாலும் சபையைத் துன்பப்படுத்தியதாகவும், தேவ தூஷணம் செய்ததாகவும் சொன்னார்.

ஆனால், இவை எல்லாவற்றிலும் சிறப்பு என்னவென்றால் நாம் நம்முடைய பாரங்களை சுமந்து திரியும் போது, அதே நேரத்தில் மற்றவர்களுடைய பாரத்தை எப்படி சுமப்பது என்பதை கற்றுக்கொண்டு அப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுகிறோம் (கலா. 6:2). அப்போது நம்முடைய பாரங்கள் சுமப்பதற்கு இலகுவாகவும், எளிதாகவும் மாறுகிறது.

# மனித இனத்திற்கு தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்

## God's Spiritual Blessings to Mankind

*Don L. Norwood*

சங்கீதம் 23

**தா**வீதின் இந்த சங்கீதம் தேவனுக்கும் அவருடைய உண்மையுள்ள ஆவிக்குரிய பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள ஆவிக்குரிய உறவை வெளிப் படுத்தும் அழகான, எளிமையான வார்த்தைகளை உள்ளடக்கியது. இதை நாம் ஜாக்கிரதையாக படிப்போம்.

" கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன் "



ஒரு கிறிஸ்தவனுக்கு கிறிஸ்து கர்த்தராயிருக்கிறார் (ரோமர் 10 : 8-10; அப். 2:36) அவரே கிறிஸ்தவனுடைய ஆத்துமாவின் கண்காணியும், மேய்ப்பருமாயிருக்கிறார் (1 பேதுரு 2:25). " நான் தாழ்ச்சியடையேன் " என்னும் வாக்கியம் ஒரு உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையாக ஒருவர் தேவையான எல்லா ஆவிக்குரிய மற்றும் சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்கிறார் (மத். 6:24,33; 1 தீமோத். 6:6-12) என்னும் கருத்தை வெளிப் படுத்துகிறது.

" அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து "

புல்வெளியில் ஆடுகள் மற்றும் மேய்ப்பன் என்னும் சூழ்நிலையில் இவ்வகையான மொழிநடை நாம் நம்முடைய மேய்ப்பனைப் பின்பற்றி அவருடைய சித்தத்தைச் செய்யும் போது இவ்வுலகின் பாடுகளிலிருந்தும், கவலைகளிலிருந்தும் நம் ஆத்துமாக்களுக்கு இளைப் பாறுதல் கிடைக்கும் என்பது இதன் உட்பொருளாகும்.

" அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு போய் விடுகிறார் "

இதன் உட்பொருள் கர்த்தர் நம்மை ஸ்திரத்தன்மையும், பாதுகாப்புமான வாழ்க்கைப் பாதையில் வழி நடத்துகிறார் என்பதாகும் (பிலிப். 4:4-8; கலா. 5:22,23).

" தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதையில் நடத்துகிறார் "

ஒருவர் மறுபடியும் பிறந்த பிறகு, கிறிஸ்துவின் போதனைகளை கற்றுக் கொண்டு தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உண்மையாகப் பின்பற்ற வேண்டும் (மத். 28:18-20; 2 பேதுரு 1:1-14; 2 தீமோத். 3:16,17).

" நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் "

சரீர மரணம் நம்மெல்லோருக்கும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது (எபி. 9:27); ரோமர் 5:12). ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவன் உறுதியான தீர்மானத்துடன் மரணத்தை எதிர்கொண்டு அதுசம்மந்தமான கர்த்தருடைய தீர்மானங்களை விசுவாசிக்க முடியும். (1 தெச. 4:13,18; வெளி. 14:13). கோலும், தடியும் ஒரு மேய்ப்பனால் வழிதப்பிப் போன ஆடுகளைப் பிடித்து அவைகளை மறுபடியும் மந்தையில் சேர்க்க பயன்படுத்தப்பட்டன.

இது மரணத்திற்கான காரணத்தையும் அதற்காக எப்படி ஆயத்தமாவது என்பதையும் நமக்கு புரியச் செய்கிற தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது.

" என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி "

இங்கே ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற பந்தி என்பது தம்முடைய ஜனங்களோடு கர்த்தருடைய ஆவிக்குரிய ஐக்கியத்தைக் குறிக்கிறது (1 கொரி. 11:23-30; 1 கொரி. 10:16,17) இது ஜனங்களோடு கர்த்தருடைய ஆவிக்குரிய ஐக்கியத்தைக் குறிக்கிறது (மத். 6:33).

" நீர் என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர் "

எண்ணெயால் ஒருவருடைய தலையை அபிஷேகம் பண்ணுதல் என்பது கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய வியாதியில் இருக்கும் போது அவர்கள் மீது செலுத்தும் அக்கறையை அடையாளப்படுத்துகிறது (எரே. 8:22; 46:11).

" என் பாத்திரம் நிரம்பி வழிகிறது "

இது ஒரு தேவனுடைய பிள்ளைக்கு வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் தேவைக்கு அதிகமாக எல்லாம் கிடைப்பதை அடையாளப்படுத்துகிறது (யோவான் 10:10).

" என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் "

" துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும் " (சங். 32:10).

" நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் "

ஒரு கிறிஸ்தவன் மாம்சத்தில் வாழும்போது கூட தேவனுடைய மாபெரும் வீட்டில் அங்கமாயிருக்கிறான் (1 தீமோ. 3:15; 1 பேதுரு 2:5,9,10). கிறிஸ்தவனுக்கு பரலோகத்தில் ஒரு வீடு காத்துக் கொண்டிருக்கிறது (யோவான் 14:1,6; 1 பேதுரு 1:45).

# அருமையான உறுதிமொழிகள்

# Wonderful Assurances

*David Pharr*

**1 யோவான் 1:6–2:6**

ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் அறிந்தோ அறியாமலோ செய்யும் பாவங்களைக் குறித்து கவலைப்படுவதோ அல்லது பயப்படு வதோ வழக்கமானதுதான். இந்த பாடத்தில் நாம் தேவன் எப்படி நம் குறை களை, பாவங்களை மன்னிக்கின்றார் என்பதை நாம் காண உதவும் சில அருமையான வசனப் பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன.

**1 யோவான் 1:6,2:6**

இந்த வசனங்களையெல்லாம் ஜாக்கிரதையாக வாசித்த பிறகு, ஒவ்வொரு வசனத்திலிருந்தும் கீழ்க் காணும் உண்மைகளைக் காணுங்கள்.

**வசனம் 6**

இங்கே " நடை " என்பது ஒருவர் வாழும் வாழ்க்கையைக் குறிக்கிறது. இருளில் வாழ்வதைக் குறிக்கிறது. துணி கரமாகப் பாவத்தில் வாழ்ந்து கொண்டு, நான் தேவனோடு ஐக்கியப்பட்டிருக்கி றேன் என்று சொல்லிக் கொள்ளுகிறவன் மாயமாலம் பண்ணுகிறவனாயும், பொய்யனுமாயிருக்கிறான்.

**வசனம் 7**

ஒளியில் நடப்பது என்பதன் பொருள் என்ன? அதன் பொருள் தேவன் நமக்கு ஒளியாகக்காட்டியிருக்கிற வாழ்க் கைப் பாதையில் நடப்பது என்பதாகும் (சங். 19:105) தேவனுடைய வார்த்தை யால் வழிநடத்தப்படுகிற வாழ்க்கையை நாம் வாழும் போது ஐக்கியப்பட்டிருப் போம். கிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மைக் கழுவி சுத்திகரிக்கிறது. எனவே, இங்கே கருத்து என்ன வென்றால், ஒருவர் சிலவேளை களில் அறியாமையினாலோ, பலவீனங் களினாலோ இடறி விழுந்தாலும் அவரால் கிறிஸ்தவ வாழ்க்கையை (ஒளியில் நடத்தல்) வாழ முடியும்.

**வசனம் 8,10**

உண்மை என்னவென்றால் நாமெல்லோரும் பாவம் செய்கிறோம். முற்றிலும் பாவமற்ற வாழ்க்கையை யாரும் வாழ்வதில்லை. நாம் மாம்சத்தில் இருக்கும் வரை பலவீனங்களும், குறைபாடுகளும் நமக்கு இருக்கும். இந்தக் காரியத்தில் நாம் மற்ற கிறிஸ்தவர் களிடமிருந்து வேறுபட முடியாது. இந்த உண்மை தான் கிறிஸ்துவின் இரத்தத்தை நமக்கு மிகவும் அவசிமாக் குகிறது. அவர் அளிக்கும் மன்னிப்பு நமக்கு தொடர்ச்சியாகத் தேவைப்படு கிறது.

**வசனம் 9**

இந்த வசனம் நாம் பாவங்களைக் குறித்து என்ன செய்ய வேண்டுமென்று நமக்குச் சொல்கிறது. நம் பாவங்களை நாம் அறிக்கை செய்ய வேண்டும். சபைக்கு வெளியே இருக்கும் ஒருவர் முதலில் பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற வேண்டும். ஆனால், ஞானஸ்நானம் பெற்ற பிறகு நாம் பாவம் செய்தால் பாவம் மன்னிக்கப்பட அதை அறிக்கை செய்ய வேண்டும். நாம் பாவங்களை அறிக்கையிடும் போது தேவன் அவை களை மன்னிப்பது எவ்வளவு நிச்சயம் என்பதை கவனியுங்கள்.

**அதிகாரம் 2 வசனம்**

யோவான் இங்கே பாவம் ஒரு பொருட்டல்ல என்று நாம் நினைக்கத்தக்கதாக இவைகளை எழுதவில்லை. மாறாக, நாம் பாவம் செய்யாதபடிக்கு இவைகள் நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, பாவத்தை மேற்கொள்வதை நம் இலக்காக கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டது. ஒளியில் நடக்கும் எவரும் பாவம் செய்ய விரும்புவதில்லை. இப்போது பாவம் செய்துவிட்டு பின்பு எளிதாக மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறவன் ஒளியில் நடப்பதின் பொருளை உண்மையாகவே புரிந்து கொள்ளவில்லை.

**வசனம் 1,2**


இன்னும், நாம் பலவீனமாயிருக்கும் போது, நாம் சரியானதைச் செய்யத் தவறும்போது, நம்மை இரட்சிக்கும்படி இயேசு கிறிஸ்து தம் ஜீவனையே விட்டார். தேவன் மனந்திரும்பிய தம்முடைய பிள்ளைகளை மன்னிக்க ஒருபோதும் தவறுவதில்லை.

**வசனம் 3,6**

நமக்கும் தேவனுக்கும் சரியான உறவு இருக்கிறதென்பதை அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதினால் நாம் அறிந்து கொள்ளுகிறோம். நம் கீழ்ப்படிதல் பூரணமற்றது என்பதை நாம் ஒத்துக்கொண்டாலும் கூட, நாம் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோமா, துணிகரமான பாவங்களை நாம் விட்டு விட்டோமா, நாம் தேவனை உண்மையாக ஆராதிக்கிறோமா என்பதை கீழ்ப்படிதல் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

மேற்சொல்லப்பட்ட வசனங்களில் காணப்படும் உறுதிமொழிகளைச் சுருக்கி இவ்விதமாகச் சொல்ல முடியும். நீங்கள் கிறிஸ்தவரானதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ நீங்கள் முயற்சிக்கிறீர்கள். அதில் நீங்கள் அடிக்கடி தவறுவதும் உங்களுக்குத் தெரியும். ஆனால், நீங்கள் உங்கள் பாவங்களை தேவனிடத்திலும், சகோதரர்களிடத்திலும் அறிக்கையிடுகிறீர்கள். பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆகவே, தேவனுடைய கிருபையினாலும், இயேசு கிறிஸ்துவின் சுத்திகரிக்கும் இரத்தத்தின் வல்லமையினாலும், நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்கள் என்பதையும் அறிந்திருக்கிறீர்கள். மேலும், நீங்கள் அவருக்குள் வாழ்ந்து மரித்தால் பரலோகத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள்.


## சத்திய வழி




- ❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560 084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




- ❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- ❖ தமிழன் TV : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)
Srilanka all Asia Service



ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் :
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041


## கிருபையுள்ள வார்த்தை



- ❖ பேச்சாளர் : சகோ. பிலேமோன் ராஜா
- ❖ தமிழன் TV : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி
- ❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ்/English )
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை மற்றும் கைப்பிரதிகள்
- ❖ English Quaterly Magazine : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ J.C. School of Evangelism : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி

தொடர்புக்கு : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகம கல்வி

வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் **பல்வேறு தலைப்புகளில்** வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன **கைப்பிரதிகள் (Tracts)** வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| E.Z.S. ராஜநாயகம் : 98427 30382 | P.C. பிலேமோன் ராஜா : 92442 04420 |
| P.R. சுவாமி : 098440 70763 | B. அர்ஜுனன் : 94435 58041 |

## " சத்தியத்தின் குரல் " சந்தா விண்ணப்பம்

- ☐ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 (4 இதழ்கள்) (அ) ரூ. 200 (8 இதழ்கள்) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

- ☐ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ........................ காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

- ☐ " சத்தியத்தின் குரல் " நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

**கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி**


**E.Z.S. ராஜநாயகம்**

" சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழ்

288, தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385

E-mail : rajarichal@yahoo.co.in


பெயர் : ____________________

தெரு / ரோடு : ____________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ____________________